கல்கி

KALKI 10.8.97 ரூ. 4.00

விபத்தின்றி ஓட்ட சில டிப்ஸ்!

ஆண்டிமடம் ஆயுதக் கொள்ளை: ஆரம்பமா? முடிவா?

—நேரடி ரிப்போர்ட்



❑ நேரு இங்கே வந்த போது – சி. சுப்ரமணியம் ❑ நாற்காலி ஆசை – சாவி ❑ நர்மதா – சுஜாதா சிறுகதை ❑ ஜூலை 15, 2097 – ராஜேஷ்குமார் சிறுகதை ❑ பாவர்டை – முக்தா சீநிவாசன் சிறுகதை ❑ நலமில்லை.. நலமா? – பட்டுக் கோட்டை பிரபாகர் சிறுகதை ❑ கோரோஜனின் கர்ஜனை – பாக்கியம் ராமசாமி சிறுகதை ❑ ரஜினி இருக்க பயமேன்? – கடுகு ❑ டில்லி கப்ஸா – சுப்புடு ❑ ஜெயலலிதா ஆட்சியைப் பிடிப்பாரா? – கிளி ஜோசியம்.

தவிர, கார்ட்டூன், தலையங்கம், சினிமா, கல்லூரி மாணவிகள் அரட்டை, கடத்தல் ஜோக்ஸ், கடத்தாத ஜோக்ஸ், கோபுலு, ஸ்ரீதர் ஜோக்ஸ்...

'இத்த்த்த்த்த்தனையும் முதல் இதழிலேயே!

சாவி

வார இதழ்

ஆசிரியர் : சாவி

ஆகஸ்ட் 15 அன்று எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

ஸ்ரீரங்கா பப்ளிகேஷன்ஸ்,
ஏ–20, அண்ணாநகர், சென்னை – 600 102.
தொலைபேசி : 6263252, 6216463. ஃபேக்ஸ் : 044–6283242

ஆண்டிமடம் ஆயுதக் கொள்ளை:



ஆரம்பமா, முடிவா?

இரவு சுமார் 11.30 மணி. ஆண்டிமடம் போலீஸ் நிலையத்துக்கு முன்னாலிருக்கிற அந்தப் பெரிய அரச மரத்தின் இலைகள் மட்டும் காற்றில் சலசலத்துக் கொண்டிருக்கின்றன.

அந்த நேரத்தில் சுமார் இருபது பேர் சைக்கிள்களில் வருகிறார்கள். போலீஸ் நிலையத்தின் முன்பு தங்கள் சைக்கிள்களை சாவகாசமாக ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு உள்ளே நுழைகிறார்கள்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் போலீஸ்காரர் ஒருவரும்தான் ஸ்டேஷனுக்குள். இவர்களைக் கண்டதும் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. வந்தவர்கள் அமைதியாக அங்கிருந்த ஆறு துப்பாக்கிகள், இரண்டு ரிவால்வார் மற்றுமுள்ள தோட்டாக்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு புறப்படுகிறார்கள். போலீஸார் தரப்பில் எதிர்ப்புக் காட்டிய போது, லேசான பலப் பிரயோகத்தின் மூலம் அவர்களை அடக்குகிறார்கள். பிறகு சில தஸ்தாவேஜுகளையும் ஒயர்லஸ் கருவியையும் எடுத்துக் கொள்கிறார்கள். அப்புறமும் நிதானமாக 'தமிழ்நாடு விடுதலைப் படை'

— நேரடி ரிப்போர்ட்



• முந்திரிக்காடுகள்

என்கிற தங்கள் இயக்கத்தின் பிரசுரங்களை ஒட்டிவிட்டு, சைக்கிள்களில் ஏறிச் சென்று விடுகிறார்கள்.

இவையெல்லாம் சுமார் இருபது இருபத்தைந்து நிமிடங்களுக்குள் நடந்து முடிந்துவிடுகின்றன. உடனடியாக பெரம்பலூர் மாவட்ட எஸ்.பியான வி.ஏ.ரவிகுமாருக்குச் செய்தி தெரிவிக்கப்படுகிறது. ஒயர்லஸ்ஸில் போலீஸ் உஷார்படுத்தப்படுகிறார்கள். எஸ்.பியும் மற்ற அதிகாரிகளும் போலீஸ் படையும் ஆண்டிமடம் காவல் நிலையத்துக்கு விரைந்து வந்து அந்த நள்ளிரவிலேயே குற்றவாளிகளைத் தேடுகிறார்கள். ஆனாலும் பயனில்லை.

கடந்த 13.7.97 அன்று இந்த ஆயுதக் கொள்ளை நடந்த பிறகு பதினான்கு பேரைக் கைது செய்திருக்கிறது போலீஸ். அவர்களெல்லாம் சந்தேகத்தின் பேரில்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்களே தவிர, உண்மையான குற்றவாளிகள்தான் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

அதனால், பெரம்பலூர் மாவட்ட போலீஸ் மட்டுமல்ல; சுற்று வட்டார மாவட்டங்களிலிருந்தும் போலீஸ் மற்றும் அதிரடிப் படைகள் வரவழைக்கப்பட்டு, உண்மையான குற்றவாளிகளைத் தேடி இரவு பகலாக அங்குள்ள முந்திரிக் காடுகளில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படி போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளேயே சென்று ஆயுதங்களைக் கொள்ளையடிக்கிற தைரியம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எப்படி வந்தது? 'தமிழ்நாடு விடுதலைப் படையினர்' என்கிற அமைப்பு உண்மையிலேயே வலுவான அமைப்புத்தானா? அல்லது அதன் பெயரில் திருட்டு கோஷ்டிகள்தான் உலாவிக் கொண்டிருக்கின்றனவா? ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகள் என்று சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று பின்னணிகளைத்

விரட்டினோம்!

பொன்பரப்பியில் நடந்த வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களில் ஆறுபேரைப் பொதுமக்களே அடித்துக் கொன்றது நினைவிருக்கிறதல்லவா! கொல்லப்பட்ட ஆறுபேரில் தமிழரசன் என்பவரும் ஒருவர். அவர்தான் தமிழ்நாடு விடுதலைப்படையின் தலைவர்.

கெமிகல் எஞ்ஜினியரிங் படித்தவர் தமிழரசன். தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த கலியபெருமாளின் மாணவர். (வயதான கலியபெருமாள் இப்போது இயக்க நடவடிக்கைகளிலிருந்து சுத்தமாக விலகி பெண்ணாடத்தில் வசித்து வருகிறார்) அவர்தான் கடந்த 80-களில் 'தமிழ்நாடு விடுதலைப் படை'யை ஆரம்பித்தார்.

பொன்பரப்பி பகுதியைச் சேர்ந்த தமிழரசன், தமது சுற்று வட்டார கிராமமான வல்லம் என்கிற இடத்துக்கு வந்தார். அது சுமார் இருநூறு முந்நூறு வீடுகளைக் கொண்ட கிராமம். சுற்றிலும் முந்திரிக் காடுகள். வனத்துறைக்குச் சொந்தமான அந்த முந்திரிக்காடுகள் ஆண்டுக்கொரு முறை ஏலம் விடப்படும். அப்படி ஏலம் விடப்படும்போது, வனத்துறையைச் சேர்ந்தவர்களே பினாமி பெயர்களில் ஏலம் எடுத்து நல்ல லாபம் சம்பாதித்து வந்தனர். ஏழை எளிய கிராம மக்கள் முந்திரிக் காடுகளில் வேலை செய்வதோடு சரி.

இந்த நிலையை மாற்றி, வல்லம் கிராமத்து மக்களே முந்திரித் தோப்பு ஏலத்தை எடுத்துப் பயன்பெற வேண்டும் என்கிற எண்ணத்தில் வந்தவர்தான் தமிழரசன். வந்தவுடன் 'முந்திரி விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தை' ஆரம்பித்தார். வனத்துறைக்குச் சொந்தமான அந்தப் பகுதி முந்திரிக்காடுகளை அந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்குத்தான் ஏலம் விட வேண்டும், மற்றவருக்கு விடக் கூடாது என்கிற அளவில் நீதிமன்றத் தீர்ப்பையே பெற்று வந்தார் தமிழரசன்.

இதன் காரணமாக, அந்தப் பகுதி மக்கள் முந்திரி ஏலத்தில் பயனடைந்தனர். லாபத்தில் ஒரு பகுதி தமிழரசனின் இயக்கத்துக்கும் நிதியாகக் கொடுக்கப்பட்டது. கிராம மக்களிடம் தமிழரசனின் செல்வாக்கும் வளர ஆரம்பித்தது. சுற்று வட்டார இளைஞர்கள் இயக்கத்தில் சேரவும் ஆரம்பித்தனர். இயக்கத்தினர் படாடோபமான வாழ்க்கை வாழக் கூடாது; சைக்கிள்களில்தான் செல்ல வேண்டும்; திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பது

போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இயக்கத்தின் 'வளர்ச்சி'க்கும் நாட்டு வெடி குண்டுகள் போன்ற ஆயுதங்கள் தயாரிப்பதற் கும் மேலும் பணம் வேண்டுமல்லவா! அந்த நோக்கத்தில்தான் 85-ல் உட்கோட்டை என்கிற ஊரிலுள்ள வங்கிக்குச் சென்று, பட்டப் பகலில் இரண்டு பேரைச் கட்டுக் கொன்றுவிட்டுக் கொள்ளையடித்தனர்.

அப்போதுதான் இந்த 'இயக்கம்' பற்றி வெளியில் தெரிய ஆரம்பித்தது. தங்கள் இயக்கம் இன்னும் பிரபலமாக வேண்டும் என்று கருதினர். அதற்கொரு திட்டம் தீட்டி னர். அதுதான் 86-ல் மருதையாற்றுப் பாலத் தில் வைக்கப்பட்ட வெடிகுண்டு. அது மலைக் கோட்டை எக்ஸ்பிரஸுக்காக வைக்கப்பட்ட வெடிகுண்டு அல்ல; வெறும் பிரபலத்துக்காக வைக்கப்பட்டதுதான் என்பதால், வெடி குண்டு வைத்தவர்களே, சம்பந்தப்பட்ட ஸ்டேஷன் மாஸ்டருக்கு வெடி குண்டு வைக் கப்பட்ட விஷயத்தைச் சொல்லியிருக்கின்ற னர். ரயில்வேயின் அலட்சியம் காரணமாகத் தான் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் விபத்தில் சிக்கிப் பலர் மாண்டு போக நேரிட்டதாகச் சொல்கிறார்கள்.

அந்த வெடிகுண்டு வழக்கில் தமிழரசன் தலைமறைவாகி விட்டதால் அவரைப் போலீஸார் பிடிக்க முடியவில்லை. மற்ற சிலர் தான் கைது செய்யப்பட்டனர். பிறகு 87-ல் நடத்தப்பட்டதுதான் பொன்பரப்பி வங்கிக் கொள்ளை.

தமிழரசன் தலைமையிலான எட்டுப்பேர் வங்கிக் கொள்ளைக்குச் சென்றபோதுதான் தமிழரசன் உள்பட ஆறுபேர் பொது மக் களால் கொல்லப்படுகின்றனர். சுந்தரம், ராஜேந்திரன் என்கிற மீதி இரண்டு பேர் தப்பி வந்துவிடுன்றனர்.

தமிழரசன் கொல்லப்பட்டதால் இயக் கத்துக்கு ராஜேந்திரன் தலைவராகிறார். சுந்தரம், மாறன், லெனின் என்று பத்துப் பேர் இயக்கத்தில் தீவிரமாக இருக்கின்றனர். பிறகு ராஜேந்திரன் சென்னைக்கு வந்து விடுகிறார். (சென்னையிலுள்ள இவரும் ஒரு வெடி குண்டு வழக்கில் கைது செய்யப்பட்டு விட் டார்). லெனின், சின்னத் தம்பி ஆகிய இரு வரும் தாங்கள் வைத்திருந்த வெடிகுண்டுகள் வெடித்தே இறந்து விடுகின்றனர். 'சு' என்று சுருக்கமாக அழைக்கப்படும் சுந்தரம் தலை மறைவு வாழ்க்கைக்குச் சென்று விடுகிறார், அவருடன் மாறன், தென் தமிழன் ஆகிய இருவர் மட்டுமே!

* தலைமறைவாக இருக்கும் இளவரசன்
(படம்- நன்றி: நக்கீரன்)



இந்த நிலையில்தான் மருதையாற்றுப் பால வெடிகுண்டு வழக்கில் சிறைவாசம் முடிந்து வெளியே வருகிறார் ராமசாமி. இவரு டன் இளவரசன் (இப்போது தலைமறைவு வாழ்க்கை), இளவரசனின் தம்பி செல்வம், கருணாகரன் என்று அனை வரும் சேர்ந்து இவர்களும் 'தமிழ்நாடு விடுதலைப் படை' என்கிற பெயரிலேயே ('சு'வுக்கு எதிராக) இயக்கம் தொடங்கினர். சைக்கிள்களில் தான் செல்வது போன்ற எளிமையான வாழ்க்கையைத் தூக்கியெறிந்து விட்டு அட்ட காசமாக பைக்குகளில் சுற்றி வர ஆரம்பித்தனர். சுற்றுப்புற கிராமங்களில் எங்கே பிரச்னை என்றாலும் இவர் கள் தான் சென்று 'கட்டப் பஞ்சாயத்து' செய்வார்கள் என்கிற நிலை. அதற்காக சம்பந்தப்பட்டவர்களிடம் வசூல் செய்தும் விடுவார்கள்.

இப்படிப்பட்ட கட்டப் பஞ்சாயத்துகளில் வந்த



அரிசியில் செய்யும் அற்புதம்!

பம்பாய்வாசியான குனால், மிக வித்தியாசமான கலைஞர். ஓர் அரிசியை எடுத்து, நுண்ணிய இடுக்கிபோன்ற உபகரணத்தில் வைத்துப் பிடித்துக் கொண்டு, மிகக் கூர்மையான பிரஷ் நுனியால் மளமளவென்று உங்கள் பெயரை எழுதிக் கொடுத்து விடுகிறார். கட்டணம் பத்துரூபாய். பத்து நிமிடங்களில் ஓர் இயற்கைக் காட்சியை வரைந்து முடித்து விடுகிறார். அந்த அரிசியின் விலை ரூபாய் 200. காந்திஜி, சிவாஜி போன்ற மனித உருவங்களையும் வெகு நேர்த்தியாய் சின்னஞ்சிறு அரிசியில் குனாலால் வரைய முடிகிறது.

காலை ஒன்பது மணியானால் தென் மும்பை பகுதியில் பார்க், கல்லூரி வாசல், மார்க்கெட் இப்படி எங்காவது வந்து உட்கார்ந்து கொள்ளுகிறார். மாலை ஐந்து மணிவரை, அரிசியில் ஓவியங்கள் எழுதி விற்கிறார். ஒரு நாளைக்கு இருநூறு ரூபாய் போல வருமானம்.

எல்.ஐ.சி.யில் வேலை பார்க்கிற குனாலின் அப்பாவுக்கு, மகனின் ஓவியத் திறமையில் ஆர்வமும், அக்கறையும் இல்லை. பிழைக்க வேறு ஏதாவது ஒரு உருப்படியான வழி தேடிக் கொள் என்று தினம் தினம் நச்சரிக்கிறார்.

"ஒருநாள் என் திறமையை இந்த உலகம் பெரிய அளவில் அங்கீகரிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது" என்கிறார் 26 வயது குனால்.

தகவல்: **மௌஷ்மி**

நன்றி: **சண்டே அப்சர்வர்**

வருமானம் தொடர்பான கணக்கு வழக்குகளில் இளவரனுக்கும் ராமசாமிக்கும் 'கசமுசா'. கூடவே, இளவரசன் ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்துவிட்டு, அவளைக் கைவிட்டுவிட்டதாகவும் அது கூடாதென்றும் ராமசாமி சொல்ல, இருவரும் பரம எதிரிகளானார்கள். இரண்டு கோஷ்டிகளாகச் செயல்பட ஆரம்பித்தார்கள். (இந்த இரண்டு கோஷ்டிகளிலுமே குறிப்பிட்ட ஒரு ஜாதியினர்தான் முக்கியத்துவம் பெறுகிறார்கள். பிறருக்கு மரியாதை இல்லை என்று சொல்லி 'தலித்' போன்ற பிற ஜாதியினர் இப்போது தனியாகப் பிரிந்து 'விடுதலைச் சிறுத்தை இயக்கம்' ஒன்றைத் தொடங்கியுள்ளனர்!)

கோஷ்டிகளாகப் பிரிந்த பிறகும் இவர்களின் முக்கிய வேலை கட்டப் பஞ்சாயத்துதான். எந்தப் பிரச்னையானாலும் மக்கள் இவர்களில் யாராவது ஒருவரிடம்தான் வர வேண்டும் என்கிற நிலை. தளவாய், ஆலத்தியூர் சிமெண்ட் ஆலைகளுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதில் சம்பந்தப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்குச் சரியான நஷ்டஈடு கொடுக்கப்படவில்லை என்று ஆலை நிர்வாகத்துக்கு எதிராக இளவரசன் கோஷ்டி செயல்பட்டு, அதில் கட்டப்பஞ்சாயத்துச் செய்யப்போனது. அதில் முன்னுக்குறிச்சி ராமகிருஷ்ணன் என்பவர் ஆலை நிர்வாகங்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்பதற்காக அவரைக் கொலை செய்தது இளவரசன் கோஷ்டி.

ராமசாமி கோஷ்டிக்கும் ஓர் உதாரணம் சொல்லலாம். ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்த ஒருவர், (பெயர் வேண்டாமே!) துபாய்க்கு அனுப்புவதாகச் சொல்லி சில இளைஞர்களிடம் பணம் வசூல் செய்தார். துபாய்க்கு அனுப்பவில்லை. சம்பந்தப்பட்ட இளைஞர்கள் ராமசாமி கோஷ்டியிடம் புகார் கூற, அந்த நபரைக் கடத்திக் கொண்டு போனது ராமசாமி கோஷ்டி. பிறகு அவருடைய குடும்பத்தினரிடம் சென்று, சம்பந்தப்பட்ட இளைஞர்களுக்குப் பணத்தைத் திருப்பித்

தரவில்லையென்றால் அந்த நபர் கொலை செய்யப்படுவார் என்று மிரட்ட, உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. அந்த நபரும் 'விடுதலை' செய்யப்பட்டார்.

இதுபோன்ற கட்டப்பஞ்சாயத்துகளின் மூலம் பத்து சதவிகித கமிஷன் இவர்களுக்கு. அதனால் தொழிலில் பொறாமை. ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டுவதாகச் சபதம். இதைக் கண்ட 'க', 'ஒருவருக்கொருவர் சகோதர யுத்தம் செய்து கொள்ளக் கூடாது' என்று இவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியிலும் இறங்கிப் பார்த்தார். அது வெற்றி பெறவில்லை. அதன் விளைவாக....

ராமசாமி கோஷ்டியைச் சேர்ந்த தர்மராஜ் என்பவரை 3.6.97 அன்றும் ராமசாமியை 8.6.97 அன்றும் இளவரசன் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் வெட்டிக் கொன்றனர்.

உடனே, இளவரசன் கோஷ்டியைச் சேர்ந்த சேட்டு, விக்கிரமன் ஆகியோரை 10.6.97 அன்றும் ரங்கசாமி என்பவரை 13.6.97 அன்றும் ராமசாமி கோஷ்டியினர் வெட்டிக் கொன்றனர்.

பிறகு, ராமசாமி கோஷ்டியைச் சேர்ந்த ஆதிமூலம் என்பவரை 26.6.97 அன்று இளவரசன் கோஷ்டியினர் வெட்டிக் கொன்றனர்.

இந்த ஆறு கொலைகளும் அடுத்தடுத்து ஒரே மாதத்தில் நடந்திருந்தாலும் போலீஸார் ஒன்றும் பெரிதாக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. காரணம், நமக்கெதற்கு வம்பு என்று பொது மக்கள் பயந்து ஒதுங்குவது போலவே போலீஸாரும் பயந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்கிறார்கள்.

''இப்போது ஆண்டிமடம் காவல் நிலையத்தில் கொள்ளையடித்தவர்கள் யார் என்பது கூட உள்ளூர்ப் போலீஸாருக்குத் தெரியும். ஆனாலும் எதற்கு வம்பு என்றுதான் பேசாமல் இருக்கிறார்கள். இந்த உண்மை தெரியாததால் தான் உயர் அதிகாரிகளெல்லாம் வந்து 'தேடிக்' கொண்டிருக்கிறார்கள்!'' என்பதே பரவலான பேச்சு.

ஆனாலும் ''எப்படியும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைப் பிடித்துவிடுவோம். இவர்களெல்லாம் இயக்கம் என்கிற போர்வையில் செய்து கொண்டிருப்பது வெறும் கொள்ளையும் கட்டப் பஞ்சாயத்துகளும் தான்! தத்துவரீதியான எந்தவிதமான சித்தாந்தமும் இல்லாதவர்கள் இவர்கள்!'' என்று நம்மிடம் சொன்னார் பெரம்பலூர் மாவட்ட எஸ்.பியான வி.ஏ.ரவிகுமார்.

இதற்கிடையில் ஆண்டிமடம் போலீஸ் நிலையத்தில் அடிக்கப்பட்ட ஆயுதக் கொள்ளைக்கும் தங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று இளவரசன்(கோஷ்டி) ஒரு கடிதம் எழுதி, அதை ஜெயங்கொண்டத்திலுள்ள தினமலர் நிருபர் முருகனுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதை அவர் போலீஸுக்கும் கொடுத்திருக்கிறார்.

ஆயுதக் கொள்ளையைச் செய்தது இளவரசன், ராமசாமி கோஷ்டிகளில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். அல்லது தலைமறைவாக இருக்கிற- இன்னமும் தமிழரசனின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு 'வாழ்க்கை' நடத்திக் கொண்டிருக்கிற 'க' என்பவரின் இயக்கமாக இருக்க வேண்டும்.

இப்போது 'க' என்பவர் தலைமறைவாக இருந்தாலும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த இளைஞர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டு தமது இயக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டிருப்பதாகவும்



• மாவட்ட எஸ்.பி. ரவிகுமார்


சொல்லப்படுகிறது.

ஆண்டிமடம் காவல் நிலையத்தில் நடந்த ஆயுதக் கொள்ளை பற்றி மற்ற அரசியல் கட்சிக்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்?''

இந்தப் பகுதியில் நடைபெறும் சமூக விரோத மற்றும் வன்முறைச் செயல்களுக்குப் பாட்டாளி



• சிவசுப்பிரமணியன்



மக்கள் கட்சிதான் காரணம்!'' என்று அழுத்தமாகச் சொல்கிறார் பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. செயலாளரான சிவசுப்பிரமணியன்.

''கடந்த சில வருடங்களாகவே ஜாதி அடிப்படையில் மக்களை இணைத்து அராஜகமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது பா.ம.க. மாற்றுக் கட்சியினர் யாரும் கொடியேற்றக் கூடாது; கூட்டம் போடக் கூடாது என்றெல்லாம் மிரட்டல் விடுகிறார்கள். சமீபத்தில் கூட ஆண்டிமடம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள சில ரெக்கார்டுகளைத் தூக்கிக் கொண்டு அலுவலகத்தையும் பூட்டினார்கள். பா.ம.க. மாவட்டச் செயலாளரான குருவும் (இவர் விடுதலைப் புலிகளுக்கு பெட்ரோல் கடத்தியதாக 'உள்ளே' சென்று வந்தவர்) ஆண்டிமடம் தொகுதி எம்.எல்.எல்.ஏ. தீரனும் (பா.ம.க.) சமீபத்தில் ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். எப்படி? கைகளில் அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் நடத்தினார்கள்!'' என்ற சிவசுப்பிரமணியனை இடைமறித்தோம்.

"இவற்றுக்கும் காவல் நிலையத்தில் நடந்த ஆயுதக் கொள்ளைக்கும் என்ன சம்பந்தம்?''

''ஆண்டிமடம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள கவுன்சிலர்களில் ஐந்து பேர் பா.ம.கவினர். அவர்களில் நால்வரால் எந்தப் பிரச்னையும் இல்லை. சபாநாயகம் என்பவர்தான் அராஜகமாகச் செயல்படுபவர். இவர்மேல் நிறைய வழக்குகள். பழைய போலீஸ் அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை. இப்போது புதிதாக வந்திருக்கிற அதிகாரிகள் அவர் சம்பந்தப்பட்ட வழக்குகளைத் தூசிதட்டி எடுத்துச் செயல்பட ஆரம்பித்துள்ளனர். இது பொறுக்காத சபாநாயகம் தான் இந்த ஆயுதக் கொள்ளையைச் செய்திருப்பார். அவர் செய்ததால்தான் வழக்குகள் சம்பந்தமான சில ஃபைல்களையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்!'' என்றார் சிவசுப்பிரமணியன்.

ஆண்டிமடம் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் விஸ்வநாதனும் (த.மா.கா.) பெரம்பலூர் மாவட்ட த.மா.கா செயலாளர் ராஜேந்திரனும் கூட நாம் சந்தித்துப் பேசிய போது சிவசுப்பிரமணியனின் கருத்துக்களைத் தான் சொன்னார்கள்.

(பா.ம.க.பற்றி இவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் தொடர்பான பதில்களைப் பெற, ஆண்டிமடம் தொகுதி எம்.எல்.ஏ.வான தீரனை பலமுறை தொடர்பு கொண்டும் முடியவில்லை.)

''ஜெயங்கொண்டம் பகுதிகளில் இப்படி சமூக விரோதிகளின் அராஜகச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே வருவதால்தான் இங்கு யாருமே தொழில்கள் துவங்கப் பயப்படுகிறார்கள். அதோ இதோ என்று சொல்லப்படுகிற ஜெ.எல்.பி.சி.(ஜெயங்கொண்டம் லிக்னைட் பவர் கார்ப்பரேஷன்) திட்டமும் இங்கே வருவதில் தாமதம் ஏற்படுகிறது. அது அரசும் தனியாரும் சேர்ந்து செய்கிற கூட்டுத் துறை நிறுவனம் என்பதால், தனியார் முதலீடு செய்யவே பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நல்ல வேலை வாய்ப்புகளை நாங்கள் இழந்து கொண்டிருக்கிறோம்!'' என்று பயத்தோடும் இயலாமையோடும் சொல்கிறார்கள் பொது மக்கள்.

— இளங்கோவன், ஸ்ரீநிவாசன்

படங்கள்: **பிரின்ஸ்**

விபத்தின்றி ஓட்ட சில டிப்ஸ்!

"வெளியில் எங்கே போக வேண்டுமென்றாலும், என் கணவரையே நம்பவேண்டியுள்ளது. ஆட்டோவில் போவதோ கட்டுப்படியாவதில்லை. எனவேதான் நான் டூ வீலர் ஓட்டக் கற்றுக் கொண்டு, ஒரு மோபெட் வாங்கி விடுவது என்ற முடிவுக்கு வந்தேன். என் கணவர் என் பிளானுக்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார்" என்கிறார் சாரதா.

"என் ஆபீசுக்கு ஸ்கூட்டரில் போனால், அரைமணி நேரமாகும். ஆனால் பஸ்ஸில் போனால் ஒரு மணி நேரம். தவிர வீட்டிலிருந்து பஸ் ஸ்டாப், ஆபீஸிலிருந்து பஸ் ஸ்டாப் வரையிலான நேரம் நடை எக்ஸ்டிரா. எனவேதான், நான் வண்டி வாங்கி விட்டேன்" என்கிறார் விஜயலட்சுமி.

உஷாவின் கோபம் ஆட்டோக்காரர்கள் மீது. "கடந்த ஒரு சில வருடங்களில் நான் ஆட்டோவுக்குச் செலவழித்த பணத்தில் ஒரு ஆட்டோவே வாங்கியிருக்கலாம்" என்கிறார் அடையாறைச் சேர்ந்த உஷா.

"இவர்களைப் போல, நிறையப் பெண்கள் சௌகரியம் காரணமாய் சொந்தமாக வாகனம் வாங்கி விடுகிறார்களே ஒழிய பலர், முறையாக டிரைவிங் பயின்றவர்கள் இல்லை. நண்பர்கள், குடும்பத்தினர் கற்றுக் கொடுத்து விட, இவர்களும் டிரைவிங் லைசென்ஸ் வாங்கி விடுகிறார்கள். ஆனால், முறைப்படியான சாலை விதிகளை இவர்கள் தெரிந்து கொள்ளுவதில்லை. இதனால் ஏற்படும் விளைவுகளைப் பெரிய பட்டியலிடலாம்" என்கிறார் துர்கா. இவர் சென்னை இந்திரா நகரில் பெண்களுக்கு இரண்டு சக்கர வாகனம் ஓட்டக் கற்றுத்தரும் பிரத்யேக டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறார்.

இரண்டு சக்கர வாகனங்களை ஓட்டும் பெண்கள் வண்டி ஓட்டிச் செல்லும்போது கடைப் பிடிக்க வேண்டிய சில பாதுகாப்பு டிப்ஸ்கள் தருகிறார் துர்கா.

● நடுத்தர வயதுப் பெண்மணிகள் புடைவையணிந்து, வண்டியோட்டுகிறார்கள். இவர்கள் தழையத் தழையப் புடைவை கட்டிக் கொள்ளுவது நடக்கும்போது சரி. ஆனால், அது, மோபெட் ஓட்டும் போது ஆபத்து ஏற்படுத்தக் கூடும். புடைவையை குறிப்பாக முந்தானையை இழுத்து செருகிக் கொள்வதில் தர்ம சங்கடம். சில சமயங்கள், அப்படிச் செய்யத் தவறிய காரணத்தால், saree guard ஐயும் மீறி, பின் வீலில் உள்ள பற்சக்கரத்தில் புடைவை சிக்கிக் கிழிவது மட்டுமின்றி, ஆபத்தையும் ஏற்படுத்தும்.

● சூரிதார் அணிவது, வண்டி ஓட்டுவதற்கு ரொம்ப சௌகரியம்தான். ஆனால் துப்பட்டாதான் பிரச்னை. துப்பட்டா, கழுத்தைச் சுற்றிக் கொண்டு, காற்றில் படபடக்க வண்டி ஓட்டிச் செல்வது ஆபத்து. துப்பட்டாவின் இரு முனைகளையும் முடிச்சுப் போட்டு விட்டால், ஆபத்தைத் தவிர்க்கலாம்.

● சட்டப்படி ஹெல்மெட் கட்டாயமில்லைதான். ஆண்களே இதில் அக்கறை காட்டாதபோது, பின்னல், கொண்டை என்று முடியலங்காரத்தில் கவனம் செலுத்தும் பெண்களுக்கு, ஹெல்மெட் ஒரு சங்கடம்தான். ஆனால், உயிருக்குப் பாதுகாப்புதான் முக்கியம் என்னும் போது, அதில் கவனம் செலுத்தினால்தான் என்ன? (ஹெல்மெட் அணியாததால் தலையில் தூசி அதிகம் சேர்ந்து, தலை முடி கொட்டுவதாய் ஒரு பெண்மணி கூறினார். அப்படியானால், தலை தவிர முடியைப் பாதுகாக்கவே ஹெல்மெட் அணியலாம்)

• துர்கா



● பில்லியனில் இன்னொருவர் உட்கார்ந்து இருக்கும் போது, அவருடன் தொண தொணவென்று பேசிக் கொண்டே வண்டி ஓட்டாதீர்கள். ஒரு கல்லூரி மாணவி, பில்லியனில் உட்கார்ந்து பயணம் செய்த தனது அம்மாவுடன் ஏதோ பேசிக் கொண்டே வந்தாள். திடீரென்று பிரேக் போட நேரிட்ட போது, கவனப்பிசகில் அம்மா கீழே விழ, தோள்பட்டையில் எலும்பு முறிவு. பில்லியனில் இருப்பவர் பேச்சுக் கொடுத்தாலும் சரி, ஓட்டுபவர் பேசினாலும் சரி, பேச்சு ஓட்டுபவரது கவனத்தைச் சிதற அடிக்கும்.



• ஓட்டப் பழகும் பெண்கள்...

● துணிக் கடைகள் வழியே போகும் போது, ஷோ கேஸில் உள்ள ரெடிமேட் உடை, புடைவைகளை, ஷோகேஸ் பொம்மைகளுக்கு உடுத்திய உடைகளைப் பராக்கு பார்த்துக் கொண்டு ஓட்டினால் என்ன ஆகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

● முகத்திற்கு கூலிங்கிளாஸ் அல்லது பவர் இல்லாத கண்ணாடி அவசியம். தூசியிலிருந்து கண்களைப் பாதுகாக்க, இரவில் பூச்சிகள் கண் ணில் படுவதை இது தடுக்கும்.

● முன்னால் பஸ், லாரி போன்ற ஹெவி வாகனம், பின்னாலும் அதே போல. இரண் டுக்குமிடையே மாட்டிக் கொள்ளாதீர்கள். முன்னே செல்பவர் திடீர் பிரேக் போட்டால், இரு கனரக வாகனங்களுக்கும் இடையில் நீங்கள் அந்தோ பரிதாபம்!

● தலைமுடியை பின்னிக் கொள்ளாமல், லூசாக விடுபவர்கள், வண்டியில் வேகமாய்ப் போகும்போது, முகத்தில் முடிவந்து விழும். அதைத் ஒதுக்கிவிட, ஹாண்டில் பாரிலிருந்து கையை எடுக்கும் போது எச்சரிக்கை தேவை. முடியை ஒதுக்கிவிடா விட்டாலோ, பார்வை மறைக்கும். ஆபத்து ஏற்படலாம். (சில சமயங் களில் உங்களுடைய முடி பக்கத்தில் வரும் வாகன ஓட்டி முகத்தின் மீது பறந்து விழும் அபாயமும் உண்டு.)

● வண்டியை நிறுத்தும் போதும், வேகத் தைக் கட்டுப்படுத்தும் போதும், திருப்பங்களி லும், இண்டிகேட்டர் விளக்குகளைப் பயன் படுத்தினாலும், கைகளால் சைகை காட்டுவது பாதுகாப்பு.

● சாந்தி என்று ஒரு பாங்க் ஊழியையும், அவரது சிநேகிதியும், தத்தம் வண்டிகளை மெதுவாக ஓட்டியபடி பேசிக் கொண்டே சைடு பை சைடாக வந்து கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு பாதசாரி குறுக்கே வந்துவிட, சாந்தி தடுமாறி, சிநேகிதியின் வண்டியில் இடித்துவிட, பின்னால் வந்த பஸ், அவர்கள் மேல் ஏறாமல், தப்பித்தது, பெரிய புண்ணியம் தான்.

● டூ வீலர் ஓட்டும் போது, கூடியவரை நிமிர்ந்து அமர்ந்து ஓட்டுங்கள். அதற்கேற்ப அவசியமானால் ஹாண்டில்பாரை அல்லது உட்காரும் பொசிஷனை அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள். நாளடைவில் முதுகு வலியால் சிரமப்படாமல் இருக்க இது அவசியம்.

● அதிக வேகம், ஆபத்துக்கு அழைப்பு. சில இளைஞிகள், சிக்னலிலிருந்து, சீறிக் கொண்டு புறப்படும் போது, மற்றவர்களுக்கு மனம் பதைபதைக்கும்.

● இறுதியாக ஒரு டிப்ஸ். வீட்டுக்கவலை யெல்லாம் வீட்டிலேயே மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, வண்டியை எடுங்கள். ஆபீஸ் கவலைகளுக்கும் அதே விதிதான். வண்டி ஓட்டும் போது கவனம் முழுவதும் சாலையி லேயே இருக்கட்டும்.

சந்திப்பு : **எம். பாரதி**

அட்டையில் : **செல்வி காயத்ரி கணேஷ்**

அட்டை வண்ணப்படம் : **உத்ரா**

‘காவிரி அன்னைக்கு ஒரு கோவில் கட்டத் திட்டம்!’

எம்.எஸ். உதயமூர்த்தியின் டைரியிலிருந்து :

வெள்ளிக்கிழமை (25.7.97):

காவிரி விஷயத்தில் கர்நாடக அரசாங்கத்தை நம்புவதைவிட, காவிரித் தாயை நம்புவது பலனளிக்கும் என்ற நம்பிக்கை கொண்டவன் நான். எனவே காவிரி அன்னைக்கு, பொருத்தமான இடத்தில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று ஆசை. காவிரி ஆறு, பூம்புகாரில், கடலில் கலக்கும் இடத்தில் பன்னிரெண்டு ஏக்கர் நிலம் வாங்கியுள்ளோம். அங்கே பெரிய அளவில், மேற்கூரை இல்லாத, காவிரி அம்மன் கோவில் கட்டத் திட்டமிட்டிருக்கிறோம். அதனை வடிவமைத்திருப்பவர் ஈரோட்டைச் சேர்ந்த முரளி என்ற ஆர்க்கிடெக்ட். அவர் வந்திருந்தார். அவரிடம் கோவில் பற்றி விரிவாக பேசிக் கொண்டிருந்தேன்.

மாலை, சன் டீ.விக்காக, வீரபாண்டியன் எடுத்த பேட்டி ஒளிப்பதிவு. நிறைய ஹோம் ஒர்க் செய்து கொண்டு வந்திருந்தார் என்பது அவரது கேள்விகளிலேயே தெரிந்தது. இடக்கு மடக்காக எத்தனையோ கேள்விகள் கேட்டாலும், இறுதியில் எங்கள் பணியைப் பாராட்டி, ‘எம்.எஸ். உதயமூர்த்தியுடன் சேர்ந்து பணியாற்ற வாருங்கள், வடம்பிடிப்போம்; வரலாற்றில் இடம் பிடிப்போம்!’ என்று முடித்ததை ரசித்தேன்.

ஞாயிற்றுக்கிழமை (27.7.97):

என் மனைவி சீதாலட்சுமி இறந்த 60வது நாள். அவரைப் பற்றிய நினைவுகளை மனம் அசைபோட்டது. முக்கியமான ஒரு சம்பவம். அமெரிக்காவில் 81ல் நான் துவங்கிய கெமிகல் கம்பெனி நிர்வாகத்தை பெட்ரோலியம் இஞ்சினீயரிங் முடித்த என் இரண்டாவது மகனிடம் ஒப்படைத்து விட்டு, நான் இந்தியாவுக்குத் திரும்ப முடிவெடுத்தபோது, என் மனைவி என்னுடன் இந்தியா திரும்ப மறுத்து விட்டார். வசதியான அமெரிக்க வாழ்க்கையை அவர் தியாகம் செய்யத் தயாராக இல்லை. நான் மட்டும் 87 ஆகஸ்டில் இந்தியா வந்து, மக்கள் சக்தி இயக்கம் துவக்கினேன்.

ஒரு வருடம் கழித்து, சென்னை வந்தார் என் மனைவி. திரும்பிப் போக டிக்கெட்டுடன் வந்தவர் திடீரென்று நான் இங்கே ஒண்டியாய் திண்டாடுவதைப் பார்த்து விட்டு, தன் முடிவை மாற்றிக் கொண்டு இங்கேயே தங்கி விட்டார். இதில் என் பிள்ளைகளுக்குப் பெரும் வருத்தம். ஆனால் அவர் செய்தது பெரிய தியாகமாகவே எனக்குத் தோன்றுகிறது.

புற்றுநோய் தாக்குதலுக்குள்ளான என் மனைவிக்கு, எந்தவித சிகிச்சையும் பலனளிக்காமல் போக தன் கடைசி நாட்களை பிள்ளைகள், பேரக்குழந்தைகளுடன் கழிக்க ஆசைப்பட்டார். அதன்படி அவரை அனுப்பி வைத்தேன். போன நாலாவது மாதம் இறந்து போனார்.

திங்கட்கிழமை (28.7.97):

இவ்வாண்டு பிப்ரவரியில் தென்னக நதி நீர் இணைப்பு பற்றி ஹைதராபாதில் ஒரு கருத்தரங்கம் நடத்தினோம். (மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி, காவிரி, வைகை நதிகளை இணைக்கிற மாபெரும் திட்டம் அது). அதன் ஒரு பகுதியாக ஆந்திர மாநில கவர்னராக இருந்த கிருஷ்ண காந்தைச் சந்தித்து, திட்டத்தை விளக்கினோம். அவர், திட்டம் பற்றி ஆர்வத்துடன் கேட்டு அறிந்தது மட்டுமின்றி, சுமார் 50 பேர் கொண்ட எங்கள் குழுவுக்கு மதிய உணவு அளித்து,

கௌரவித்தார். ஆழ்ந்த அறிவு கொண்ட அவரை, துணை ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக ஐ.மு.வும் காங்கிரசும் தேர்ந்தெடுத்தது பற்றி மனம் மகிழ்ந்து, அவருக்கு மக்கள் சக்தி இயக்கம் சார்பில் ஒரு வாழ்த்துத் தந்தி அனுப்பி வைத்தேன்.

செவ்வாய்கிழமை (29.7.97):

மங்கையர் செல்வன் துடிப்பான ஓர் இளைஞர். எம்.ஏ., எம்.எட் படித்தவர். அவருக்கு, ஆல் இந்தியா ரேடியோவிலிருந்து அடுத்த வாரம் வேலையில் சேர ஆர்டர் வந்திருக்கிறது. வீட்டில் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் இருக்கிறார்கள். எங்கள் இயக்கத்தில் தீவிரமாக தம்மை இணைத்துக் கொண்டிருக்கும் அவர், இயக்க ஆபீசிலிருந்து சைக்கிளில் செல்லும்போது, யாரோ ஒரு மோட்டார் சைக்கிள்காரர் வேகமாக மோதிவிட்டுப் போய்விட்டார். சைக்கிளிலிருந்து தூக்கி எறியப்பட்ட அவருக்குப் பலத்த அடி. அவரை ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்த்து விட்டு, எனக்குத் தகவல் அனுப்பினார்கள்.



ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தேன். தனியார் மருத்துவமனைகள், எந்த அளவுக்கு ஏழை, எளிய மக்களை மருத்துவச் சிகிச்சை என்ற பெயரில் பணத்தை உறிஞ்சும் அட்டைகளாய் இருக்கின்றன என்பதை அங்கே கண் கூடாகப் பார்த்தேன்.

ம. செல்வன் சீக்கிரமே குணமடைந்து விடுவார் என்கிற மட்டில் நிம்மதி.

புதன்கிழமை (30.7.97):

மக்கள் சக்தி இயக்கம், தனிச் சுற்றுக்காக, "நம்பு தம்பி! நம்மால் முடியும்!" என்ற இதழை நடத்தி வருகிறது. சுயமுன்னேற்றம், சுய தொழில், ஆன்மிகம், இயக்கச் செய்திகள் போன்றவை இடம் பெறும் அந்த இதழின் சுதந்தர தினப் பொன்விழா சிறப்பிதழுக்காக ஒரு கட்டுரை எழுதினேன். சமுதாய மாற்றம் சாத்தியமா? என்பதுதான் தலைப்பு.

வழிப்பறி, பில்லி, சூன்ய மூட நம்பிக்கை இவற்றில் ஊறித் திளைத்த திபெதில் இருந்து புத்த மதம் எந்த அளவுக்கு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை உதாரணம் காட்டி எழுதினேன்.

சிங்கப்பூரில், உயர் நிலைப் பள்ளிக் கூட பாடத் திட்டத்தில் என்னுடைய புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஒரு கட்டுரையைச் சேர்த்துக் கொள்ள அனுமதி கேட்டு, எழுதியிருந்தார்கள். மகிழ்ச்சியுடன் என் சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதினேன்.

வியாழக்கிழமை (31.7.97):

ஓர் இளம் டாக்டர். அவரது மனைவியும் டாக்டர்தான். மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்ல விரும்பிய அந்த இளைஞர், ஓராண்டு காலமாக அதற்கான நுழைவுத் தேர்வுக்குத் தயாராகி வந்தார். ஆனால், எதிர்பாராத விதமாய், அவர் பரீட்சையைச் சரியாக எழுதவில்லை. அவர் ரொம்ப டிப்ரெஸ் ஆகிவிட்டார். தாம் எதற்கும் இனி பயனில்லாமல் போய்விட்டதாகப் புலம்பத் துவங்கிவிட்டார்.

அவரை, அவருடைய டாக்டர் மனைவி என்னிடம் அழைத்து வந்தார். இருவரிடமும் மனம் விட்டுப் பேசினேன். தன்னம்பிக்கை யூட்டும் விதமாக அவரிடம் பேசினேன். அவரை ஊக்கப்படுத்தி, மனோதிடத்தைத் திரும்பப் பெறும் விதமாய் அனுசரணையுடன் நடந்து கொள்ள அவருடைய மனைவிக்கு ஆலோசனை கூறினேன். விடைபெறும் போது, அந்த இளைஞர் மனத்தில் ஒருவித தெளிவு ஏற்பட்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**


'Bore' அடிக்கிறதா...?
அதைத் திருப்பியடியுங்கள்!
அன்பால், சிரத்தையால்,
ஈடுபாட்டினால்
திருப்பியடியுங்கள்,
விரட்டுங்கள்!'
என்கிறது இந்த
வெற்றிக் கதை!

அன்புடன் திருப்பி அடியுங்கள்!

தீப்பொறி மத்தாப்பு அணைந்து அணைந்து பூத்தது. கண்ணாடிப் பாதுகாப்புக் குள்ளிருந்தபடி ராஜாராமனின் பார்வை அதை வெறித்தது.

கார்களுக்கான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிலகம். வெல்டிங் பிரிவில் சேர்ந்து இரண்டு வருடங்களாகிறது. ஆசையாசையாய்ப் படித்த ஐ.டி.ஐ. படிப்புக்குப் பின் ஆண்டி கிளை மாக்ஸ் போல வேலை. ஊர்ந்து வரும் உதிரி பாகங்கள் வெல்டிங் பிரிவில் தானியங்கி முறையில் இணைக்கப்படுவதை மேற்பார்வையிட வேண்டும்.

மர நிழலில் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்தபடி மாடு மேய்வதை மேற்பார்வையிடுவதற்கும் இதற்கும் அதிக வித்தியாசம் தெரியவில்லை, ராஜாராமனுக்கு...

'துளியூண்டு சுயசிந்தனை, தன்னார்வம், கற்பனை... எதற்காவது இடமுண்டா இந்தப் பணியில்...? சம்பளமும் குறைச்சல். இன்னும் பத்து வருஷம் குப்பை கொட்டினாலும் கல்யாணம், குடும்பம் என்று நினைத்துப் பார்க்க முடியாது.

ராஜாராமன் ஃப்ளோர் சூபர்வைஸரிடம் போய் பொய் சொன்னான்:

''ஸார், காலைலேர்ந்து ஒரே வயிறு அப்செட்... முடியலை.. போகணும்...''

வீடு வந்தவன் இழுத்துப் போர்த்திக் கொண்டு மூலையில் சுருண்டு கிடந்தான். சில மாதங்களாகவே அவனைத் துரத்திக் கொண்டிருந்த கேள்வி சில்வண்டு ரீங்காரம் போல் மண்டையைக் குடைந்தது. 'இன்னும் எத்தனை நாள்...? எத்தனை காலம் இதே வேலையில்...? இப்படியே போனால்...? நாளையும், மறு நாளும், அதன் பின்னரும் இதே பணி, இதே சோர்வு, இதே தேக்கம்தானா...?'

அப்படியே தூங்கிப் போனான். விடிந்த போது மனச்சுமை குறைந்த பிரமை. குளித்து, உடுத்தி, கிளம்பினான். அம்மா சாப்பாட்டு டப்பாவை நீட்டினாள்.

''வேண்டாம்... வெளிய பாத்துக்கறேன்...'' போய்விட்டான்.

கார்டை 'பஞ்சிங்' செய்த போதே கவனித்தான் ராஜாராமன். அன்று நிறைய புது ஆட்கள் வந்திருந்தார்கள்.

பாக்கிங் பிரிவில் அவ்வப்போது டெம்பரரி ஆட்கள் வருவதுண்டு. அதற்காக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

அவன் ஃப்ளோரலைனருகே நின்றபடி பாக்கிங் பிரிவை நோட்டம் விட்டான். புதிய நபர்களுள் ஒருவன் பளிச்சென்று வித்தியாசமாக அவன் கவனத்தைக் கவர்ந்தான். தலையைப் படிய வாரியிருந்தான். நெற்றியில் விபூதிக் கீற்றும் குங்குமமும் பளிச்சென்றிருந்தன. பழைய உடைதான்... என்றாலும் ஒரு பெருமிதத்துடன் அவன் அதை அணிந்திருப்பதாகப்பட்டது. முகத்தில் மலர்ச்சி பிரகாசமிட்டது. உதடுகள் முணு முணுத்தன.

''ஏதாவது பிரார்த்தனையா? பாட்டா...?'

ராஜாராமன் யோசித்தபடி தன் வேலையை கவனிக்கலானான்.

பத்து நாட்கள் சேர்ந்தாற்போல் வேலைக்கு வந்தான் பூபதி. அந்த பத்து நாட்களும் ராஜாராமனின் கவனத்தை அவன் ஈர்த்தான்.

ஒன்பது மணிக்கு ஃபாக்டரி இயங்க ஆரம்பிக்கும். பூபதி பாக்கிங் டிவிஷனில் தன் பணி தொடங்கும்போது ஒன்பதைக் கடந்து ஒரு வினாடி கூட ஆகியிருக்காது.

அதே போல் சரியாகப் பதினோரு மணிக்கு டீ இன்டர்வெலுக்குப் போவான். 11.15க்குப்

எஸ்.ஐ.ஆர்.

பிசகாமல் மறுபடியும் அட்டைப் பெட்டிகளைப் பிரித்துக் கொண்டிருப்பான்.

பிளாஸ்டிக் உறையிலிட்ட உதிரி பாகங்களை அவற்றுக்குரிய அட்டைப் பெட்டிகளில் அடுக்கி டேப் போட்டு ஒட்டும் சாதாரண வேலைதான். அதையும் ஓர் ஓவியம் வரையும் சிரத்தையுடன்தான் செய்தான் பூபதி. மற்றவர்கள் முரட்டுத்தனமாய்க் கையாண்டவற்றை இவன் குழந்தையைத் தூக்குகிறது போல் தூக்கி வைத்தான். அட்டைப் பெட்டிகளைப் புறங்கையால் அலட்சியமாய்த் தள்ளாமல் சீராக அடுக்கி வைத்தான். அனைவரையும் பார்த்துச் சிரித்தான்; அனாவசியமாய் ஒரு சொல் பேசவில்லை. மானேஜருக்கும் மேற்பார்வையாளருக்கும் வணக்கம் சொன்னான்; ஆனால் யாரையும் 'போட்டுக் கொடுக்கவில்லை'.

உணவு இடைவேளையின்போது பூபதியை இன்னும் கூர்ந்து கவனிக்க முடிந்தது. சுத்தமான பச்சை நாப்கின் விரித்து வைத்து, பழைய அலுமினிய டப்பாவிலிருந்து மோர் சாதம் சாப்பிட்டான். ஒரு பருக்கை சிந்தாவிட்டாலும், சாப்பிட்ட இடத்தைச் சரிபார்த்து துடைத்து விட்டுத்தான் போனான். யாரும் சொல்லிச் செய்யாமல் ஒவ்வொன்றையும் அவன் இப்படிச் செய்தது ராஜாராமனுக்குள் ஒரு நெகிழ்ச்சியை உண்டு பண்ணியது. 'அவனிடம் போய்ப் பேச வேண்டும்' என்கிற ஆவல் ஒவ்வொரு நாளும் அதிகரிக்க, ஏதோவொரு தயக்கம் அதற்குத் தடை விதித்தது. 'நிச்சயம் நாளைக்கு...' என்று தள்ளிப் போட்டான்.

ஒரு நாள் 'நாளை' வந்தது. பூபதி வரவில்லை. கான்ட்ராக்ட் முடிந்து போயிருந்தது! ராஜாராமனுக்கு சற்று தவிப்பாய் இருந்தது. ஓரிரு நாட்கள் கையுடைந்தாற்போல் கூட இருந்தது. மூன்றாம் நாள் ஒரு புதிய ராஜாராமன் உதயமானான்.


வெல்டிங் மெஷினின் மத்தாப்பு சிதறல்களை மரியாதையுடன் பார்த்தான். இணைக்கப்பட வேண்டிய பாகங்களைத் தாயும் சேயும் போல் சேர்த்து வைத்தான். ஃப்ளோலைன் இயந்திரமே அவனுக்குக் கம்பீரமாகத் தெரிய ஆரம்பித்தது.

ஆசையைப் புகுத்திச் செய்ய செய்ய, அற்பமாக நினைத்த பணிகூட அழகு கொள்ள ஆரம்பித்தது. ராஜாராமனுக்கு அதுவே பிடித்துப் போயிற்று.

அவனைவிட அவன் முதலாளிகளுக்கு அது அதிகம் பிடித்திருந்தது. அவன் நோக்கில் மாற்றமும் பணியில் நேர்த்தியும் கூடியிருப்பதைக் கவனித்தார்கள். பணி உயர்வு ஆறாம் மாதம், அவன் கேட்காமலே வந்தது.

ராஜாராமன் இன்று சொந்த தொழிற்சாலை வைத்திருக்கிறான். இந்த நிலைக்கு வரும் முன் பல ஏற்ற இறக்கங்களை அவன் பார்க்கத்தான் வேண்டியிருந்தது. அவற்றினூடே அவன் பூபதி வாழ்ந்து காட்டிய பாடத்தை மட்டும் மறக்காமல் கடைப்பிடித்தான்; இப்போதும் கடைப்பிடிக்கிறான். என்ன பாடம்...?

''செய்யும் தொழிலே தெய்வம் என்று சிலர் அதைக் குறிப்பிடுவார்கள். ஆனால் நான் இப்படிச் சொல்வேன்– எந்த வேலையைச் செய்தாலும் 'இதைச் செய்யத்தான் நாம் பிறந்திருக்கோம்'னு நினைச்சுக்கிட்டுச் செய்யணும்... பூபதி அப்படித்தான் செஞ்சான். அவனை இன்னும் நான் மறக்கலை...'' என்கிறான் ராஜாராமன்.



கருத்து: சீர்காழி வி. ரேவதி

பாரபட்சமில்லாத கிருஷ்ணகாந்த்!

பிரதமர் என்ற முறையில், குஜ்ரால் இதுவரை எடுத்த அரசியல் முடிவு ஏதாவது ஒன்று உண்டு என்றால், அது ஆந்திர ஆளுநர் கிருஷ்ணகாந்த்தை, துணை ஜனாதிபதியாக, ஐக்கிய முன்னணி சார்பில் நிறுத்துவது என்பதுதான்!


ஆனால் இந்த முடிவை சீதாராம் கேசரியிடம் அவர் சொன்னதும், அதிகம் மோதாமல், உடனே ஒப்புக் கொண்டாராம் கேசரி.

ஹைதராபாதுக்குப் போனில் பேசி, கிருஷ்ணகாந்த்தை உடனே தில்லி வருமாறு அழைத்து விட்டார் குஜ்ரால்.

ஏழரை வருடங்கள் ஆந்திர ஆளுநராக இருந்தவர் கிருஷ்ண காந்த்

அதிலும் ‹ தலைமையிலா சிலை மாற்றி, சு நாயுடுவை முதல். ஏற்கும் தீர்மானத்துக்கு தெலுங்கு தேசக் கட்சி எம்.எல்.ஏ.க்கள் வந்தபோது, அவர் சிக்கலை விடுவித்த முறை, அவரைப் பாரபட்சமற்ற ஆளுநர் என்று அடையாளம் காட்டியது. எம்.எல்.ஏ.க்களின் கையெழுத்து எல்லாம் உண்மையானதுதானா என்று சட்டசபைச் செயலகம் பொறுமையாக விசாரணை செய்து முடிவு சொல்லும் வரை காத்திருந்தே, தம் முடிவை அறிவித்தார் கிருஷ்ண காந்த். அரசியல் சட்டப் பிரிவு 356 ஐப் பயன்படுத்தி, ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வர யோசனைகள் கூறப்பட்ட போது, வெகுண்டு போய், அவற்றை ஒதுக்கித் தள்ளினார். என்.டி.ஆர். மருத்துவமனையில் படுத்திருந்தார். அங்கே அவரிடமிருந்து ராஜினாமாக் கடிதத்தை வாங்கத் தயங்கினார் கிருஷ்ணகாந்த். பிறகு ராஜ்பவன் திரும்பிய பிறகே, உறையைப் பிரித்துப் படித்தார்.

"உள்ளூர் பத்திரிகைகள் என்னைக் குற்றம் சொன்ன போதும், நான் எல்லாச் சிக்கல்களையும் பிரித்து, பிரச்னையாகாமல் தவிர்த்து, நேர்மையாக நடந்து கொண்டதாக தேசிய நாளேடுகளும், பல மாநில நீதிபதிகளும்



சொன்னதை என்னால் மறக்க முடியாது!" என்று இப்போதும் நினைவு கூர்கிறார் கிருஷ்ணகாந்த்.

"வட இந்திய கலாசாரம் ஆர்ப்பாட்டமானது. தென்னிந்திய கலாசாரம் ஒரேயடியாக மேலை நாட்டைக் காப்பி அடிக்காத, அடக்கமானது" என்கிறார் கிருஷ்ண காந்த்.

பஞ்சாபிலுள்ள தரன் தரன் பகுதியைச் சேர்ந்த கோட் முகமதுகான் கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணகாந்த். எழுபது வயதைக் கடந்தவர். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில், மாணவராக இருந்தபோது, லாகூரில் பங்கெடுத்துக் கொண்டவர். 66 முதல் 77 வரை ராஜ்ய சபையிலும், 80ல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

கட்சி அரசியலில் பணத்தின் செல்வாக்கு அபரிமிதமாக இருந்ததை எதிர்த்துப் போர்க் கொடி தூக்கிய அந்த நாளைய 'இளந் துருக்கியர்' குழுவில் முக்கியமானவர்.

கிருஷ்ணகாந்த்தைத் துணை ஜனாதிபதியாக நியமிக்க குஜ்ரால் சொன்னார்:

"விடுதலைப் போரின் போது, என் தகப்பனாரும் கிருஷ்ணகாந்த்தின் தகப்பனாரும் ஒரே சிறையில் இருந்திருக்கிறார்கள். என் அம்மாவும் அவருடைய அம்மாவும் ஒரே சிறையில் இருந்திருக்கிறார்கள். நானும் அவரும் ஒரே சிறையில் இருந்திருக்கிறோம்!"

— எஸ். வி. என்.

அடுத்த இதழ்....

ஆண்டு மலர்!



- சுமார் இரண்டரை மணி நேரம் இளையராஜா நமக்களித்த சிறப்புப் பேட்டி!

- பற்களைப் பாதுகாப்போம்!

  — *மருத்துவர்கள் கூறும் ஆலோசனைகள்*

- என்றும் இளமையாக இருப்பது எப்படி?


  — *புதிய பகுதி*

- அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவுகள்; முதல் பரிசுக் கதை!

மற்றும்

நீங்கள் முற்றிலும் எதிர்பாராத ஒரு புதிய பகுதி!

அதிக பக்கங்கள்; அதே விலையில்!





1997 ஆகஸ்ட் 10
ஈசுவர ஆடி 25
மலர் : 56
இதழ் : 2

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



மாஜி முதல்வரின் மனைவி முதல்வர்!

லாலுவின் மனைவி நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜெயித்திருக்கிறார்; ஆனால் ஜனநாயக மரபுகள் படுதோல்வி அடைந்திருக்கின்றன!

ரப்ரி தேவி, தமது திறமையான பேச்சினால் பீஹார் சட்டசபையில் சிரிப்பலைகளை எழுப்பியிருக்கிறார்; ஆனால் கண்ணியமும் கடமையுணர்வும் சிரிப்பாய் சிரிக்கின்றன.


ராஜினாமா செய்த லாலு பிரசாத், தம் மனைவியை முதல்வராக நியமித்தது வடிகட்டின அயோக்கியத்தனம் என்பதைத் துணிவுடன் எடுத்துச் சொல்ல இன்று இந்தியாவில் ஒரு தலைவர்கூட இல்லை!

தமிழக முதல்வர் கருணாநிதி, 'ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் ஒரு மாநிலத்தின் முதல்வராக முடியுமே...' என்று வாதாடுகிறார்.

உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா ஒரு படி மேலே போய், ஒரு முதல்வர் தமது மனைவியை தமது இடத்தில் நியமிக்கக் கூடாது என்று அரசியல் சாசனம் தடை செய்யவில்லையே; லாலுவின் முடிவு அரசியல் சாசனத்துக்கு விரோதமாக இல்லாதபோது நாம் என்ன செய்ய முடியும்...?' என்று கைகழுவுகிறார்.

இவ்வாறு லாலுவைத் தொடர்ந்து நாட்டின் முன்னணித் தலைவர்களெல்லாம் ஜனநாயகத்தையும் அரசியல் சாசனத்தையும் கேலிக்கூத்தாக்குவதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசியல் சாசனம் உலகின் மிக நீண்ட அரசியல் சாசனங்களுள் ஒன்று. பிரிட்டிஷ் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசியல் சாசனத்துக்கோ எழுத்து வடிவம் கிடையாது. மிகத் தொன்மையான ஜனநாயக நாடு என்பதால், வழிவழியாக வந்த மரபுகளின்



அடிப்படையிலேயே பிரிட்டிஷ் அரசியல் சாசனம் இயங்குகிறது. சூழ்நிலைக்கு ஏற்ப, முழுக்க முழுக்க மக்கள் நலனை மனத்தில் கொண்டு தார்மிக அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளே மரபுகளாகப் பரிணமித்து வலுப்பெற்றிருக்கின்றன. இத்தனை மரபுகளையும் இந்திய அரசியல் சாசனத்துக்குள் இணைத்து எழுதுவது சாத்தியமில்லை.

இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய தலைவர்கள் வலுவான மரபுகளை நாமும் படிப்படியாக உருவாக்கி வளர்ப்போம் என்ற நம்பிக்கையுடன்தான் அதை அமைத்தார்கள். ஆட்சிப் பொறுப்பு வகிக்கும் தலைவர்களிடத்தில் அடிப்படையான யோக்கியதாம்சங்களும் தார்மிகப் பண்பும் இருக்கும் என்கிற நம்பிக்கையுடன்தான் செயல்பட்டார்கள்.


ஆனால், அரசியல் சாசன சிற்பிகளின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தூள் தூளாக்கும் பணியின் உச்சகட்டத்தை இந்த சுதந்தரப் பொன்விழா ஆண்டில் விமரிசையாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் நம் தலைவர்கள்.

கருணாநிதி சொல்வதுபோல், ஒரு ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் முதல்வராகலாம் தான். ஆனால், அப்படியொரு வசதி செய்யப்பட்டிருப்பதன் நோக்கம், தகுதியுள்ள ஒரு நபருக்கு, வேறு காரணங்களால் அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுவிடக்கூடாது என்பதுதானே தவிர, தகுதியே இல்லாதவர்களை முதல்வராக்கி வேடிக்கை பார்க்கலாம் என்பதல்ல.

இந்திரஜித் குப்தா சொல்வது போல், மனைவி முதல்வராவதை அரசியல் சாசனம் ஆட்சேபிக்கவில்லைதான். ஆனால், மாஜி முதல்வரின் மனைவி என்ற ஒரே தகுதிக்காக ஒருத்தர் முதல்வராக்கப் படலாம் என்றும் நமது அரசியல் சாசனம் கூறவில்லை!

தாங்கள் பேசுவது சாரமற்ற வெற்று வாதம் என்பது இந்தத் தலைவர்களுக்குத் தெரியாதா என்ன...? தெரிந்தே பேசுகிறார்கள் என்பதுதான் கூடுதல் வேதனை!

ஏன் இவ்வாறு பேசுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். லாலு நம்பிக்கை வாக்கெடுப்பு கோரியபோது வாக்களிக்காமலிருந்து மறைமுக ஆதரவு தந்த பீஹார் சட்டசபை காங்கிரஸ், ரப்ரி தேவிக்கு நேரடி ஆதரவே வழங்கி வாக்கெடுப்பின்போது உதவியிருக்கிறது. காங்கிரஸ் ஆதரவை முழுக்க முழுக்க நம்பியிருக்கும் ஐக்கிய முன்னணியினர், அக்கட்சி ஆதரிக்கும் ஒரு நபரை எதிர்ப்பது



அரசியல்ரீதியாகப் பாதுகாப்பாய் இராது; ஆட்சிக்கு ஆபத்து வரக்கூடும் என்று எண்ணுவது ஒரு காரணம். எந்த விவகாரமானாலும் தவறாமல் விஷமத்துடன் பூசப்படும் ஜாதி சாயம் இன்னொரு காரணம். எத்தகைய தவறு செய்தாலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரை வெளிப்படையாக, ஆணித்தரமாகக் கண்டிப்பது 'பாவம்' என்கிற அளவுக்கு இங்கே ஜாதி அரசியல் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

அரியலூர் ரயில் விபத்து நிகழ்ந்தபோது, லால்பகதூர் சாஸ்திரி ராஜினாமா செய்தார். இலாகா சார்ந்த தவறுக்கே தார்மிகப் பொறுப்பேற்றார். ஒரு மரபை உருவாக்கினார். இன்றோ கிரிமினல் குற்றச்சாட்டுக்குப் பிறகும்கூட ராஜினாமா செய்ய ஒரு முதல்வர் தயாராயில்லை. முடிந்தவரை முரண்டு பிடித்துவிட்டு, பிறகு மனைவியை முதல்வராக்கி அவர் மூலம் தாமே ஆட்சி நடத்தப் பார்க்கிறார்.

பழைய நல் மரபுகளைக் காற்றில் பறக்க விடுவதுமல்லாமல், நம் தலைவர்கள் தினமொரு தவறான மரபை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். முதல் நாள், மனைவியை முதல்வராக நியமிக்கும் தவறைச் செய்தார் லாலு. மறுநாள், அது மற்றொரு தவறான மரபுக்கு வழிவகுத்தது - ரப்ரிதேவியின் அமைச்சரவையில் 75 அமைச்சர்கள் இடம்பெறுகிறார்கள்! சட்டமன்ற அங்கத்தினர்களில் பத்து சதவிகிதத்துக்கு மேல்கொண்டு அமைச்சரவை அமைக்கக்கூடாது என்பது மரபு. இங்கேயோ, ஆளும் கட்சியிலேயே ஐம்பது சதவிகிதத்தினர் அமைச்சர்கள்!

இந்த அவலமான சூழ்நிலையிலும் பிரதமர் 356ஐப் பிரயோகிக்காமல் இருப்பது மேலுமொரு தவறான மரபாகவே உறுதிபெறும். அந்தச் சட்டப் பிரிவே இதுபோன்ற நெருக்கடிகளுக்கென ஏற்பட்டதுதான். இப்போதும் அதைப் பிரயோகிக்காமல் இருப்பது அதை துஷ்பிரயோகம் செய்வதற்குச் சமம்தான்.

இன்னும் சில தினங்கள் சென்றால், லாலு சிறைப்பட, எம்.எல்.ஏக்கள் ஆதரவை வாபஸ் பெற, ரப்ரி தேவி அமைச்சரவை கவிழவும்கூடும். ஆனால் அதற்காகக் காத்திராமல், பிரதமர் உறுதியுடன் செயல்பட்டு, பீஹார் நாடகத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுடன், தாம் ஒரு வலிமையான பிரதமர் என்றும் நிரூபித்தாக வேண்டும். மத்திய அமைச்சரவை ஐந்தாண்டு நிலைப்பதைவிட, நாட்டில் தார்மிகப் பண்புகளும் ஜனநாயக மரபுகளும் நிலைப்பது முக்கியமானது.

● தில்லி கிரீன் பார்க் பகுதியில் உள்ள உபஹார் சினிமா தியேட்டர் தீ விபத்து நடந்த பிறகுதான், எத்தனை சினிமா தியேட்டர்கள் மின்சார விஷயத்தில் அத்து மீறல்கள் செய்திருக்கின்றன என்று தெரிய வந்திருக்கிறது. தில்லி மின்சார வாரியம் கண்டு கொள்ளாமல் விட்டிருக்கிற பல விதி மீறல்களுக்குக் காரணம், வேறு என்ன? பணம்தான்!

● பீகார் மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் ஜகன்னாத் மிஸ்ராவும் சிக்கிக் கொண்டிருப்பது இழப்பு ஏற்படுகிறது என்பதே முக்கிய காரணம். "பஞ்சாபில் உள்ள விவசாயிகளை நான் சந்தித்து, இது விஷயமாகப் பேசினேன். அவர்கள் இலவச மின்சாரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. தடையில்லாமல் மின்சாரம் கிடைக்க வேண்டும் என்று மட்டுமே அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்!" என்று வெளிப்படையாகச் சொல்லி விட்டார். இலவச மின்சாரம் என்ற சலுகையை வைத்துக் கொண்டு, பணக்கார விவசாயிகள் பயன் அடைவதை மது தண்டவதே விரும்பவில்லை.

● செயின்ட் கிட்ஸ் போலி ஆவண வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவை விலக்கி விட்ட பிறகு, இனி பழையபடி தீஸ் ஹஸாரி கோர்ட்டிலேயே தொடர்ந்து வழக்கை நடத்தலாம் என்று தில்லி போலீஸும், சிறப்புப் பாதுகாப்புப் படையும் கேட்டுக் கொண்டதை நீதிபதி அஜித் பாரிஹோக், ஏற்றுக் கொண்டு விட்டார். விக்ஞான் பவனில் ஏராளமாகச் செலவு செய்து, ஏர்கண்டிஷனர்களை எல்லாம் பொருத்தி, பொது மக்களின் வரிப்பணம்தான் வீணானது!

● கடந்த மூன்று வருடங்களாக, இலாகா வாரியான செலவு விவரங்களைத் தாக்கல் செய்யாததால், பீகார் அரசுக்கு இந்த வருடம் மத்திய அரசு குறைந்த நிதியுதவியே அளிக்கும். ஏராளமான நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பியும், பீகார் அரசு செலவுக் கணக்கை அனுப்பவில்லையாம். அதிகாரிகள் தயாரித்தால் கூட,



கசரியின் மகிழ்ச்சிக்கு காரணம் என்ன?

பதில் சீதாராம் கேசரிக்கு உள்ளூரத் திருப்தி. தம்மை எதிர்த்து அறிக்கைகள் விட்டவர் இன்று வசமாக மாட்டிக் கொண்டார் என்பது தான் கேசரியின் மகிழ்ச்சிக்குக் காரணம்!

● தில்லி மின்சார போர்டு தலைவர் நவீன் சாவ்லா வசிக்கும் கிழக்கு நிஜாமுதீன் பகுதியில் பவர் கட் என்பதே கிடையாது. ஒரு நிமிடம் கூட மின்சாரம் தடைப்படாது. ஆனால் பிரதமர் குஜ்ரால் வசிக்கும் மகாராணி பாக் பகுதியில் குறைந்தபட்சம் இரண்டு மணி நேர பவர் கட் உண்டு!

● திட்டக் குழு துணைத் தலைவர் மது தண்டவதே, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதை ஆதரிக்கவில்லை. மாநில மின்சார வாரியங்களுக்கு இதனால் பெரிதும்

லாலு அனுப்பச் சம்மதிக்கவில்லையாம். இனி மேல் எப்படியோ!

● தில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகமான AIIMS ல்தான், நோயாளிகளும், மருத்துவ ஊழியர்களும் ஹெச்.ஐ.வி. எனப்படும் எய்ட்ஸ் கிருமித் தொற்றுக்கு அதிக பட்சமாக ஆளாகியிருக்கிறார்கள் என்று, அங்கேயே நடத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது! ஆபரேஷன் தியேட்டர்களில் ஆகட்டும்,

பிரசவ வார்டுகளில் ஆகட்டும், பெரும்பான்மையான மருத்துவர்களும், மருத்துவ ஊழியர்களும், கையுறைகள், முகமூடிகள், கண்மூடிகள், காலணிகள், மேலங்கிகள் போன்ற பாதுகாப்புச் சாதனங்களையே உபயோகிப்பதில்லையாம்.

● பரீதாபாதில் நடந்த இரயில் விபத்தில், ரயில்வே பாதுகாப்புப்படையும், உள்ளூர் போலீசும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, மளமளவென்று செயலில் இறங்கி, விபத்துக்கு உள்ளானவர்களை மீட்டவர்கள், காக்கி அரை நிஜார் அணிந்த ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் தான். இரயில்வே அதிகாரிகள் அந்த இடத்தை அடைவதற்கு முன்னாலேயே இந்த ஊழியர்கள் மீட்புப் பணியைத் தொடங்கி, சிக்கிக் கொண்டவர்களைப் பத்திரமாக மீட்டு வந்தார்கள். வெள்ளப் பெருக்கம் ஆகட்டும், நில நடுக்கம் ஆகட்டும், ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் முதலில் களத்தில் இறங்கிவிடுகிறார்கள். எதையும், யாரையும் எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை.



• ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களின் சேவை...

● தில்லியில் ஆள்கடத்தல், கத்திமுனைக் கொள்ளை, திருட்டு எல்லாமே பெருகிவிட்டதால், தில்லி காவல்காரர்களின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் 7000 பேராவது அதிகரிக்க வேண்டும் என்று, தில்லி முதல்வர் சாகிப் சிங் வர்மா, உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்! ஒரு மாநில முதல்வரே இத்தனை குற்றங்களைப் பட்டியலிட்டு எழுதியிருப்பது விசித்திரமல்ல; வேதனை.

● தில்லியில், பல தனியார் கான்வென்ட்டுகளில் மாணவ-மாணவிகள் 'டைம்ஸ் ஆஃப் இண்டியா' நாளிதழைக் கட்டாயமாக வாங்கியே ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். மாதச் சந்தாவான நாற்பத்தைந்து ரூபாயை பள்ளிக்கூடச் சம்பளத்தோடு சேர்த்து வசூலித்து விடுகிறார்கள்!

● ஜோகிந்தர் சிங் சி.பி.ஐ. இயக்குநராகப் பதவி ஏற்றவுடன், புதிய சோபா செட்டுகள், திரைச் சீலைகள், பட்டனை அழுத்தினால் திறக்கிற கதவு என்று ஒரேயடியாக நவீனப் படுத்தினார் அலுவலகத்தை. சர்மா வந்து எல்லாவற்றையும் அகற்றி விட்டார். முன்பு எப்படி இருந்ததோ அப்படியே இருந்தால் போதும் என்று சொல்லி விட்டாராம்!

● குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனின் மனைவி உஷா நாராயணன், பர்மாவைச் சேர்ந்தவர். பல தொண்டு நிறுவனங்களுக்குத் தலைமை தாங்கி அமைதியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். கணவரின் தொகுதியான ஒத்தப்பாலத்தில் பெண்கள் விடுதி கட்டிக் கொடுத்திருக்கிறார். இகோபானா, போன்சாய் போன்ற ஜப்பானிய மலர் அலங்கார - மர வளர்ப்புக் கலையில் ஆர்வம் உள்ளவர். தென் பே மின்ட் எனும் பர்மிய எழுத்தாளரின் சிறுகதைகளை, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வருகிறார்.

— நியூஸ்வாலா

டெண்டுல்கர் நீக்கப்படலாம்!

— மொகீந்தர் அமர்நாத் பேட்டி

முன்னாள் இந்திய கிரிக்கெட் பிரபலம் மொகீந்தர் அமர்நாத் சமீபத்தில் சென்னை வந்திருந்தார். அவரைச் சந்தித்து, தற்போதைய இந்திய கிரிக்கெட் அணி, தேர்வுமுறை குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். பவுன்ஸரை ஹூக் ஷாட் அடிப்பதில் மொகீந்தர் காட்டும் சாமர்த்தியம் ரொம்பப் பிரபலம். அதே போல தேர்வுக் குழுவையும் விளாசித் தள்ளினார். மொகீந்தர். பேட்டியிலிருந்து:

கேள்வி : இலங்கையில் விளையாடும் இந்திய அணி குறித்து உங்கள் கருத்து?

பதில் : நான் புதிதாகச் சொல்ல என்ன இருக்கிறது? கேப்டன் சச்சினே, தமக்கு இரண்டாம் தர அணிதான் தரப்பட்டுள்ளது என்று சொன்ன பிறகு நான் என்ன சொல்லுவது?

கேள்வி : இந்திய அணியில் பௌலிங் சரியாக இல்லை என நினைக்கிறீர்களா? அணியில் ஸ்ரீநாத் இடம் பெறாதது ஒருபுறம் இருக்க, கும்ப்ளேவும் சரியாகப் பந்து வீசவில்லை என்று படுகிறதே?

பதில் : எல்லோரும் இந்திய அணியின் பௌலிங் சரியில்லை என்றுதான் கருதுகின்றனர். ஆனால் பேட்டிங்கில் பலமாக இருக்கிறோமே? சச்சின், கங்குலி, ராகுல், அஸார் ஆகியோர் தவிர கடைநிலை ஆட்டக்காரர்களும் (long tail வரிசை) எல்லா மேட்சுகளிலுமா ரன்கள் அடிக்கின்றனர். உலகிலேயே long tail enders உள்ள அணி இந்தியாவாகத்தான் இருக்கும்! பௌலிங் சரியில்லையென்றாலும் பேட்டிங் மூலம் அதை ஈடு கட்டலாமே. இலங்கை அணியினர் பௌலிங்கை விட பேட்டிங்கில்தான் சிறந்து விளங்குகிறார்கள். அந்த அணியில் உள்ள ஏழு பேட்ஸ்மேன்களில் இருவர் அல்லது மூன்று பேர் குறைந்த ரன்களில் ஆட்டம் இழந்தாலும் மற்றவர்கள் அதை ஈடு செய்கின்றனர். என் கருத்துப்படி இலங்கை அணியினர் தமது பேட்டிங், ஃபீல்டிங்கில்தான் பௌலிங்கை ஈடு செய்கின்றனர்.



கேள்வி : இந்திய அணித் தேர்வு சரியாக இல்லை என்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் கூறியது பற்றி...?

பதில் : சரியான பேத்தல். ஒரு தொடர் பாதி நடக்கும்போது அந்த அணியின் மானேஜரே இப்படிக் கூறுவது சுத்த பைத்தியகாரத்தனம்! வீரர்களைத் தேர்வு செய்யும் போது மதனும் கூட இருந்துதானே அணியைத் தேர்வு செய்தார்? அப்போது என்ன செய்தார் இவர்? அப்படியிருக்க, இப்படியா சச்சின் முதல் கும்ப்ளே வரை ஒவ்வொருவரைப் பற்றிக் குறை கூறுவது? இனிமேல் இந்த வீரர்கள் மதன்லாலை எப்படி மதிப்பார்கள்? மானேஜர் என்பவர் வீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து, அவர்களது பேட்டிங்கையோ பௌலிங்கையோ திருத்தி நடத்த வேண்டியவர். இப்

படி பத்திரிகை மூலம் குறை சொன்னால் நன்றாகவா உள்ளது. ஆனால் இதுவும் நன்மைக்கே! ஏன் எனில் இலங்கைத் தொடர் முடிந்தவுடன் முதல் பலி மதன்லால்தான்!

கேள்வி : வேறு யார் நீக்கப்படுவார் என எதிர்பார்க்கிறீர்கள்?

பதில் : நடக்க உள்ள டெஸ்ட் தொடரில் சச்சின் சரியாக விளையாடாத பட்சத்தில், அணி மோசமாக தோற்க நேர்ந்தால், அவர் நிச்சியம் காப்டன் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார் என எதிர்ப்பார்க்கிறேன்.

கேள்வி : அப்ப அடுத்த கேப்டன் யார்?

பதில் : அஸார்தான்!

கேள்வி : சரி. நீங்கள் முன்பு ''Bench of Jokers'' என தேர்வுக் கமிட்டியைக் கூறினீர்களே. இன்று அதில் மாற்றம் உண்டா?

பதில் : நான் ஏன் மாற்றம் செய்யணும்? தேர்வுக் கமிட்டி ஒழுங்காகத் தங்கள் பணியைச் செய்கிறார்களா என்ன? அவர்களது நிலைதான் அனைவரும் விமர்சனம் செய்யும்படி வந்து விட்டதே? இப்போதும் அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் இதை விட மோசமான, தகுதியான வார்த்தைகள் அகராதியில் இல்லை! (சிரிக்கிறார்)

கேள்வி : தேர்வுக் கமிட்டியையே அனைவரும் குறை கூறுகின்றனர்! அவர்கள் எப்படி வீரர்களைத் தேர்வு செய்கின்றனர் என நீங்கள் கூற முடியுமா?

பதில் : வெளியில் இருந்து பார்க்கத்தான் தேர்வு கஷ்டம் போல தோன்றும். ஆனால் இவர்கள் ரொம்ப சுலபமாகத் தேர்வு செய்கின்றனர்! இருக்கும் 5 தேர்வாளர்களும் தங்களுக்கு வேண்டிய 5 வீரர்களை முதலில் சொல்லி விடுவர். பின்பு பேச்சு வார்த்தையில் ஒரு தேர்வாளருக்கு மூவர் என தேர்வு செய்யப்படுகின்றனர். கேப்டனின் விருப்பப்படி 16வது வீரர் தேர்வு செய்யப்படுவார். உதாரணமாக சச்சின் வினோத் காம்பளியையும், அஸார் ராஜுவையும் தேர்ந்து எடுத்தனர்.



• மொகீந்தர் அமர்நாத்

கேள்வி : தேர்வுக் கமிட்டி எப்படிச் செயல்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

பதில் : தேர்வுக் கமிட்டியினர் பிராந்திய வாரியாகத் தேர்வு செய்யப்படக் கூடாது. நல்ல அனுபவம் வாய்ந்த, 50 டெஸ்டுகள் ஆடிய வீரர்கள் மூவர் போதுமே! இந்தியாவில் கிடைக்க மாட்டார்களா? வெங்சர்க்கார், கவாஸ்கர், ஸ்ரீகாந்த், கபில் தேவ் போல சிறந்த, அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்ட தேர்வுக் கமிட்டி தேவை. ஏன் எனில் விளையாட இருக்கும் அணிகளைப் பற்றியும், அந்த நாட்டு பிட்சுகளின் தன்மை பற்றியும் அவர்களுக்குத் தான் தெரியும்! உதாரணமாக, வெஸ்ட் இண்டீஸ் பிட்ச் இந்தியாவை விட 'slow pitches' கொண்டது. எனவே இந்தியாவில் நன்கு விளையாடிய வீரர்கள் புதுமுகங்களாக இருந்தாலும் பொதுவாக அங்கே சிறப்பாக ஆடுவார்கள். ஆனால் ஆஸ்திரேலிய பிட்சுகள், தென் ஆப்பிரிக்க பிட்சுகள் ஆகியவை நல்ல வேகம் வாய்ந்த பிட்சுகள். இங்கு நேரிடையாகப் புதுமுகங்களை விளையாட விட்டால் ஆபத்து. இதைப் போல பல டெக்னிக்கல் மேட்டர்களெல்லாம் தேர்வுக் கமிட்டிக்குத் தெரிந்து இருக்கணும். ஆனால் இப்போதுள்ள தேர்வுக் கமிட்டி உறுப்பினர்களுக்குத் தெரியுமா? சந்தேகம்தான்!

கேள்வி : சரி. நீங்களும் நிறைய டெஸ்டு விளையாடிய அனுபவம் மிக்கவர்தான். உங்களுக்குத் தேர்வுக் கமிட்டியில் இடம் பெறும் வாய்ப்புக் கிடைத்தால் ஏற்றுக் கொள்வீர்களா?

பதில் : நிச்சயம் ஏற்றுக் கொள்வேன். ஆனால் என்னைப் போல 'out spoken persons'க்கு வாய்ப்புக் கொடுக்க மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம். அதுவும் எனக்கு நன்றாகவே தெரியும்!

கேள்வி : உங்களது தற்போதைய கோச்சிங் பணி பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

பதில் : மிகவும் மகிழ்ச்சியாக, நிம்மதியாக இந்த கோச்சிங் பணியில் ஈடுபட்டுள்ளேன். நான் முதன் முதலில் சொல்லிக் கொடுத்த பங்களாதேஷ் அணிக்கு இன்று சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அங்கீகாரம் கிடைத்தது கண்டு ரொம்ப மகிழ்ச்சி. அந்த அணியும் இலங்கையில் ஆசியக் கோப்பையில் நன்றாகவே விளையாடினார்கள். அதே போல இப்போது கோச்சிங் கொடுக்கும் கென்யாவும் இன்னும் ஐந்து வருடத்தில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் தங்கள் திறமையைக் காட்டுவார்கள் என்பது நிச்சயம்!

பேட்டி : **சிம்மம்**



"ஒரு 'அண்டர் வர்ல்ட் டான்' அரசியல் தலைவனாக உருவாக முடியுமா?" இதுதான் இன்று மும்பைவாசிகளை உலுக்கிக் கொண்டிருக்கும் மில்லியன் டாலர் கேள்வி! கீழ் மட்டத்துக்கு அருண் காவ்லி ஒரு 'ராபின் ஹுட்'! மேல் மட்டத்துக்கு ஒரு எக்ஸ்டார்ஷனிஸ்ட் (extortionist) நடுநிலையாளர்களான நடுத்தர வர்க்கம்தான், 'காவ்லி - காவலில் இருக்க வேண்டியவனா? காவல் தெய்வமா?' என்ற பட்டி மன்றத்துக்குத் தீர்வு காணத் தெரியாமல் விழித்துக் கொண்டிருப்பவர்கள்.

என்னதான் மீடியாக்காரர்கள், காவ்லியின் 'தகடிசால்' ராஜ்ஜியத்தை விஸ்தாரமாக



• அருண் காவ்லி : கைது செய்யப்பட்டபோது...

மும்பையைக் கலக்கும் அருண் காவ்லி!

விவரித்து எழுதி, 'காவ்லி காப்பியத்தை'ப் பாடினாலும், அதை எல்லாம் ஊர்வம்பு கேட்கும் சுவாரஸ்யத்துடன் மட்டுமே இதுவரை சாதாரணர்கள் எதிர் கொண்டனர். அருண் காவ்லியின் பேட்டி சில பத்திரிகைகளில் வெளி வந்த போதும், அரசியல் ஞானியாக யாரும் காவ்லியை ஏற்கவில்லை; மற்ற அரசியல் தலைவர்கள் பற்றி அவர் வாயிலாக ஏதாவது வண்டவாளங்கள் வெளிவருமா என்பதிலேயே ஆர்வமாக இருந்தார்கள்.

ABS (அகில பாரதீய சேனா) என்றொரு அரசியல் கட்சியை காவ்லி ஆரம்பித்தபோது, அரசியலில் ஏபிசி தெரியாதவர்கள் கூட 'இது தேவையா' என்பதாக அங்கலாய்த்தார்கள். மும்பை மாநகராட்சித் தேர்தலின் போது, ஆர்ப்பாட்டமாக ஆரம்பிக்கப்பட்ட ஏ.பி.எஸ். கட்சியின் வேட்பாளர்கள், ஆங்காங்கே பெரிய எதிர்பார்ப்புகளுடன் போட்டியிட்டாலும், முடிவு பூஜ்யமென்றாகிவிட்டது. அரசியலில் காவ்லியின் அத்தியாயம் முற்றுப் பெற்றுவிட்டதாகப் பலரும் (நிம்மதிப்) பெருமூச்சு விட்டனர்.

ஆனால், அண்மையில் நடந்த (அம்பேத்கர் சிலைக்கு) செருப்பு மாலைக் கலவரங்களை ஒட்டி, அருண் காவ்லி நடத்திக் காட்டிய மாபெரும் ஊர்வலம், எல்லோரையும் ஒரு கலக்கு கலக்கியிருக்கிறது. செல்வாக்குள்ள அரசியல் கட்சிகளாலேயே சமாளிக்க முடியாதபடி ஒரு டான் நடத்தியிருக்கிறாரென்றால்... லல்லுவையே தோற்கடித்து விடுவார் போலிருக்கிறதே என்ற புதிய பயம் மெதுவாகத் தலை தூக்கத் தொடங்கியது.

இதை ஒட்டி, அருண் காவ்லி தன் தொண்டர் படைக்கு 'சம்பளப் பட்டுவாடா' செய்யும் விவரங்களை, 'ஏஷியன் ஏஜ்' பத்திரிகை, விலாவாரியாக விவரித்தது. ஆளைக்

'குனோஸ்' செய்ய எத்தனை லட்சங்கள், 'தட்டு'வதற்கு எத்தனை ஆயிரங்கள், 'மிரட்ட' எத்தனை நூறுகள்... போன்ற புள்ளி விவரங்களையும், ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை 'பணியாளர்கள்' 'சேவை' செய்கிறார்கள் என்பதையும் தடபுடலாக வெளியிட்டது. கூடவே, பேரணி நடத்தியதில் அருண் காவ்லிக்கு எக்கச்சக்க செலவு என்றும், அதனால் அவரது தொழிலாளர்களுக்கு மூன்று மாத சம்பள பாக்கி என்றும், அதைத் தாங்கள் கற்ற 'கலை'யின் அடிப்படையில், மக்களிடையே தம் 'கைவரிசை'யைக் காட்டி சம்பாதித்துக் கொள்ளும்படி காவ்லி ஆணையிட்டு விட்டார், அதனால் மும்பையில் 'க்ரைம் ரேட்' ஏறுவதற்கு வாய்ப்பிருக்கிறதென்றும், ஒரு குண்டைத் தூக்கிப் போட்டது. இதற்கு காவ்லியின் 'ரியாக்ஷன்' என்ன எனத் தெரிந்து கொள்ள அநிந்திதி ராமசாமி என்ற பெண் பத்திரிகையாளரை அனுப்பியும் வைத்தது.


முன்பு, பெண்களின் பாதுகாப்போடு பத்திரமாக அமராவதி ஜெயிலிலிருந்து காவ்லி மும்பை வந்து சேர்ந்ததற்கு நன்றிக் கடனாகவாவது தாய்க்குலத்திற்கு பாதுகாப்பளித்திருக்க வேண்டாமோ? பத்திரிகை மீதிருந்த கோபத்தை பத்திரிகையாளர் மீது காட்டி சரமாரியாகக் கல்லெறிய ஆரம்பித்து விட்டார்கள். ரத்தம் சொட்ட சொட்ட, அருகிலிருந்த அக்ரிபாடா போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று, அநிந்திதியும், ஆசிரியரும் புகார் செய்தனர். உடனடியாக போலீஸ் குழு ஒன்று புறப்பட்டுச் சென்று, காவ்லியைத் தரதரவென்று இழுத்து வந்து, (வழக்கம் போல் கதவுகளைத் தாளிட்டு, பாதுகாப்பு வளையம் அமைத்த தாய்க்குலத்தை விலக்கி) உள்ளே தள்ளிவிட்டனர். திரளாகக் காவல் நிலையம் முன் கூச்சலிட்டவர்களை சாந்தப்படுத்த, மறுநாளே அவரை பெயிலில் விடுவிப்பதாகச் சொல்லிவிட்டு, அவர்கள் கலைந்ததும், மூச்சுக் காட்டாமல், காவ்லியை பந்தோபஸ்து மிக்க, க்ரைம் ப்ராஞ்ச் தலைமையகமான க்ராஃபோர்டு மார்கெட்டுக்கு மாற்றி விட்டனர் போலீஸார்.

இந்த நாடகம் அரங்கேறிய விஷயம் பரவியதும் காவ்லியின் மனைவி ஆஷாவும் தாய் லக்ஷ்மியும் பெண்களைத் திரட்டி கோஷமிட, உடனே 'பந்த்' அறிவிக்கப்பட்டது! ஒரு கலவரம் முடிந்த கையோடு மற்றொன்றா என்ற பீதி மக்களைக் கவ்வியது; பலர் தங்கள் குழந்தைகளை ஸ்கூல், காலேஜுக்கு அனுப்பவில்லை; நிறைய பள்ளிகள், கடைகள், ஃபேக்டரிகள் மூடிக் கிடந்தன. திறந்திருந்தவற்றைக் கல்லெறிந்து, மூடவைத்தனர். கார்ப்பொரேஷன் பள்ளிகள் கூட, போலீசை வாயிலில் நிறுத்தியிருந்தன. பல ரயில்கள் கான்சலாகி விட்டன.

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 'பெயில்' அளிக்கப்பட்டாலும், அரசு, உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்வதற்காக, இந்த உத்தரவு தாற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அரசின் ஆதரவு இல்லை என்பதாலும், சிவசேனை அகில பாரதீய சேனையின் எதிரி என்பதாலும், சட்டம் ஒழுங்குப் பிரச்னைகள் எல்லை மீறிப் போகவில்லை. இருந்த போதிலும், ஒரு டானின் கைதுக்கு இத்தனை அமளி துமளியா என்று லேசான கவலை மக்களிடையே கசப்புணர்ச்சியை ஏற்படுத்தாமலில்லை!

முன்பு, காவ்லியை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தபோது, உயர் நீதிமன்றம் அவரை விடுவித்ததுமல்லாமல், போலீஸ் கமிஷனருக்கே அபராதமும் விதித்தது. இது அருண் காவ்லி தலையில் மகுடத்தை ஏற்றியது! போதாக்குறைக்கு சிவசேனை எம்.பி. ரவாலே வேறு, "காவ்லி என் நண்பன்" என்ற பாட்டை, காசட் வெளியிடாத குறையாகப் பாடி வருகிறார். எல்லாம் எங்கே கொண்டு விடப் போகிறதோ?


மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீ ராஜ்**



கருத்து: செங்குன்றம் கே. ரமேஷ்ராமின்


அஸ்வினி விருப்பதாரர்களுக்கு ஒரு தங்கப் புதையல் பரிசுத்திட்டம்

ரூ. 65,000/- மதிப்புள்ள 23 பரிசுகளை வெல்லுங்கள்!




முதல் பரிசு
ரூ. 20,000/-
மதிப்புள்ள
40 கிராம்
தங்க நெக்லஸ்





மூன்றாவது பரிசு
ரூ. 5000/- மதிப்புள்ள
10 கிராம் தங்க மாலை





இரண்டாவது பரிசு
ரூ. 10,000/-
மதிப்புள்ள
20 கிராம்
தங்க மாலை



நான்காவது பரிசு
20 நபர்களுக்கு
ஒவ்வொருவருக்கும்
ரூ. 1500/- மதிப்புள்ள
3 கிராம் தங்க டாலர்கள்

ரூ. 1/- தள்ளுபடி



கீழ்க்கண்ட இந்த கேள்விகளுக்கு சரியான விடை எழுதி பரிசுகளை வெல்லுங்கள்

1. அஸ்வினி ஹேர் ஆயில் விளம்பரத்தில் அஸ்வினி என்பது எத்தனை முறை வருகிறது?
   சன் டிவி, டாப் டென், செய்தி, விசுவின் அரட்டை அரங்கம், ராஜ் டிவி சரிகமபதநி, நாதம் நாதம், ராகம் சங்கீதம், சாய் பஜன். தொலைக்காட்சியில் நீங்கள் கேட்டவை.
   விடை ____________________
2. புதிதாக வந்த கூடுதல் சக்தியுள்ள அஸ்வினி ஹேர் ஆயிலில் உள்ள புதிய குணநலம் என்ன?
   விடை ____________________
3. அஸ்வினி ஹேர் ஆயில் பற்றி ஒரே வாக்கியத்தில் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி அனுப்புங்கள்
   விடை ____________________

இச்சலுகை ஆகஸ்ட் 15 வரை மட்டுமே

பெயர் ____________________

விலாசம் ____________________

நாள் ____________________

கையொப்பம்

எல்லா சரியான விடைகளையும் எழுதிய அதிருஷ்டசாலிகளுக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து பரிசுகள் வழங்கப்படும்.
குலுக்கலில் நேரடியாக கலந்துகொள்பவர்கள் கூப்பனை பூர்த்தி செய்து கம்பெனிக்கு அனுப்பலாம்.
இந்த குலுக்கலில் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
"அன்புள்ள டீலர் அவர்களே: இந்த கூப்பனை கொண்டு வருபவர்களுக்கு அஸ்வினி ஹேர் ஆயில் வாங்குவதன் பேரில் ரூ 1/- தள்ளுபடி செய்து கொடுக்கவும்.
குலுக்கல் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

அஸ்வினி ஹோமியோ & ஆயுர்வேதிக் பிராடக்ட்ஸ் லிட்.,
யூனிட் நெ. 6, சியாம்ஸ் கார்டன், நெ. 10, காதர் நவாஸ்கான் ரோடு, சென்னை-600 006.

அருகிலுள்ள கடையில் இந்த கூப்பனை கொடுத்து ஒரு ரூபாய் தள்ளுபடியில் வாங்குங்கள்

11:29

18

மூலம் : டேனியல் ஸ்டீல்

ஆஸ்பத்திரியில், அதுவும் போவோரும் வருவோரும் நிறைந்திருக்கும் வெயிட்டிங் அறையில் உரக்கப் பேசுகிறோமே என்பதை முதலில் பேஜ் பொருட்படுத்தவில்லை. பிறகு பல்லைக் கடித்துக் கொண்டு குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

"ஏன்? நான் சொல்வதில் என்ன தப்பு? இவ்வளவு ஆன பிறகு நீங்கள் வீட்டை விட்டுப் போவதுதானே மேல்! எதற்காகத் தயங்குகிறீர்கள்? உங்கள் மனசில் என்னதான் நினைப்பு? என்னோடு தொடர்ந்து குடும்பம் நடத்தலாமா வேண்டாமா என்று தயக்கமா? அல்லது அந்தப் பெண்பிள்ளையை நம்பிப் போகலாமா என்ற தயக்கமா? அல்லது வீட்டை விட்டுப் போகப் பயமாயிருக்கிறதா? என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், பிராட்? சொல்லுங்கள்!" என்று பொரிந்து தள்ளினாள்.

பிராட் மீண்டும் சங்கடத்துடன் சுற்றுமுற்றும் இருப்பவர்களை ஒருமுறை பார்த்துக் கொண்டான். "கடவுளே! இதெல்லாம் உனக்குத் தெரியாமலே இருந்திருக்கக் கூடாதா? தெரிந்ததுதான் தெரிந்தது. இப்படித்தான் தெரிந்திருக்க வேண்டுமா?" என்றான்.

"எப்படியும் தெரியாமலா போகும்? வெளியூர் போவதாகப் பொய் சொல்லி விட்டு நீங்கள் இங்கேயே அந்த ஸ்டிபானியிடம் கொட்டம் அடித்துக் கொண்டிருப்பதை வேறு யாராவது பார்த்துச் சொல்லியிருப்பார்கள். இல்லாவிட்டால் நானே எங்காவது உங்கள் இரண்டு பேரையும் சேர்ந்து பார்த்திருப்பேன். என்னதான் சொல்ல வருகிறீர்கள்? உங்கள் காதல் விவகாரம் ரொம்ப சீரியஸாக முற்றிவிட்டது என்று நேற்று ராத்திரி சொன்னீர்களே? அப்படி இல்லையா? நான்தான் தப்பாகக் காதில் வாங்கிக் கொண்டு விட்டேனா?"

'ஆமாம், நீ தப்பாகப் புரிந்து கொண்டு விட்டாய்' என்று அவன் சொல்ல மாட்டானா என்று அவன் உள்ளம் ஏங்கியது. அதே சமயம், அவன் மனத்தின் இன்னொரு பகுதி, இனி இவர் என்ன சொன்னாலும் தனக்கும் இவருக்கும் உள்ள உறவு கெட்டது கெட்டதுதான் என்பதை உணர்ந்திருந்தது. இப்போதுள்ள கோபம் வேண்டுமானாலும் ஒருநாள் தணியக் கூடும். ஆனால் இனிமேல் இவர் மீது ஒரு போதும் நம்பிக்கை ஏற்படப் போவதில்லை. பழைய பிரியம் திரும்பப் போவதில்லை...

"இல்லை, பேஜ் நீ சரியாகத்தான் புரிந்து கொண்டிருக்கிறாய்," என்று கூறி அவன் இதயத்தை நொறுக்கினான் பிராட். "ஸ்டிபானியுடன் உள்ள உறவை முறித்துக் கொள்வதாக நான் சொல்லவில்லை. ஆலி இப்படிக் கிடக்கும்போது, நம்மைப் பற்றி முடிவு எடுக்க இது சமயமில்லை என்றுதான் சொன்னேன்..."

"ஓகோ, அப்படியா?" என்று உரக்க ஆரம்பித்தவள் உடனே தன்னை மறுபடியும் கட்டுப் படுத்திக் கொண்டாள். "உங்கள் அழகான காதலியைப் பார்க்காமலும் இருக்க மாட்டீர்கள். என்னையும் வீட்டை விட்டுப் போகச் சொல்ல மாட்டீர்கள். நீங்களும் போக மாட்டீர்கள். ஏனென்றால், அதற்கெல்லாம் இது சமயமில்லை! அப்படித்தானே? நோ பிராப்ளம், பிராட். எத்தனை காலம் வீட்டில் தங்கியிருக்க முடியுமோ அத்தனை காலம் இருங்கள். ஆனால் ஞாபகமாக உங்கள் கல்யாணத்துக்கு ஒரு இன்விடேஷன் மட்டும் எனக்கு அனுப்பி விடுங்கள்!"

அவள் கண் முனைகளைக் கண்ணீர் உறுத்திக் கொண்டிருந்தது. உதட்டில் கோபம் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், ஆஸ்பத்திரி வெயிட்டிங் அறையில், உள்ளே அருமை மகள் நினைவற்றுக் கிடக்கும் இந்தத் தருணத்தில், பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதை அவளும் உணர்ந்திருந்தாள். அவனும்

தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

உணர்ந்திருந்தான்.

"சரி, விடு. இப்போதைக்கு எல்லாம் இப்படியே இருக்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்," என்றான் பிராட்.

''எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்!" என்று இகழ்ச்சியுடன் சிரித்தாள் பேஜ். "நீங்கள் உங்கள் இஷ்டம் போல நடந்து கொள்ளுங்கள்! நான் கண்ணை மூடிக் கொண்டு இருக்கிறேன்! சரிதானா?''

"எதுவானாலும் நீ முடிவு செய். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை."

''இருக்கட்டும். நானே முடிவு செய்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்கிறேன். நீங்கள் இப்படியே இருக்க நான் விட்டு விடுவேனென்று மட்டும் நினைக்காதீர்கள். எத்தனை தொல்லை தர முடியுமோ அத்தனையும் தரத்தான் போகிறேன். உங்கள் வினையை நீங்கள் அனுபவிக்காமல் நழுவ முடியாது!'' என்று பேஜ் சீறியபோது அவனால் எதுவும் பேச முடியவில்லை. ஒரு நீண்ட நிமிடம் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான். பிறகு கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். கொஞ்ச நேரம் தனியே இருக்க அவன் தவித்தான். உணர்ச்சிகள் கொந்தளிக்கும் இந்த நேரம், முகத்தின் மீது யதார்த்தம் மோதும் இந்தக் கணம், அவனால் தாள முடியாத பயங்கரமாக இருந்தது. கண் இமைக்கும் வேளைக்குள் தங்கள் வாழ்க்கை தலைகீழாக மாறி விட்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

சரி, பிறகு பேசலாம். நான் ஆபீசுக்குப் போக வேண்டும்," என்றான். பேஜையும் ஆலிஸனையும் இந்த

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்



ஆஸ்பத்திரியையும் விட்டு ஓடி ஆபீசில் ஒளிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. ஸ்டிபானியிடம் தஞ்சமடைந்து அவளிடம் ஆறுதல் பெற வேண்டும் போல இருந்தது.

"உங்களைக் கூப்பிட வேண்டுமென்றால் எங்கே கூப்பிடட்டும்?" என்று பேஜ் காட்டமாகக் கேட்டாள்.

"எங்கே கூப்பிடட்டும் என்றால் என்ன அர்த்தம்? அதான் சொன்னேனே, ஆபீசுக்குப் போகிறேன் என்று?"

"வேறு எங்காவது போனாலும் போவீர்கள் என்பதால் கேட்டேன்."

அவள் எதைக் குத்திக் காட்டுகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது. அவமானத்திலும் கோபத்திலும் அவன் முகம் சிவந்தது.

"வேறு எங்காவது போனால் ஆஸ்பத்திரி ரிசப்ஷனுக்குத் தெரிவியுங்கள்," என்றாள் பேஜ்.

"நிச்சயமாக," என்றான் அவனும் சூடாக.

'ராத்திரி வீட்டுக்கு வருவீர்கள் இல்லையா?" என்று அவள் கேட்க

●●●●●●●சமீபத்தில் நான் ஜப்பானுக்குச் சென்றிருந்தேன். ஒசாகிலிருந்து மிட்சுயமாவுக்கு இரயிலில் செல்ல வேண்டியிருந்தது. ஒரு அதிகாரியிடம், "எல்லா பெயர்ப் பலகைகளும் ஜப்பான் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளனவே! நான் எப்படி மிட்சுயமாவை அடையாளம் கண்டு இறங்குவது?" என்று கேட்டேன். அவர், "உங்கள் கைக்கடிகாரத்தை இரயில்வே நேரப்படி திருத்திக் கொள்ளுங்கள். 11.22 மணிக்கு இரயில் எங்கு நிற்கிறதோ அங்கே இறங்கிக் கொள்ளுங்கள்" என்றார். இப்படியொரு நிர்வாகம் நம்மிடம் எப்போது வரும்?

– "ஹிந்து"வில் ஒரு வாசகர் கடிதம்
தகவல் : அ. ஷண்முகசுந்தரம்

விரும்பினான். மறு கணமே எதுவும் கேட்கக் கூடாது என்ற வைராக்கியம் பிறந்தது. அவள் சொல்லக் கூடிய பொய்களைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனுடன் வாக்குவாதம் செய்யப் பிடிக்கவில்லை. அவனை அவமதிக்கப் பிடிக்கவில்லை. அவன் கூறக்கூடிய சமாதானங்களைக் கேட்கப் பிடிக்கவில்லை. அவள் முற்றிலுமாக நொறுங்கிப் போயிருந்தாள்.

"அப்புறமாய் நான் கூப்பிடுகிறேன்," என்று சொல்லிவிட்டு அவன் வேகமாக வெளியேறி அவள் கண் பார்வையிலிருந்து மறைந்து போனான். கோபம், வருத்தம், குழப்பம், துரோகம் செய்யப்பட்ட காயம், ஆத்திரம் – எல்லாவற்றுக்கும் மேலாக இனம் தெரியாததோர் பீதி அவனைப் பிடித்துக் கொண்டது. இனி என்ன ஆகப் போகிறதோ என்ற பீதி.

திரும்பவும் ஆலிஸனைப் போய்ப் பார்த்து விட்டு ஆண்டியின் பள்ளிக்கூடத்துக்குச் சென்றான்.

ஆண்டிக்காக ஸ்கூலுக்குப் போவது, காத்திருப்பது, அவனுடன் இருப்பது, அவனை வீட்டுக்கு அழைத்துப் போவது முதலான வாடிக்கையான அலுவல்களைக் கவனித்தபோது மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அன்று பிற்பகல் பூரா அவனுடன் இருந்து விட்டு மீண்டும் ஜேனின் வீட்டில் அவனைக் கொண்டு போய் ஒப்படைத்தாள்.

"ரொம்பவும் உடம்பை வருத்திக் கொள்கிறாய்," என்று தாரென்ஸனைப் போலவே ஜேனும் அவளை அன்புடன் கண்டித்தாள்.

"வேறு என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்? ஆலி ஆஸ்பத்திரியில் அப்படிக் கிடக்கும்போது வீட்டில் உட்கார்ந்து கொண்டு டீவி பார்க்கவா தோன்றும்," என்ற பேஜ், ஆண்டியை முத்தமிட்டு, "ஆபீசிலிருந்து வரும் போது அப்பா உன்னை வீட்டுக்கு அழைத்துப் போவார். அதுவரை இங்கே சமர்த்தாய் இருக்கணும். என்ன? நான் காலையில் வருகிறேன்," என்றாள்.

இரு சின்னக் கைகளாலும் குழந்தை ஆண்டி அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான். அவன் மேனியிலிருந்து வந்த இனிய மணமும், முடியின் மென்மையும் அவளைப் பரசவப்படுத்தின. "ஐ லவ் யூ, கண்ணா" என்றாள்.

"நானும்தான் அம்மா," என்று ஆண்டி சிரித்தான். "எனக்காக ஆலிக்கு ஒரு முத்தம் கொடுக்கிறாயாம்மா?"

"கட்டாயம்டா, கண்ணா" என்று மறுபடி அவனை முத்தமிட்ட பேஜ், சரியாய் ஏழே காலுக்கெல்லாம் ஆஸ்பத்திரியைத் திரும்ப அடைந்தாள். எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் ஐஸியுவில் ஆலிஸனின் பக்கத்திலேயே இருந்தாள். பிறகு வெயிட்டிங் அறைக்குச் சென்றாள். ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். அது சௌகரியமாகவே இல்லை. சுவரில் தலையைச் சாய்த்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டாள். எப்போது மறுபடி கூப்பிடுவார்களோ என்று நினைத்துக் கொண்டாள். ஐஸியுவில் யாரையும் நீண்ட நேரம் தங்க அனுமதிப்பதில்லை. நர்ஸ்களுக்கு இடைஞ்சல். அத்துடன், பெரும்பாலான நோயாளிகள் மோசமான நிலையில் இருந்தார்கள். விசிட்டர்கள் வருகையினால் அவர்களுக்கு எந்தச் சந்தோஷமும் ஏற்படப் போவதில்லை...

"எப்படி உன்னால் இங்கே உட்கார்ந்திருக்க முடிகிறது?" என்ற குரல் கேட்டது.

தாரென்ஸன்.

கண்ணை மெதுவாகத் திறந்தவன் நோஞ்சலாய்ப் புன்னகை செய்தாள். காலோடு தலை களைப்பு அவளை ஆக்கிரமித்திருந்தது.

"ஆலிஸன் எப்படி இருக்கிறாள்?" என்றான் அவன், அருகிருந்த இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு.

"இன்னும் மயக்கம் தெளியவில்லை. இப்போதைக்குத் தெளியாது என்கிறார்கள். ஆனால் மூளையில் வேறு கோளாறுகள் ஏற்படாமல் இருக்கிறதா என்று கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள். நினைவில்லாமல் கோமாவில் கிடக்கிறாள். இருந்தாலும் தொடர்ந்து டெஸ்ட் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்," என்றவன், "க்ளோ எப்படி இருக்கிறான்?" என்று விசாரித்தான்.

"வலி தெரியாமல் இருக்க மருந்து கொடுத்து வருகிறார்கள். அப்படியும் வலியில் துடிக்கிறான், பாவம்."

"ஆலிஸன் எப்படி இருக்கிறாள் என்று அவள் தோழிகள் எக்கச்சக்கமாய்ப் போன் பண்ணிக் கேட்கிறார்கள். க்ளோவின் சினேகிதிகளும் கேட்டிருப்பார்களே?"

"போன் பண்ணவில்லை. ஸ்கூல் விட்டதும் நேரே இங்கேயே வந்து விட்டார்கள்," என்று புன்னகையுடன் கூறினான் தாரென்ஸன். "ஆனால் நர்ஸ்கள் அவர்களை அனுமதிக்கவில்லை. சில பத்திரிகை நிருபர்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து, இறந்து போன பையன் பிலிப்பைப் பற்றி விசாரித்தார்களாம். நீச்சல் குழுவில் பெரிய ஹீரோ, படிப்பில் முதல் ராங்க், தங்கமான பையன் என்று எல்லாரும் சொன்னார்களாம். பேப்பரில் பெரிதாகப் போட்டிருக்கிறார்கள், பார்."

கையோடு கொண்டு வந்திருந்த தினசரியைப பிரித்துக் காட்டினான் தாரென்ஸன். விபத்தைப் பற்றிய எல்லா விவரமும் புகைப் படங்களுடன் வெளியிட்டிருந்தார்கள். விபத்துக்குள்ளான நாலு மாணவர்களைப் பற்றிய செய்திகளுடன் செனெட்டரின் மனைவி லாரா ஹட்சின்ஸ் பற்றியும் வெளியிட்டிருந்தார்கள். அவளுடைய அழகான புகைப்படமும் பிரசுரமாகியிருந்தது.

லாரா நேரடியாகப் பேட்டி தர மறுத்து விட்டாள். ஆனால் பிலிப் இறந்து போனதைப் பற்றி அவள் கடும் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறாள் என்று செனெட்டரின் உதவியாளர்



ஒருவர் சொன்னதாகச் செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

'நானும் ஒரு தாய்தான். இறந்து போன பையனின் அப்பா அம்மாவுக்கும், காயம் பட்ட மற்ற குழந்தைகளின் பெற்றோருக்கும் எப்படி மனம் துடிக்கும் என்று எனக்குத் தெரியாதா?' என்று லாரா அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கிறாளாம். செனெட்டரின் உதவியாளர் சொல்லியிருந்தார்.

"படித்தாயா? ரொம்பக் கெட்டிக்காரத்தனமான கட்டுரை," என்றான் தாரென்ஸன். அவன் குரலில் கோபம் இருந்தது. "செனெட்டரின் பெண்டாட்டி ரொம்ப நேர்மையானவள், நல்லவள், சிறந்த தாய் என்றெல்லாம் வானளாவப் புகழ்ந்திருக்கிறார்கள், பார். இறந்து போன பிலிப் அளவுக்கு மீறிக் குடித்திருக்காவிட்டாலும் ஓரளவு குடித்திருந்தான் என்று எழுதியிருக்கிறார்கள், கவனி. அந்த அம்மாள் மீது வழக்குப் போடாமலிருப்பதற்காக இவ்வளவும்! சுத்த அயோக்கியத்தனம்!" என்று அவன் சொல்லிக் கொண்டே போனான்.

பேஜுக்கு எதுவும் காதில் ஏறவில்லை. விரக்தியின் உச்சத்தில் இருந்தாள் அவள். தப்பு யார் மீது இருந்தால் என்ன? அதைத் தெரிந்து கொள்வதால் ஆகப் போவது என்ன? ஆலிஸன் ஜம்மென்று எழுந்து உட்காரப் போகிறாளா? அல்லது க்ளோவின் கால்கள் சரியாகி விடப் போகிறதா? அல்லது இறந்து போன பிலிப் திரும்பி வரப் போகிறானா? எதுவுமில்லை! எதுவுமில்லை!

(தொடரும்)

மயக்கம்

அப்போது தஞ்சாவூரில் என் பெரியம்மா வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தேன். பெரியப்பாவுக்கு வெளியூரில் வேலை. சனிக்கிழமை வந்துவிட்டு, திங்கட்கிழமை அதிகாலை கிளம்பி விடுவார்.

பெரியம்மாவுக்குக் குழந்தைகள் கிடையாது. என் மேல் அவர்களுக்குப் பிரியம் அதிகம். ''நானே அவனை காலேஜில் படிக்க வைக்கிறேன்'' என்று என் அப்பா அம்மாவிடம் சொல்லி சம்மதிக்க வைத்து என்னை தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.


சரபோஜி கல்லூரியில் பி.ஏ. வரலாறு. படிப்பது முதலாம் ஆண்டு. படிப்பது வரலாறு என்றாலும் இலக்கியத்தில்தான் ஆர்வம் அதிகம்.

பிடித்த எழுத்தாளர் ஆஸ்கார் ஒயில்ட். அவரது பொன்மொழிகளை ஒரு போஸ்டரில் வண்ண எழுத்துக்களில் எழுதி வீட்டின் வெளிச் சுவரில் ஒட்டியிருப்பேன்.

ஒயில்டின் பொன்மொழிகள் ஒரே கலாட்டா மொழிகள். ஒரே ஒரு உதாரணம்:

திருமணமானவனின் சந்தோஷம், அவன் திருமணம் செய்து கொள்ளாதவர்களைப் (பெண்கள்) பொறுத்து அமைகிறது.

ஒயில்டின் எழுத்துக்களில் இருந்த ஆர்வம் எனக்கு வரலாற்றில் இல்லை. அவ்வப்போது போய் வகுப்பில் தலையைக் காண்பித்து விட்டு வருவதோடு சரி. அட்டென்டென்ஸ் விசயத்தில் பேராசிரியர்கள் அவ்வளவு கெடுபிடி செய்வதில்லை. வகுப்புக்கு வந்து தூங்கி விழுந்து, மற்ற மாணவர்களைக் கெடுப்பதை விட வெளியிலேயே இருந்து தொலையட்டும் என்று அவர்கள் நினைத்



திருக்கலாம்.

பொதுவாகவே நான் கூச்ச சுபாவம் உள்ளவன் என்பதால் எனக்கு நண்பர்கள் யாரும் கிடையாது. கல்லூரி நூலகத்தில் வந்து உட்கார்ந்திருந்து விட்டு வீடு திரும்புவது தான் தினப்படி வேலை. பரீட்சை சமயத்தில் மட்டும் மும்முரமாக ஒரு வாரம் புத்தகங்களைப் புரட்டினால் போதும். வரலாற்றில் நாம் எழுதுகிற விடைத்தாள்களின் எடையை வைத்துத்தான் மதிப்பெண் போடுகிற வழக்கம் என்று மாணவர்கள் கிண்டல் செய்வதுண்டு. எத்தனை பக்கத்திற்கு 'ரீல்' விடுகிறோமோ அத்தனை மதிப்பெண்!

அப்புறமென்ன? ஒயில்டின் உலகத்தில் ஆழ்ந்துவிட வேறென்ன தடை?

ஆனால் நூலகத்தையும் ஒயில்டையும் விட அப்போது என்னை பைத்தியமாக்கிக் கொண்டிருந்த ஒரு விசயமும் இருந்தது. ஒருவேளை அதிலிருந்து தப்பிக்கத்தான் ஒயில்டின் எழுத்துக்களில் தஞ்சமடைந்தேனோ என்னவோ!

ஆனால் எதிலிருந்து தப்பிக்க நினைத்தேனோ அதிலேயே இன்னும் தீவிரமான ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது ஒயில்டின் எழுத்து.

அப்போது மனசு பூராவையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த விசயம்- பெண்!


எல்லாருக்குமே அந்த வயதில் அப்படித்தான் இருக்குமோ? இருக்கலாம். ஆனால் என் விசயம் சற்றே வித்தியாசமானது.

மற்றவர்களுக்கு சிநேகிதர்கள், அரட்டை, விளையாட்டு, படிப்பு என்று பலவிதமான வழிகள் இருக்கும்- நேரத்தைப் போக்கவும், தனிமையை விரட்டவும். எனக்கு அப்படி எதுவும் இல்லை.

தனிமை. தனிமை. தனிமை. நூலகம். "யாரையாவது காதலி. காதலிக்காவிட்டால் வாழ்க்கையில் அர்த்தமே இல்லை" என்று உபதேசிக்கும் ஒயில்டின் எழுத்துக்கள்.

பெண்களிடம் போய்ப் பேசுவதற்கு பயம். கூச்சம். அதே சமயத்தில் யாரைப் பார்த்தாலும் ஒரு ஈர்ப்பு, அந்தப் பெண்ணைக்

சாரு நிவேதிதா



காதலிக்க வேண்டும் என்று ஆர்வம்.

ஒரு கட்டத்தில் இது வெறியாகவே மாறி, மனம் தறிகெட்டு ஓடலாயிற்று.

பெரியம்மா வீடு அப்போது வெங்கடேச பெருமாள் கோவில் தெருவில் இருந்தது. பெருமாள் கோவில் பக்கத்தில் அனுமார் கோவில்.

மனப்பேயை விரட்ட கோவிலைத் தேர்ந்தெடுத்தேன். ஆனால் அதற்கும் பலனில்லாமல் போனது. சந்நிதியில் கடவுள் எதிரே நிற்கும் போது கூட அந்த எண்ணமே தீயாய் பற்றி எரிந்ததால், முதலில் மனதைச் சுத்திகரித்து விட்டு கோவிலுக்கு வரலாம் என்று நினைத்து, கோவிலுக்குப் போவதையும் நிறுத்தினேன்.

அப்போது தான் காயத்ரியுடன் அந்த எதிர்பாராத சிநேகிதம் ஏற்பட்டது.

அந்த வருட இறுதியில் தஞ்சாவூரிலுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்குமான பேச்சுப் போட்டி ஒன்றுக்கு அழைப்பு வந்திருந்தது.

வித்தியாசமாக இருக்கட்டுமே என்று ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் பெயர் கொடுத்தேன். கொடுத்த பிறகு தான் அசட்டுத் தனம் செய்து விட்டோமோ என்று தோன்றியது. அதுவரை நடந்த எல்லா பேச்சுப் போட்டிகளிலும் நான்தான் முதல் பரிசு பெறுவது என்பது வழக்கமாக இருந்தது. ஆனால் அவை எல்லாம் தமிழ் பேச்சுப் போட்டி.

எப்படி ஆங்கிலத்தில் பேசுவது என்று குழம்பினேன். அதோடு காயத்ரி என்ற பெண் தான் இதுவரை ஆங்கிலப் போட்டிகளில் எப்போதும் முதல் பரிசு என்றும் கேள்விப் பட்டேன்.

மகளிர் கலைக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிப்பவள் காயத்ரி.

யார் என்று பார்த்ததில்லை. எப்படிப் பேசுவாள் என்று தெரியவில்லை. நிச்சயம் நமக்குத் தோல்விதான் என்று ஒரு விட்டேற்றியான மனநிலையில் இருந்தேன்.

போட்டிக்கான தலைப்பு கொடுக்கப் பட்டது.

"ஜனநாயகம் இந்தியாவுக்கு உகந்ததா? இல்லையா?"

உகந்ததல்ல என்று சர்வ நிச்சயமாக நம்பினேன். ஆனாலும் உகந்தது என்று பேசுபவர்களுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள்.

'உகந்ததல்ல' என்ற தலைப்பை காயத்ரி தேர்ந்தெடுத்திருப்பதாக அறிந்தேன். ஆச்சரியம். இவ்வளவு நாள் இப்போட்டிகளில் கலந்து கொண்டவளுக்கு வெற்றி பெறும் சூட்சமம் தெரியவில்லை.

அப்போது தான் எனக்குள் ஒரு சிறு நம்பிக்கை துளிர்த்தது. ஆனாலும் ஆங்கிலம் தெரியாமல் என்ன செய்வது? முதலில் கருத்துக்களை தமிழில் எழுதிக் கொண்டு, ஆங்கிலம் நன்கறிந்த நண்பன் ஒருவனிடம் கொடுத்து மொழி பெயர்த்துக் கொண்டேன்.

பிறகு அதை நன்றாக நெட்டுருவும் போட்டுக் கொண்டேன்.


போட்டியின் போது எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. காயத்ரி யார் என்று தெரிந்த போது தான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது.

எங்கள் தெருவில் நான் அடிக்கடி பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த ஓர் அழகு தேவதை தான் – காயத்ரி.

பல தினங்கள் அவள் வீட்டை விட்டுக் கிளம்பும் நேரத்தில் அவளைக் காண்பதற்காக தவம் கிடந்திருக்கிறேன். ஆனால் அவள் என்னை ஒரு போதும் சட்டை செய்ததாகவே தெரிந்ததில்லை.

அவள்தான் காயத்ரி.

வெண்ணிலவின் குளுமை. சுழித்து ஓடும் புத்தாற்று வெள்ளத்தை ஞாபகப்படுத்தும்



திரட்சி. உன்மத்தம் பிடிக்கச் செய்யும் பார்வை. மோகவெறி ஊட்டும் நனைந்த உதடுகள். இது எதுவுமே தனக்குத் தெரியாது என்பது போன்ற வெகுளிச் சிரிப்பு.

இதுதான் காயத்ரி.

ஆச்சரியத்தைக் கொஞ்சம் ஒத்திப் போட்டேன். இப்போது போட்டி. எப்படியும் வென்றாக வேண்டும். இத்தனை நாள் பார்த்து ஏங்கிய அவள் முன் தோற்றுவிடக் கூடாது. முன்பே நெட்டுரு போட்டது ஒரு துளியும் தெரியாமல், அப்போதுதான் சிந்தித்துப் பேசுகிற மாதிரியும் அதே சமயம் ஒரு சிறிதும் தட்டுங்கலோ யோசனையோ இல்லாமலும் சரளமாக, குரலில் மிகச்சரியான ஏற்ற இறக்கங்களோடு பேசி முடித்தேன்.

காயத்ரி குழந்தைத் தனமான குதூகத்துடன் என்னோடு கை குலுக்கினாள்.

"இவ்வளவு அட்டகாசமாகப் பேசுகிறீர்களே? எங்கே ஒளிந்திருந்தீர்கள் இது வரை?"

"உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் அனுமார் கோவிலில்."

பூக்களை வாரி இறைத்தாற்போல சிரித்தாள்.

"நான் உங்களை அடிக்கடி கவனித்திருக்கிறேன். அந்த எல்-பார் ஷர்ட் உங்களுக்குப் பிரமாதமாக இருக்கும்."

"உங்களோடு பேச வேண்டும் என்று பல முறை நினைத்திருக்கிறேன். ஆனால் தைரியம் வராது. இவ்வளவு அழகான பெண் எங்கே நம்மோடு பேசப் போகிறாள் என்று பயம்..."

ஒருவித நாணத்துடன் என்னைப் பார்த்து "அடேயப்பா!" என்றாள்.

"என்ன?"

"இந்தப் போடு போடுகிறீர்களே! போட்டியில் வேறு கலக்கி விட்டீர்கள்..."

அப்போது நாங்கள் ஒரு மூலையில் தனியாக நின்று கொண்டிருந்தோம். அதனால் எனக்கு அவ்வளவாக ஆங்கிலம் வராது என்பதையும், நெட்டுருப் போட்டு வந்ததையும் சொன்னேன்.

எதைக் கண்டு மயங்கினாளோ, என்னிடம் அப்படி மயங்கிப் போனாள் காயத்ரி.

பிறகு ஒரு ஐந்து வருடங்கள் நெருங்கிப் பழகினோம். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டதாக நம்பினோம். திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டோம்.

●●●●●டெல்லியில் உள்ள ஒரு பள்ளியில் PRE-KG சேர்ப்பதற்கான அப்ளிகேஷனில் கேட்கப்பட்டுள்ள ஒரு கேள்வி:-

தங்கள் குழந்தை பிறந்தது

1) சுகப் பிரசவமா? 2) சிசேரியனா?


3) ஆயுதக் கேஸா?

— ஹிந்துவிலிருந்து: புழுதிவாக்கம் சீனு

அன்புள்ள 'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு, கதையில் ஒரு இக்கட்டான நிலையில் முடிவு எதுவும் எடுக்க முடியாமல் தத்தளிக்கும் சூழ்நிலை. அந்த இருவரும் திட்டமிட்டபடி திருமணம் செய்து கொண்டார்களா? அல்லது பிரிந்து விட்டார்களா? தெரியவில்லை...

என்று எழுதிவிட்டு எந்த முடிவும் எழுத முடியாமல் மீதியை நாளை எழுதிக் கொள்ளலாம் என்று தூங்கி விட்டேன். கனவு வந்தது. கனவில் கதையும் வந்தது. முடிவும் சேர்ந்தே வந்தது.

இருவரும் திருமணம் செய்து கொண்டு சில ஆண்டுகள் இனிதே வாழ்ந்து, பிறகு 'டிவோர்ஸ்' செய்து கொண்டார்கள் என்றது கனவு!



நல்ல தூக்கம் தூங்க ஆசையா?



நன்றாகவும், நினைத்தபோது நிம்மதியாகவும் தூங்கும் 'வரம்' பெறுவது எப்படி? ''தவமெல்லாம் செய்ய வேண்டாம். தூக்கத்தைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளைத் தெரிந்து கொண்டாலே போதும்'' என்றார் ஐ.ஐ.டி. மருத்துவ மனையின் தலைமை மருத்துவ அதிகாரியான டாக்டர் ஜெயவேலன். அவர் கூறியதிலிருந்து...

தூக்கம் என்பதை அலட்சியமாக நினைக்கவே கூடாது. குழந்தைகளின் தூக்க அளவு மிகவும் நீண்டு கூட இருக்கலாம். ஆனால் பெரியவர்களைப் பொறுத்தவரை ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் நான்கு மணி நேரமாவது தூங்க வேண்டும். (அதிக பட்சம் எட்டு மணி நேரம்!) தூக்கத்தின் போது இதயத் துடிப்பு சுமார் ஐந்தில் ஒரு பங்கு குறைகிறது. தசைகள் ஓய்வெடுத்துக் கொள்கின்றன. மூளை இயங்குகிறது. முதலாளி விழித்திருந்தாலும் அவர் ஓய்வெடுக்க வேண்டும் என எண்ணும் காவல்காரர் 'ஐயா தூங்கறார் அப்புறம் வாங்க' என்று வருபவர்களை அனுப்பிவிடுவது போலவே கண், காது போன்ற புலன்கள் மிகக் குறைவாகச் செயல்பட்டு, வெளி இடைஞ்சல்கள் மூளையை அடையாமல் பார்த்துக் கொள்கின்றன.

தூக்கம் கெட்டால் வயிறும் கெட்டுவிடும் என்று சிலர் கூறுவதுண்டு. அதன் பின்னணி இதுதான்... தூங்கும் போது இதயம் உட்பட உடலின் பல பாகங்களுக்கு ரத்தம் குறைவாகவே தேவைப்படுவதால், ரத்த ஓட்டம் வயிற்றில் அதிகம் பாய்ந்து உணவுப் பொருள்கள் வேகமாக ஜீரணமாகின்றன.

தினசரி குறைந்தது நான்கு மணி நேரமாவது தூங்காவிட்டால் உடல் களைப்படையும். எதிலும் சரியாக கவனம் செலுத்த முடியாது. மனச் சோர்வு ஏற்பட்டு அது மன நோயில் கூட முடியலாம். அதே போல் தினமும் ஒன்பது மணி நேரத்துக்கும்



அதிகமாகத் தூங்குவதும் தப்பு. அது நம் உடலில், போதிய அளவில் பல்வேறு ஹார்மோன்கள் உற்பத்தியாவதைக் குறைக்கிறது.

அது சரி, நான்கு மணி நேரமாவது நிம்மதியாகத் தூங்க என்ன செய்ய வேண்டும் என்கிறீர்களா?

- சீரான தூக்கம் சட்டென்று வரவேண்டுமானால் தினமும் குறிப்பிட்ட நேரத்துக்கு தூங்கச் செல்வது என்பதைப் பழக்கிக் கொள்ள வேண்டும். சில பேர் இரவு எட்டரைக்கே படுத்துக் கொண்டு விடுவார்கள். வேறு சிலருக்கோ நள்ளிரவைத் தாண்டினால்தான் உறங்க வேண்டும் என்ற எண்ணமே வரும். இரண்டிலும் தவறில்லை. ஆனால் ஒரு நாளைக்கு எட்டு மணிக்கு, அடுத்த நாள் பன்னிரெண்டரை மணிக்கு, மூன்றாவது நாள் பத்து மணிக்கு என்று உறங்கச் செல்லும் நேரத்தை இஷ்டத்துக்கு மாற்றிக் கொண்டால் நினைத்தவுடன் தூக்கம் வராது.

- பகலைவிட இரவுத் தூக்கம்தான் சிறந்தது. இதற்குக் காரணம் இரவு என்பது ஆரவாரங்கள் அடங்கி விடும் நேரம் என்பதுதான். இப்படியிருக்க நள்ளிரவில் கூட கூடத்தில் ஒருவர் கேபிள் டீ.வி. பார்த்துக் கொண்டிருக்க, அறையிலேயே மற்றொருவர் விளக்கை அணைக்காமல் படித்துக் கொண்டிருக்க, இந்தச் சூழலில் ஒருவர் தாற்காலிகமாகத் தூங்கினாலும் அது ஆழ்ந்த உறக்கமாக இருக்காது. பாதியிலேயே கலைந்து விடும், இந்தக் கோழித் தூக்கம். பிறகு தூக்கம் சுலபத்தில் வராது. எனவே தூங்குவதற்கு முன் வெளிச்சம், சத்தம் இவையெல்லாம் இல்லாமலோ - அல்லது மிகக் குறைவாக இருக்குமாறோ பார்த்துக் கொள்ளுங்கள்.

- தூக்கத்திற்கு எதிர்ப்பு என்பது வெளியிலிருந்து மட்டுமல்ல, உள்ளுக்குள்ளும் வரலாம். இரவு எதுவுமே சாப்பிடாமல் பசியோடு படுத்துக் கொண்டால், பாதி ராத்திரியில் விழிப்பு வந்துவிட வாய்ப்பு உண்டு. (அதே சமயம் இரவு உணவுக்கும், படுக்கச் செல்வதற்கும் இடையே 45 நிமிடங்களாவது இருக்க வேண்டும்.)

- தூக்கம் கெடுவதற்கு நம் எண்ணங்களும் காரணமாக அமைவதுண்டு. அதிகமான மகிழ்ச்சி மற்றும் அதிகமான கவலை இவை தூக்கத்தின் எதிரிகள். இவை ஏற்படக் காரணமான நிகழ்ச்சிகள் நம் மனத்தில் இருக்கத்தான் செய்யும். அதனால் தூக்கம் கெடாது. ஆனால் இந்த எண்ணங்களுக்கு நாம் அதிகமாக ரியாக்ட்



மூளை சார்! மூளை!

பார்த்தசாரதி கோவில் கோபுர பின்னணியில் ஒரு வீட்டு மொட்டை மாடியில், பைஜாமா, பனியனில் சாது போல உட்கார்ந்து கொண்டிருந்தார் ஒய்.ஜி. மகேந்திரா. கோவில் கோபுரத்தில் பளீரென்ற நாமம், மகேந்திராவின் உடம்பிலோ, தோள் பட்டையிலும், மார்பிலும் ரத்த நாமம்.

என்ன திரைப்படத் தொழிலாளர், டைரக்டர் மோதல் பற்றிய சீரியலா? இல்லை மோதல் நடந்த ஆண்டாள் தியேட்டர் பக்கம் போயிருந்தீர்களா? என்று கேட்டதற்கு, ''இல்லை... எல்லாம் மூளை! ப்ரெயின்!'' என்றார்.

''மூளைக்கும் உதை வாங்குவதற்கும் என்ன சம்பந்தம்?''

''நான் நடிக்கிற மிஸ்டர் ப்ரெயின் தொடரில் இது ஒரு காட்சி. சன் டீ.வியில் ஒளிபரப்பாகிறது'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு 'அப்பு' ஆசாமி வந்தார்.

''மீட் மிஸ்டர் வாமனன்'. சீரியலில் என் பெயர் கல்கி!'' என்றார்.

கதைச் சுருக்கம்: கல்கியும், வாமனனும் இரு வக்கீல்கள். தர்மத்தின் பக்கமே நிற்பவர் கல்கி. அதர்மத்துக்குத் துணை போவதே வாமனனின் தொழில். இரண்டு பேருக்கும் இடையிலான மோதல்தான் கதை.

கதை வசனம் : வியட்நாம் வீடு சுந்தரம்.

தொடரில் கௌரவத் தோற்றம் : சோ!

— மௌலி.

செய்யும் போது தூக்கம் கெட்டுவிடும். அப்போது தூக்கம் வர இந்த அதீத மனக்கவலை அல்லது மனமகிழ்ச்சியை திசை திருப்ப வேண்டும். 'ஒன்றிலிருந்து நூறு வரை கண்ணை மூடிக்கிட்டு எண்ணு. தானா தூக்கம் வரும்!' என்று வீட்டிலுள்ள பெரியவர்கள் சொல்லுவது இதுபோன்ற எண்ணங்களைத் திசை திருப்பத்தான். எனவே, அம்மாதிரியான சமயங்களில் கண்களை மூடிக் கொண்டு ஒரு குறிப்பிட்ட கடவுளின் உருவத்தையோ அல்லது ஒரு பூவையோ, அல்லது மெழுகுவர்த்தியின் ஒளியையோ தொடர்ந்து உருவகப்படுத்திக் கொண்டே இருந்தால் தூக்கம் தானாகவே வந்துவிடும்.

● மனச்சோர்வாலோ அல்லது இது தான் காரணமென்றே சொல்ல முடியாமலோ தூக்கம் வருவதில்லை என்றால் தூங்கச் செல்வதற்கு முன் உங்கள் மனதுக்குப் பிடித்த, ஆரோக்யமான ஏதாவது ஒரு செயலில் ஈடுபடுங்கள். தியானம் செய்யுங்கள் அல்லது நண்பரிடம் பத்து நிமிடங்கள் பேசுங்கள்; அல்லது பிடித்த ஒரு புத்தகத்தைப் படியுங்கள்; அல்லது வீட்டிலுள்ள மற்றவர்களுடன் கலகலப்பாகப் பேசிச் சிரியுங்கள்! மன இறுக்கம் குறைந்து, தூக்கம் தானாகவே உங்களை வந்து தழுவும்.

● மல்லாந்தோ, குப்புறவோ படுத்துக் கொள்வதைவிட, ஒரு புறமாகப் படுத்துக் கொள்வது தூக்கத்தை எளிதாக்கும். கரடு முரடான படுக்கையைவிட மென்மையான படுக்கை, தசைகளுக்கு இசைந்து கொடுப்பதால், தூக்கத்திற்கு உதவுகிறது.

● சர்க்கரை வியாதிக்காரர்கள் வயிறு நிறையச் சாப்பிடுவதில்லை. இதனால் தூக்கத்தின் போது இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு குறையலாம். தூக்கத்தைக் கலைத்து விடலாம். எனவே அளவு குறைவாக இருந்தாலும் இரவு உணவைச் சாப்பிடாமல் படுக்கச் செல்லாதீர்கள்.

● சீரான தூக்கம் வராதவர்கள் காலையிலோ, மாலையிலோ உடற்பயிற்சிகள் செய்யலாம். முடியாதவர்கள் இரவு உணவு சாப்பிட்ட அரைமணி நேரத்திற்குப் பிறகு 'வாக்கிங்' சென்று வரலாம். உடலின் மற்ற பல இயக்கங்களுக்கு உதவுவது போலவே நடைப் பழக்கம் தூக்கத்திற்கும் உதவும்.

● பாதித் தூக்கத்தில் விழித்துக் கொண்டு தவிப்பவர்கள் ஜில்லென்று ஒரு தம்ளர் நீரைக் குடியுங்கள். வீட்டுக்குள்ளேயாவது கொஞ்சம் நடை பயிலுங்கள்! தூக்கம் கியாரண்டி!

சந்திப்பு : அருண் சரண்யா

குறையொன்று

துவாரகை கிருஷ்ணன் கையில் சங்கு சக்கரம் இல்லை என்று தெரிந்தும் துரௌபதி அவனை 'சங்க-சக்கர கதா பாணே' என்று அழைத்தது ஏன்....?

துவாரகை கிருஷ்ணன் ஆனாலும் அவனே நாராயணன் என்று நன்கு உணர்ந்து சொல்கிறாள். 'சங்கு, சக்கரத்தைக் கையில் வைத்திருக்கிறாயே.. அது என்ன வெறும் அழகுக்கா வைத்திருக்கிறாய்...? இந்த மாதிரி அக்கிரமம் நடக்கிறதே... இதைத் தடுக்கவில்லையென்றால் அந்தச் சங்கோ சக்கரமோ உனக்கு எதற்கு...?' இப்படி உணர்ந்துதான் துரௌபதி சங்கு சக்கரமில்லாத துவாரகை கிருஷ்ணனையும் அப்படி அழைக்கிறாள்.

ஆகையினால், பரமாத்மா நம் கஷ்டத்தைப் போக்குவதற்காகத்தான் பக்தாபீஷ்ட வரப்பிரதனாக, ஆயுதங்களைத் தாங்கி நிற்கிறான் என்பது தெரிகிறது. அலங்கார வஸ்துக்களைச் சாற்றிக் கொண்டிருக்கிறான். பரம போக்யமாக, நாம் அனுபவிக்க அனுபவிக்க, தன்னைக் காட்டிக் கொடுக்கிறான். அழகான ரூபத்தோடு காட்சி அளிக்கிறான்.

'ஜிதந்தே புண்டரீகாக்ஷ,' என்று எம்பெருமானுடைய திரு நேத்திரத்தை விவரிக்கிறார்கள். புண்டரீகாக்ஷம்...? அந்த நேத்திரமே பக்தர்கள் அனுபவிப்பதற்காக ஏற்பட்டது. காத்திரமும் பக்தர்கள் அனுபவிப்பதற்காக ஏற்பட்டது. இப்படி ஒவ்வொன்றும் நாம் அனுபவிப்பதற்காகவே ஏற்பட்டவை.

அதனால்தான் சுவாமி தேசிகன் சொல்கிறார் : "சமஸ்தமும் உடைய நீ, பக்தர்கள் அனுபவிப்பதற்காக இப்படிப்பட்ட ரூபத்திலே காட்சி அளித்து அனுக்கிரஹம் பண்ணுகிறாய்' என்கிறார்.

இப்படி நமக்



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மா


ரில்லை



காகத் தோற்றம் கொள்ளும் பகவான்தான் சர்வவியாபகனாகவும் இருக்கிறான். சர்வ வஸ்துக்களிலும் அவன் உறைகிற காரணத்தால் தான் விஷ்ணு என்று பிரும்மாண்ட புராணத்திலே அவன் அழைக்கப்படுகிறான். அவனுடைய சர்வவியாபகம் விசேஷமானது - ஞானத்தினாலும் ரூபத்தினாலும் ஸ்வரூபத்தினாலும் அவன் வியாபித்திருக்கிறான்.

பத்ம புராணத்தில் சொல்லும்படியான அரிய பெரிய விஷயம் ஒன்று... அது என்னவென்றால், விஷ்ணு என்கிற சப்தத்தினால் இப்படிப்பட்ட பரவுதலையெல்லாம் பார்த்தோம்.

விஷ்ணு என்பதே பகவானுக்குப் ப்ரீதியான



18

ச்சார்யார்

சொல். அந்த சொல்லைச் சொல்லிவிட்டால் அவன் எவ்வளவு வேண்டுமானாலும் அனுக்கிரஹம் பண்ணுவான்.

- இதுதான் புராணம் சொல்லும் விஷயம். இந்த புராணங்களுக்கு மூலம் வேதம்தான்.

பட்ட பாஸ்கர வியாக்யானம், வியாரண்ய ஸ்வாமி பாஷ்யம் என இரண்டு, ரொம்ப உயர்ந்த ரீதியிலே வேதத்துக்குப் பொருள் சொல்கின்றன.

சாமான்யமாக ஒரு சுலோகத்துக்குப் பொருள் சொல்ல வேண்டுமானால் சுலபமாகச் சொல்லிவிடலாம். நல்ல சம்ஸ்க்ருத ஞானமிருந்தால் அழகாகச் சொல்லிவிடலாம். ஆனால் வேதத்துக்குப் பொருள் சொல்ல வேண்டுமானால் மிகவும் சிரமப்பட்டுத்தான் சொல்ல முடியும். என்னதான் சம்ஸ்கிருத ஞானம் இருந்தாலும் கஷ்டம்!

அதனால்தான் வித்யாரண்ய சுவாமி, "வேதத்துக்குப் பொருள் சொல்ல வேண்டும் என்று ஆரம்பித்திருக்கிறேன்... அது பெரிய சாகசமான காரியம். அது நடக்க வேண்டுமானால் நீதான் அனுக்கிரஹம் பண்ண வேண்டும்" என்று ஒரு தெய்வத்திடம் பிரார்த்திக்கிறார்.

அது எந்த தெய்வம்...? லக்ஷ்மி நரசிம்ஹன் என்கிற தெய்வம். வித்யாரண்யர் வேத பாஷ்யம் ஆரம்பிக்கும்போது மங்கள ஸ்லோகத்தில் இதை எல்லாரும் கவனிக்கலாம்.

தர்க்க சாஸ்திரத்தில் ஒரு அழகான வாக்கியம்.

ஒரு கவி, அல்லது ஒரு புத்தகம் எழுதக் கூடிய எழுத்தாளர்.. அவர் எழுதக்கூடிய அந்த சுலோகமானது நிர்விக்னமாக, நன்கு முடிய வேண்டும் என்பதற்காக, அந்த கிரந்தத்தின் ஆதியிலே ஒரு சுலோகம் இயற்றுவார். அந்த சுலோகமானதை இயற்றாவிட்டால் அந்த கிரந்தமானது மங்களமாக முடியும் என்பது மகான்களுடைய உயர்ந்ததான சித்தாந்தம். இது சாஸ்திரம் சொல்லும் விஷயம்; தர்க்க சாஸ்திரமில்லையா... அதனால் வாதங்கள் அதிகம்! நிர்ணயித்துச் சொல்கிறது இந்த விஷயத்தை.

மங்களம் பண்ணினால்தான் கிரந்தம் முடியும் என்று உண்டா?..

காளிதாஸர் மங்களத்தோடுதான் ஆரம்பிக்கிறார். உயர்ந்த ரகுவம்சத்தை ஆரம்பிக்கிறார். முதலில் இஷ்ட தேவதையைத்தான் ஆராதிக்கிறார். அந்த சுலோகத்துக்குத்தான் 'மங்களம்' என்று பெயர். அது கிரந்தத்தை விட்டு தனித்தும் நிற்கும்; கிரந்தத்தோடு சேர்ந்தும் நிற்கும்.

'பார்வதி பரமேச்வரோ..' என்று 'சொல்லும் பொருளும் போலே சேர்ந்திருக்கும்படியான பார்வதி பரமேசுவரர்களை தியானம் பண்ணுகிறேன்' என அந்த திவ்ய தம்பதிகளை தியானம் பண்ணி ஆரம்பிக்கிறார் காளிதாஸர்.

ரகுவம்சம் கிடுகிடுவென்று போகிறது. சுபமாக பூரணமாக முடித்து விடுகிறார்.

ஸ்வாமி தேசிகன் யாதவா ஹ்ருதயம் என்கிற காவியத்தை ஆரம்பிக்கிறார். ஆரம்பிக்கும் போதே, அந்த கிரந்தத்துக்கு நாயகனாக இருக்கக்கூடிய, யாதவ குலத்திலே தோன்றிய அந்த கிருஷ்ணனையே தியானம் பண்ணுகிறார். முதல் சுலோகத்தில் யாதவா ஹ்ருதயம் பூர்ணமாக முடிகிறது.

இப்போது என்ன விசாரம் என்று கேட்டால், மங்களம் இயற்றினால்தான் முடியும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்... சில கிரந்தங்கள் மங்கள சுலோகம் இல்லாமலே முடிந்திருக்கின்றன.... அது எப்படி என்பது கேள்வி.

அதற்குப் பதில் என்னவென்றால்; மங்கள சுலோகம் இருந்தால் கிரந்தம் பூரணமாக முடியும் என உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது இல்லாமலே ஒரு கிரந்தம் முடிந்தது என்றால், அந்த கிரந்தம் முடிவதற்காக பூர்வ ஜன்மத்திலேயே அந்த மங்கள சுலோகத்தை அவன் இயற்றியிருக்க வேண்டும்!

- இப்படியாக, தார்கிகர்கள் பூர்வ ஜன்மத்தை ஒப்புக்கொண்டு பேசுகிறார்கள்.

ஒருத்தர் செயற்கரிய விஷயங்களெல்லாம் பண்ணுகிறார். ஏகப்பட்ட உயர்ந்த காரியங்கள் பண்ணுகிறார். எல்லோரும் போற்றுகிறார்கள், அவரை... இந்த ஜன்மத்திலே அதையெல்லாம் பண்ணும்படியான சக்தியை அவர் பெற்றாரா என்ன..? இல்லை..! ஜன்மாந்திரத்திலேயே அந்த உயர்ந்ததான சக்தி அவருக்கு இருந்ததனாலே, அதைக் காட்ட வேண்டிய சமயம் வந்ததனாலே, இந்தப் பிறவியில் அப்படி நடக்கிறது. அது இல்லையென்றால் இப் பிறவியில் அவ்வளவையும் அவர் செய்ய முடியாது என்று மகான்களே இங்கே விவரித்துக் காட்டியிருக்கிறார்கள்.

மங்கள வாக்யத்திலே இங்கே நிர்ணயம் பண்ணப்படுகிற உயர்ந்ததான விஷயம் என்னவென்றால்,

மங்களம் பகவான் விஷ்ணு:

மங்களம் மதுசூதன:

'வேதத்திலே சொல்லப்படும்படியான மந்திரங்களெல்லாம் இருக்கின்றனவே, அந்த மந்திரங்களுக்கெல்லாம் அர்த்தம் சொல்ல வேண்டும் என்று நான் முற்படுகிறேன்... அது எப்படி முடியும்..?' என்று வித்யாரண்யர் முறையிடுகிறார்.



யாரிடம் முறையிடுகிறார்...?

நரசிம்ஹனைக் குறித்து முறையிடுகிறார். உடனே அவருக்கு வேதபாஷ்யம் பூர்த்தியாகி விடுகிறது.

பஜே நரஹரிம் ஹரிம்' என்று வரும் அந்த முதல் சுலோகத்திலே.

அஹோபிலத்தில் நரசிம்ஹனுக்கு மாலோலன் என்று பெயர். மஹாலக்ஷ்மி அவன் மடியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அப்படி சேர்த்து அவளை ஆலிங்கனம் பண்ணிய நிலையில் அவன் இருக்கிறான்.

லக்ஷ்மியா சமாலிங்கித வாமயாகம்' என்பது வர்ணனை.

'சமாலிங்கித' என்கிறதை இங்கே கவனிக்க வேண்டும்.

மாலோலனை கவனித்தவர்களுக்குத் தெரியும். மஹாலக்ஷ்மி அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிறாள். அவனும் அவளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டிருக்கிறான்!

தினையளவும் அவளைப் பிரியாதவன் அவன்! அந்த லக்ஷ்மியோடு சேர்ந்தே இருக்கிறான் பரமாத்மா - அதனால்தான் 'நரஹரிம் ஹரிம்' என்று இருமுறை ஹரி நாமம் வருகிறது. நரஹரியை, லக்ஷ்மியோடு கூடிய ஹரியை நான் வணங்குகிறேன் என்றார்.

அப்படி அவர் சொன்னதுமே பாஷ்யம் பூர்த்தியாகிவிட்டது! கடினமான விஷயங்களெல்லாம் அவருக்குச் சுலபமாகத் தெரிகிறது.

'லக்ஷ்மி பதே' என்று அவனை அழைக்கும்போது சுலபமாக எல்லோருக்கும் புரிகிறது. ஆனால் புருஷ சூக்தத்திலே ஓர் இடத்திலே, எல்லோருக்கும் சந்தேகம் வரும்படியான ஒரு வகையில் அவள் அழைக்கப்பட்டிருக்கிறாள். 'இந்த்ர பத்னி' என்று மஹாலக்ஷ்மி குறித்து அதிலே வருகிறது. இந்திரனுக்குப் பத்தினியாய் இருக்கக் கூடிய பூமாதா!

தேவேந்திரனுக்கு தர்ம பத்னியா பூமாதா? சாக்ஷாத் நாராயணன்; விஷ்ணுவுடைய பத்னி அல்லவா?...

இதற்கு நாம் சிரமப்பட்டுத்தான் அர்த்தம் தெரிந்து கொள்ள வேண்டும். வித்யாரண்யர் சுலபமாக எழுதிவிட்டார்! அவர் சுலபமாக எழுதக் காரணம் யார்...?

கமலா குச கற்பூர கஸ்தூரி நரசிம்ஹன்தான் காரணம்! ஆகையினால், அவன் அருளால் சுலபமாக எழுதிவிட்டார்.

'இந்த்ர சப்தேன விஷ்ணு' என்று சொல்லி விடுகிறார். இந்த்ரன் என்கிற பெயரில் விஷ்ணு தான் மறைத்துச் சொல்லப்படுகிறான். சாக்ஷாத் விஷ்ணு பத்னி என்றுதான் பொருள்.

'ப்ராஜாபதிஸ்துவம் வேதா...' என்று இன்னொரு இடத்தில் வருகிறது. இதற்கு என்ன அர்த்தம்...?

ஒருத்தர் பார்த்தசாரதியை சேவிப்பதற்கு நித்யம் திருவல்லிக்கேணி போகிறார். போனவுடனே நன்றாக சேவிக்கிறார். அரை மணி காலம் நின்று, பிரதக்ஷணாதிகளெல்லாம் பண்ணிவிட்டு வருகிறார். நித்தியம் இதைப் பண்ணிக் கொண்டிருப்பவர்தான்.

அவரை வேதம் கூப்பிடுகிறது. 'இங்கே வா...' என்று அருகில் அழைத்து ஒரு கேள்வி கேட்கிறது.

"நித்யம் இப்படி பார்த்தசாரதியை சேவிக்கின்றீரே.. பார்க்கிறீரே? நீர் பார்க்கிறதை அவர் பார்க்கிறாரா?..." என்று கேட்கிறது.

(தொடரும்)

எஸ். சங்கரநாராயணன்

தாயுமானவன்

வாசல் வரை காயத்ரி வந்தாள். 'அப்பா, வரும்போது மறக்காம கற்பூர வாழை' என்றாள். 'ஆகட்டும்மா' என்று தலையாட்டியபடியே அப்பா கதவை வெளிப்புறமாகப் பூட்டிக் கொண்டார். 'பாத்து ஜாக்கிரதையா இருடிம்மா... நா போயிட்டு தோ வந்துர்றேன்' என்று தெருவில் இறங்கினார். புளி தீர ஆகிவிட்டது. பலசரக்கு சாமான்கள் இந்த மாதம் இன்னும் வாங்கவில்லை.

அவசர ஆத்திரம் என்று தவிர அவர் வீட்டை விட்டு வெளியே இறங்குவதே இல்லை என ஆகிவிட்டிருந்தது. சொந்தத்தில் கல்யாணம், ஆண்டு நிறைவு என்று எந்த வைபவத்துக்கும் போகக் கொள்ளவில்லை. காயத்ரியைக் கூடக் கூட்டிப் போகவும் முடியாது. அவளைத் தனியே விட்டுவிட்டுப் போகவும் அவருக்கு இஷ்டமில்லை.

அவர் உலகம் சுருங்கி விட்டது. வேலைக்குப் போவதை அவர் நிறுத்திக் கொண்டிருந்தார். அம்மா இறந்து போனதும், காயத்ரிக்கு எல்லாம் அவரே என நிலைமை மாறியிருந்தது. அது தவிர, என்னடா உலகம் என அவருக்கே ஒரு விரக்தி.

மனைவி இறந்தபோது பெரும் தனிமையும் இருளும் அவரைச் சூழ்ந்து கொண்டன. ஒரே பெண்ணுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தபின் இனி தன் வாழ்வில் சிக்கலே இல்லை என நினைத்துக் கொண்டிருந்தார். நித்தியப்படி நியதிகளின் கிரமத்தில் சுகமாய் ஓடிக் கொண்டிருந்தது காலம். ஆறு மணிக்கு எழுந்து கொள்வது முதல், எட்டரைக்குத் தொலைக்காட்சியில் செய்திகள், பிறகு ஒரு ஆசுவாச வெந்நீர்க் குளியல், திவ்யமான சாப்பாடு, அலுவலகம் என அவரது நாள் சீராய்ச் சிக்கலின்றி ஓடிக் கொண்டிருந்தது.. மனைவி இறந்து போகும் வரை.

உயரங்களில் நூலாம்படை. பூஜையறையில் துலக்கப்படாத விளக்குகள். வாசலில் கோலமில்லாத வெறுமை. பீரோவில் துவைத்து உலர்த்தி மடிக்கப்பட்டு வைத்திருக்கும் துணிகள் இல்லை... அவளது ஆளுமையின் தீவிரம், அவள் இல்லாத போது அவரைத் திணறடித்தது. எதிர் வீட்டு மாமியுடன் கூடத்தில் பல்லாங்குழி ஆடிக் கொண்டிருந்த அவள் திடீரென்று மாயமானாள்...

அவளைப் பார்க்கிற ஆவேசத்தில் காயத்ரியின் கல்யாணக் கேசட்டை ஒருநாள் முழுவதும் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தார். வைரம் ஜொலிக்க மடிசார் பளபளக்க வயசே தெரியாமல் சின்னப் பெண்ணாய்ச் சிரிப்போடு வளைய வருகிறவளைப் பார்க்கப் பார்க்க ஓவென்று அழுகை வந்தது. வயதை மறந்து பக்கத்தில் யாருமில்லை என்ற தெளிவுடன் மனைவியின் படத்தை ஸ்டில் பண்ணி விட்டு வெட்கத்தை விட்டு அழுதார்.

அதெல்லாம் காயத்ரிக்குத் தெரியாது. தெரிந்தால் தாங்க மாட்டாள். எதையும் தாங்கிக் கொள்ளும் நிலையில் அவள் இல்லை, என அவருக்குத் தெரியும். பாவம் சின்ன அதிர்ச்சி கூடத் தாளாத அந்தப் பிஞ்சுக்குத்தான் வாழ்வில் எத்தனை பெரிய அதிர்ச்சி...

தெருவில் இறங்கி நடக்கையில் இப்படி சிந்தனைகளை அறவே தவிர்க்க விரும்பினார். திடீரென்று தலையைச் சுற்றிக் கொண்டு வருகிறது அவருக்கு. அங்கேயே அப்படியே உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ள வேணுமாய் இருக்கிறது. பக்கத்தில் வந்ததும், அவர் தடுமாறுவதைப் பார்த்து, சைக்கிள்





ஒன்று மணியடித்து, 'பெருக சொல்விட்டு வந்திட்டியா...' என்ற ஏளனத்துடன் கடந்து போனது. சுதாரித்துக் கொண்டு நடந்து போனார்.

இன்றைக்கு உள்ளூற படபடப்பு கொஞ்சம் அதிகமாய் இருக்கிறது. இரத்த அழுத்தம் அதிகமாகி விட்டதோ என்னமோ... காரணம் இல்லாமல் இல்லை. இன்றைக்கு ஆகஸ்ட் ரெண்டு... அவரால் மறக்க முடியாத நாள்.

காயத்ரி இயற்கையிலேயே நல்ல அழகு. நல்ல சிவப்பு. அவள் அம்மாவைப் போல. குழந்தையுடன் நாலு இடம் வெளியே போகும் போதெல்லாம் அவருக்குப் பெருமையாய் இருக்கும். வாட்டசாட்டமான உயர உடல்வாகு. நீளமான கூந்தல். அழகுக்கேற்றபடி அவளது உடையுடுத்தும் பாங்கும், அலங்காரம் பண்ணிக் கொள்கிற நறுவிசும் இருக்கும். கண் நீட்டிக் கொள்ளாமல் அவள் வெளியிறங்கிப் பார்க்க முடியுமோ? அதிராத நடை... என் குடும்பத்தின் செல்வமில்லையா இது...

கொஞ்சம் அதிகமாய்ச் செல்லம் பாராட்டி வளர்த்து விட்டார்கள் போலிருக்கிறது. உள்ளங்கையில் வைத்துத் தாங்காத குறைதான். பள்ளியில், வெளியே, பக்கத்து வீடுகளில் அவளது அருகாமை கொண்டாடப்பட்டது. ஐந்தாறு வயதிலேயே பட்டுப் பாவாடை, பத்து வயது முதலே தாவணி என்று பார்த்துப் பார்த்து வளர்த்தார்கள். ஆனால் தனியே தன் முனைப்போடு அவள் வளர்வதை அவர்கள் கவனம் கொள்ளவில்லை, என்று இப்போது... எல்லாம் முடிந்தபின் தோன்றுகிறது. கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்னானாம்.

சின்ன வயசிலேயே அவளுக்கு பயம் ஜாஸ்தியாய் இருந்தது. இரவுகளில் எழுந்து தண்ணி குடிக்கப் போனால் கூட, யாராவது கூடப் போக வேண்டியிருந்தது. இன்டலாய் பள்ளிக்கூடத்தில் அவளது தோழிகள் சொன்ன பேய்க் கதைகளை மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டு ராப்பூராவும் தூங்காமல்

அப்பா அம்மாவையும் தூங்க விடாமல் படுத்துக் கிடப்பாள். 'ஏம்மா பேய் பிசாசல்லாம் நிஜமாம்மா...?'

ஆத்தங்கரைக்குப் போகும் வழியில் புளிய மரம் ஒன்றிருக்கிறது. ரொம்ப வருஷமா அங்க பேய் ஒண்ணு குடியிருக்கு. கல்யாணமாகாத கன்னிப் பொண்ணு... அதும் அழகான பொண்ணு வந்தா...

பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பி வரும் வழியில் தோழிகள் கலகலவென்று சிரித்தபடி அவளை ஆத்தங்கரைப் பக்கம் கூட்டி வருகிறார்கள். 'ஒருநா என்னாச்சின்னா...' என்று சிரித்தபடி பேசிக்கொண்டு முன்னால் போய்க் கொண்டிருந்த காயத்ரி திடீரென்று நின்று திரும்பிப் பார்க்கிறாள். ஐயோ, கூட யாருமே இல்லை. தோழிகள் எங்காவது ஒளிந்து கொண்டிருக்கிறார்களா? அப்பவே அவளுக்குக் கொஞ்சம் உதற ஆரம்பித்து விட்டது. ஆனாலும் இது பகல். தவிர தோழிகள், பிறகென்ன?


'ராஜி...?' என்று கூப்பிட்டபடி அவள் தேடிப் போகிறாள். தோழிகளை எங்கும் காணவில்லை. தேடியபடி அவள் அந்தப் புளிய மரத்தடியில் வந்து நின்றாள். திடுக்கென்றது. எவ்வளவு பெரிய மரம். இதில் ஏறி ஒருத்தி தூக்குப் போட்டுக் கொண்டிருந்தால், அவள் எவ்வளவு தைரியசாலி. திடீரென்று அவளுக்கு மரத்தில் ஒரு பெண் தூக்குக் கயிறு மாட்டிக் கொண்டு தொங்குவது போலிருந்தது. நாக்குக் கீழே தொங்க கால்களை உதைத்தபடி, என்ன கோரமான காட்சி. ஐயோ, என அலறுகிறாள் காயத்ரி காதைப் பொத்திக் கொண்டு.

தோழிகள் பதறியோடி வந்து பார்க்கும் போது அவள் மயங்கிக் கிடக்கிறாள். உடம்பு ஜுரத்தில் கொதிக்கிறது. அப்படியே ஒரு வண்டியில் எடுத்துக் கொண்டு வந்து வீட்டில் கிடத்தினார்கள். ரெண்டு நாள் ஜுரம் இறங்கவேயில்லை.

அதற்குப் பிறகே அவள் நிலைமை சரியில்லை. மனத்தில் என்னென்னவோ காட்சிகள் வந்தன. அம்மாவிடமே ஒருநாள் காப்பியை முகத்தில் விட்டெறிந்து 'விஷம் வெச்சி என்னைக் கொல்லப் பாக்கறியா?' என்று கத்தினாள். அன்றைக்குப் பூராவும் அம்மா அழுது கொண்டிருந்தாள். சமாதானப்படுத்த முடியாது போயிற்று.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்து சுவரில் ஏறும் எறும்புகளையே பார்த்துக் கொண்டிருப்பாள். திடீரென்று அந்த எறும்புகள் பாதையை மாற்றி அவளை நோக்கி விறுவிறுவென்று வருவது போலிருக்கும் அவளுக்கு. 'ஐயோ எறும்பு எறும்பு' என்று உடம்பெங்கும் சொறிந்து கொண்டாள்.

கூட ஒரு குழந்தை பிறந்திருக்கலாம். அவர்களுக்கு அதிர்ஷ்டமில்லாது போய்விட்டது. இன்னொரு குழந்தை என்று இருந்திருந்தால் ஒன்றோடொன்று அனுசரணையாய், உதவியாய் நட்புக் கொண்டிருக்கும், என்றிருந்தது



அருமையான குழந்தை. பார்த்தால் வித்தியாசமாய் எதுவுமே தெரியாது. திடீரென்று அவளுக்காய் ஏதாவது விபரீதமாய்த் தோன்றும். 'போன் மணி அடிக்கறதே... நம்ம வீட்ல போன் இல்லியே...' என்பாள். இருட்டின் நிழல்களெல்லாம் அவளுக்கு பூதங்களாய்த் தெரிந்தன. 'அந்த மூலைல யாரோ ஒளிஞ்சிக்கிட்டிருக்கானா பாருப்பா...' என்பாள்

அம்மா இருந்தவரை அம்மாவுக்கு அம்மாவாய், தோழிக்குத் தோழியாய் காயத்ரி கூடவே இருப்பாள். பல்லாங்குழி விளையாடுவாள். தோல்வியை காயத்ரியால் தாளவியலாது.. காசி தட்டினால் கூட அம்மா அவளுக்குப் பங்கு தர வேண்டும்.. என அடம் பிடிப்பாள். ஒரு தடவை புடைவைக்குள்ளிருந்து வெளிப்பட்ட அம்மாவின் கை ஒரு கொரில்லாக் குரங்கின் கை போலக் கன்னங் கரேலென்று தோன்றியது அவளுக்கு.

விபரீதமான கற்பனைகள் அவளுக்குப்

பிடித்திருந்தன. அவைகளுக்கு அவள் பயப் படவும் செய்தாள். வாழ்வின் அழகான விஷயங்களை, சந்தோஷமான விஷயங்களை மட்டுமே அவள் பார்க்க வேண்டும், என்று பெற்றோர் முடிவெடுத்ததால் இந்த விபரீத சிந் தனைகள் வந்ததே தெரியாது. ஆனால் இப் போது அவளுக்கு அவர்கள் மேலும் மேலும் நல்ல விஷயங்களையே அறிமுகம் செய்ய வேண்டியிருந்தது.

காயத்ரிக்குக் கல்யாணம் வெகு விமரி சையாக நடந்தது. மாப்பிள்ளையிடம் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. மாப்பிள்ளைக்கு தானாக விஷயம் தெரிந்த போது, அவனுக்கு வேடிக்கையாய் இருந்தது எல்லாம். பயத்தில் தன்னோடு ஒட்டிக் கொண்டு படுத்துக் கொள் ளும் காயத்ரியை அவனுக்குப் பிடித்திருந்தது.

தங்கமான மாப்பிள்ளை. அவளைப் பூவாய் வைத்துக் கொண்டான். நினைக்கும்போதே அவருக்குக் கண்ணில் நீர் திரண்டது. ஆகஸ்ட் இரண்டு. இதே நாள் இதே நேரம்.

டாக்டர் சொன்னபடி, கல்யாணத்துக்குப் பிறகு அவளிடம் நிறைய மாற்றங்கள் இருந்தன. வீட்டை நிர்வகிப்பதில் அவள் அம்மாவுக்குச் சளைத்தவள் அல்ல. கரப்பான் பூச்சியோ கொசுத் தொல்லையோ இல்லாமல் எப்படி வைத்துக் கொண்டாள் வீட்டை. 'நல்லவேளை, நாமாக மாப்பிள்ளையிடம் ஏதாவது சொல்லி பயமுறுத்தவில்லை' என நினைத்துக் கொண் டார்கள்.

அம்மா இறந்து போனாள். காயத்ரிக்குப் பிரியமான அம்மா. திரும்பவும் அவளுக்கு அந்தப் படபடப்பு வந்தது. மூச்சிரைப்பு. விடாத இழுவை. தூங்கிக் கொண்டிருக்கை யிலேயே பயந்தலறி எழுந்து கொண்டாள். சின்ன வயதில் அவள் பார்த்த அந்தப் புளிய மரத்தை அவள் மறக்கவே இல்லை. பயம் வந்தவுடனேயே ஜுரமும் அந்த மூச்சிரைப்பும் அடங்க நாலைந்து நாள் ஆகின்றன. அம்மா இருந்தால் அவள் தரும் ஆறுதலே பெரிய தெம்பாய் இருந்திருக்கும். அவளோ இல்லை.

கிட்டத்தட்ட அவளது குழந்தையாகவே ஆகிப் போனாள். உதவிக்கு என அவர் கூடப் போய்த் தங்கியிருந்தபோது அவன் மறுத்து விட் டான். 'நான் பாத்துக்கறேன் மாமா..' என்றான் புன்னகையுடன். 'இல்ல மாப்ள நான் என்ன சொல்ல வரேன்னா...'

'நீங்க ஒண்ணும் சொல்லவர வேண்டாம்...' என்றான் அவன். அவரது புன்னகை ஒளிந்து கொண்டது. 'ஐ'ம் சாரி மாமா. நீங்க அவளை வெளி வட்டாரத்தோட ஒட்ட விடாமயே பண்ணித்தான் இப்பிடி ஆயிப் போச்சு...'


அவருக்கு என்ன பதில் சொல்ல என்றே தெரியவில்லை. துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு எதுவும் பேசாமல் திரும்பி வந்து விட்டார்.

அருமையான மாப்பிள்ளை. எப்படி அவளை அவன் கவனித்துக் கொண்டான். வெளியிடம் எங்கே போனாலும் அவளை அவன் கூட்டிப் போனான். 'இத்துனூண்டு கரப்பாம்பூச்சி. நாம எவ்ளோ பெரியவங்க... நாம போயி அதுக்கு பயப்படலாமா? இப்பப் பாரு...' என்றபடி அவள் பார்க்க அவன் பூச்சி யின் அருகே காலால் அதிரச் செய்தான். பூச்சி பயந்து ஒளிந்துகொள்ள ஓடியது. 'பாத்தியா, அது பயந்து ஓடுது... நம்மப் பாத்து... நாம பயப்படலாமா?''

''பயமா இருக்கே?' என்று சிரித்தாள் காயத்ரி. 'பயம்... அப்புறம் அருவருப்பு, இதெல் லாம் சகஜந்தான். போகப் போக சரியாப் போகும், தெரிஞ்சதா?''

"தினசரி சுவாமி முன்னால உக்காந்து கந்த சஷ்டி கவசம் சொல்லு. உனக்கு ஒரு குறையும் வராது..."

''இருட்டுன்றது இருட்டு இல்லைன்னு சொல்லுவான் வான்கோ... தெரியுமா? வான்கோ...?''



"பெயின்டர்தானே...?"

"ஆமாம், இருட்டை உத்துப் பாரு தெரியும், அதுக்குள்ள எவ்ளோ வெளிச்சம் இருக்குன்னு தெரியும்... நீயும் பாரேன்...?"

காயத்ரிக்கு சோதனைக் காலம் முடிய வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எல்லாம் சரியாய்ப் போகும் என நினைத்திருந்த வேளையில்..

அந்தப் பாழாய்ப் போன ஆகஸ்ட் இரண்டு. இதே நாள்...

காயத்ரியும் அவனும் ஸ்கூட்டரில் போனார்கள். சந்தடி மிக்க ஒரு சாலையில் முந்திச் சென்றவன் கைப்பக்கம் தட்டிவிட்டு விட, ரமேஷ் பாலன்ஸ் தவறி... என்ன நடக்கிறது என நினைத்துப் பார்க்குமுன்னே காயத்ரி பயத்தில் மயங்கி வண்டியிலிருந்து விழுந்து விட்டாள். ரமேஷ் நிலைதடுமாறி மறு பக்கம் விழ லாரியொன்றில் சட்டை மாட்டி தரையோடு இழுக்கப்பட்டான் அவன். முகத்தில் நீள சிராய்த்து முகம் அடையாளமே இல்லாது போயிற்று.

●●●●● இந்தியாவில் சாலை விபத்தில் மட்டும் வருடந்தோறும் 70,000 பேர் இறக்கிறார்கள். இதில் பதினைந்து சதவீதம் பெரு நகரங்களிலும், முப்பத்தைந்து சதவீதம் தேசிய நெடுஞ்சாலைகளில் நடக்கும் விபத்துக்களிலும் இறக்கிறார்கள்.

— ஜம்ஷெட்பூர் ஆர்.எம். கிருஷ்ணன்

பதறிப்போய் அப்பா வந்து பார்த்தபோது காயத்ரி ஆஸ்பத்திரியில் மூச்சிரைக்கப் படுத்திருந்தாள். விபத்து என்று ரமேஷ் உடலைப் போஸ்ட்மார்ட்டம் பண்ணி பொட்டலமாய்ச் சுற்றிக் கொடுத்தார்கள்.

காயத்ரியை யாரோ கைத்தாங்கலாய் அழைத்து வந்தார்கள். அப்பா அவள் காதில் 'போம்மா, போயி நமஸ்காரம் பண்ணிட்டு வந்துரு... ரொம்ப கிட்டக்க போக வேணாம். பாண்டேஜ் எதையும் டிஸ்டர்ப் பண்ணிடாதே' என்று சொல்லியனுப்பினார். அந்தப் பொட்டலத்தைப் பார்க்கும்போதே அவளுக்கு மூச்சிரைப்பு அதிகமாகி விட்டது. அழுகை ஒரு பக்கம். படபடப்பு ஒரு பக்கம். போய் நமஸ்கரித்தவள் திடீரென்று யாருமே எதிர்பாராத ஒரு காரியம் செய்தாள். என்ன தோன்றியதோ அவளுக்கு, அந்தப் பொட்டலத்தை முகப் பகுதியில் சட்டென்று பிரித்தாள்.

அந்தக் கோரத்தைப் பார்த்து அப்பாவே பயந்து போனார். யாரோ ஓடிவந்து காயத்ரியைத் தூக்கினார்கள். அவள் மயங்கியிருந்தாள். அவசர அவசரமாய் முகத்தை மூடிய போது அதிலிருந்து தாளமுடியாத வீச்சமும் இரத்தமும் சதையும் பிதுங்கி ஈரம் பரவியது.

காயத்ரியைத் தனியே வீட்டில் விட்டு விட்டுப் போக முடியாது என்று ஆகிவிட்டது. அவளது பயம் அதிகரித்திருந்தது. எதற்கெடுத்தாலும் அவளுக்கு உடம்புக்குப் படுத்தியது. அப்பா அம்மாவுக்குப் பிறகு, நல்ல கணவனாக அமைந்தாலும் பாவம், அதற்குக் கொடுப்பினை இல்லை.

ஆகஸ்ட் ரெண்டு... அந்த நாளை அவரால் மறக்கவே முடியாது.

பொழுது போகவில்லை என்றால் காயத்ரிக்குப் பாட்டு கேட்கலாம். சாஸ்திரிய சங்கீதப் பிரியை அவள். வீட்டில் பிரபல வித்துவான்கள் அத்தனை பேர் கேசட்டும் வாங்கியடுக்கினார் அப்பா. தொலைக்காட்சி போடுவதே இல்லை. ஒருமுறை அதில் எதுவோ பார்க்கக் கூடாததைப் பார்த்து நாலு நாள் அவஸ்தைப்பட்டாள் காயத்ரி. அத்தோடு தொலைக்காட்சி பார்க்கிறதையே நிறுத்தியாகி விட்டது.

குழந்தைக்குத் தந்தைக்குத் தந்தையாய், தாய்க்குத் தாயாய்ப் பார்த்துக் கொண்டார் அவர். வெளியே நாலு இடம் போனால் சிரிப்பும் கேலியும் குறும்புமாய் வளையவரும் இளம் தம்பதிகளைப் பார்க்க காயத்ரிக்கு அழுகை வந்தது. அவருக்கும் அது தாளமுடியாதிருந்தது. 'ஏன் இப்படி இவளுக்கு மாத்திரம் ஆச்சி. இவளுக்கென்ன அழகில்லையா, அறிவில்லையா? என்ன குறை இவளுக்கு... ஒரு குழந்தையைக் கூடப் பார்க்காம, இப்படி சூன்யமா உக்காந்திருக்கே இது...' என்றிருந்தது.

தனியே அவளை விட்டுவிட்டு வரவே வர வர யோசனையாகி விட்டது. ஒருமுறை யாரோ கதவைத் தட்டினான் என்று பயந்து கொண்டு அப்பா வரும் வரை மாடிக்குப் போய் உட்கார்ந்திருந்தாள். அதற்குப் பின் வாசலை அவர் பூட்டிக் கொண்டு வெளியே போய், வர என்றாகிவிட்டது.

பலசரக்குக் கடைக்காரனிடம் மளிகை சாமான் லிஸ்ட் கொடுத்தார். வீட்டில் கொண்டுவந்து தந்து விடுவார்கள். குழந்தைக்குப் பூ வாங்கிக் கொண்டார். ஆ, ஞாபகமாய்க் கற்பூர வாழைப்பழம் வாங்கிக் கொண்டார்.,

ரயில்வே கிராசிங்குக்கு அந்தப்புறம் இருந்தது அவரது வீடு. கிளம்பி நேரமாகி விட்ட அவசரத்தில் அவர் விறுவிறுவென்று வீடு திரும்பினார். நேரம் ஆக ஆக அவளுக்கு என்னென்னமோ விபரீதக் கற்பனைகள் வரும்.

அவரது அவசரத்தில் வேகமாய் வந்து கொண்டிருந்த ரயிலை அவர் கவனிக்கத் தவறி விட்டார்.



கேபிள் ஆபரேட்டர்களிடம் ஜாக்கிரதையாயிருங்கள்!

சுறாமீன் என்றவுடனேயே அதன் கூரிய பயங்கரப் பற்கள்தான் நினைவுக்கு வரும். ஆயுள் முழுவதும் இந்தப் பற்கள் விழுந்து முளைத்துக் கொண்டிருக்குமாம். இப்படி ஒரு சுறாவின் வாழ்நாளில் சராசரியாக முளைக்கும் பற்கள் முப்பதாயிரம்!

- சுறாமீன் தன் இரையை (அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும்) கடித்துத் தின்ன வேண்டுமென்பதில்லை. அப்படியே கூட விழுங்கிவிடலாம். அந்த அளவுக்கு அதற்கு ஜீரண சக்தி! பொதுவாக மனிதர்களை சுறா வேண்டுமென்று தாக்குவதில்லை. கடற்சிங்கம் போன்ற தனது விருப்பமான இரை என்று தவறாக எண்ணித்தான் மனிதனை அது தாக்குகிறது.

- சுறா நீந்திக் கொண்டே இருக்க வேண்டியது இயற்கையின் கட்டாயம். சில நொடிகள் கூட அசையாமல் அதனால் இருக்க முடியாது. அப்படியிருந்தால் அது கீழே மூழ்கிவிடும்.


— இப்படி சுறாவைப் பற்றிய பல அரிய தகவல்களை ஆகஸ்ட் மாதம் பத்திலிருந்து பதினைந்தாம் தேதிவரை இரவு ஒன்பதிலிருந்து பத்து மணி வரை ஒளிபரப்பப் போகிறார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்கிறாகள் டிஸ்கவரி சானல்காரர்கள். இதை 'ஷார்க் வீக்' (சுறா வாரம்) என்றே அழைக்க இருக்கிறார்கள்.

இவர்களின் பெருமைக்கு நியாயமான காரணமுண்டு. சினிமா, பாப் இசை இவற்றின் பக்கமே தலை வைத்துப் படுக்காமல், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில், பதினேழு மொழிகளில் வெற்றிகரமாக வலம் வருவது என்றால் சும்மாவா? 1985-ல் ஜான் ஹென்ரிச் என்பவரால் தொடங்கப்பட்ட இந்தச் சானல் இரண்டு வருடங்களாகத்தான் இந்தியாவை எட்டிப் பார்க்கிறது என்றாலும் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது - முக்கியமாக தமிழகத்தில்.

'இந்தியாவில் படப்பிடிப்புகள் நடந்ததுண்டா?' என்ற கேள்விக்கு வந்த

உலகிலேயே டிஸ்கவரி சானல் நிகழ்ச்சிகள் இலவசமாக ஒளிபரப்பாவது இந்தியாவில் மட்டும்தான். 1999 வரை இந்தச் சலுகை தொடரும்....

பதில் இதுதான். "நாங்கள் தரத்திலும் உழைப்பிலும் காம்ப்ரமைஸ் செய்து கொள்வதில்லை. அரைமணி நேர எபிஸோடுக்கு ஐம்பது லட்சம் டாலர் (சுமார் இரண்டு கோடி ரூபாய்) செலவு செய்கிறோம். எந்த நாட்டில் அறிமுகமாகிறோமோ அந்த நாடு தொடர்பான காட்சிகளை எடுக்க வேண்டுமென்று நாங்கள் அவசரப்படுவதில்லை. எது போன்ற சப்ஜெக்டுகளை உலகம் முழுவதும் பார்த்து ரசிப்பார்கள் என்பதை



மனத்தில் கொண்டுதான் படப்பிடிப்பைத் தீர்மானம் செய்கிறோம். வருங்காலத்தில் ஒரு வேளை இந்தியாவிலும் நிறைய படப்பிடிப்புகள் நடத்தலாம். சமீபத்தில் ஓணம் பற்றி ஒரு நிகழ்ச்சி தயாரித்திருக்கிறோம். கௌதம் கோஷ் தயாரித்துள்ள "பியாண்ட் ஹிமாலயாஸ்" என்ற வீடியோவின் உரிமையையும் பெற்றிருக்கிறோம்."

"இதுவரை இலவசமாக இந்தியாவை எட்டி வந்த டிஸ்கவரி சானல் சமீபகாலமாக 'பே சானல்' ஆக மாறிவிட்டதே!" என்றபோது வன்மையாக மறுத்தார்கள். "உலகிலேயே டிஸ்கவரி சானல் நிகழ்ச்சிகளை இலவசமாக நாங்கள் ஒளிபரப்புவது இந்தியாவில் மட்டும்தான். 1999 வரை இந்தச் சலுகை தொடரும் என்பதை தெளிவாகவே எங்கள் நிறுவனர் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது இது போன்ற வதந்தி பரவக் காரணம் இதுதான். நாங்கள் உரிமை அளிக்காத சில நாடுகளில் கூட டிஷ் ஆன்டனாவைப் பயன்படுத்தி எங்கள் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். இதைத் தடுக்க பிரத்யேக சிக்னல்களை எங்கள் அலைவரிசையில் கலக்கிறோம். இதைப் பிரித்து அறிந்து கொள்ள, 'டி கோடர்' என்கிற கருவியை கேபிள் ஆபரேட்டர்கள் (விலை சுமார் ரூ. 24,000/-) வாங்க வேண்டியிருக்கிறது. அதைத்தான் அவர்கள் மக்கள் தலையில் கட்டுகிறார்கள்!" என்கிறார்கள்.

சர்வதேச அளவில் நடைபெற்ற ஒரு கணிப்பின்படி தரமான பொருளைத் தருபவர்கள் என்ற வரிசையில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது டிஸ்கவரி சானல். இதைவிட சந்தோஷப்பட வேண்டிய இன்னொரு விஷயமும் உண்டு. அமெரிக்காவில் எண்பதாயிரம் பள்ளிகளில் டிஸ்கவரி சானல் நிகழ்ச்சிகளின் உதவியுடன் வகுப்புகள் நடத்துகிறார்களாம்!

— ஜி.எஸ்.எஸ்.

6 கன்னியராகி

கற்பூர ஹாரத்தி காட்டினார். தீர்த்தம் தந்தார் சடாரி சாத்தினார்.

கூட்டத்தில் ஒருத்தியாகத்தான் நர்மதாவும் நின்றிருந்தாள்.


ஆனால் கிருஷ்ணமாச்சாரி வித்தியாசமே காட்டிக் கொள்ளவில்லை. அவர் தலைக்கு மேலே பெருமாள் தெரிந்தார். வலதுகை மடித்து ஆதிசேஷன் மீது அனந்த சயனம். அவர் முகத்தில் தெரிந்த அதே பற்று கடந்த புன்னகை.

அந்த மிதமான உயரம், உடல் சிவப்பு, நெற்றித் திருமண். வயது தெரியாத, உடல் வாகு. முகத்தில் ஒரு நிலையில் உட்கார்ந்து விட்ட சாந்தி.

நர்மதா மனசில் விலகி நின்று அவரைப் பார்த்தாள்.

"கொஞ்சம் இருங்கோ. பிரசாதம் வாங்கிண்டு போகலாம். நைவேத்தியம் காட்டிட்டு வந்துடறேன்."

கலையவிருந்த கூட்டத்தைக் கையமர்த்தி நிற்கவைத்தார். திரும்பி பெருமாள் சந்நிதியில் வைத்திருந்த நைவேத்திய பாத்திரத்தை எடுத்தார்.



பெரிய வெண்கல பாத்திரம். வலது தோளில் தூக்கினார். இடது கையில் கை மணியை எடுத்தார்.

கை மணி கனக்கும். வலிக்கிற அளவு. சிறு வயசில் அண்ணா ஸ்ரீதரும் அவளும் மாறி மாறித் தூக்கி வந்திருக்கிறார்கள், விளையாட்டாக.

அடுத்து தாயார் சந்நிதி, ஸ்ரீராமர் சந்நிதி, கிருஷ்ணர் சந்நிதி என்று பிராகாரத்தைச் சுற்றி ஒரு வட்டம் வரவேண்டும்.

வழக்கமாக மடப்பள்ளிச் சிப்பந்தி கேசவன் தான் கை மணி சுமந்து பின்தொடர்வான். "கேசவன் இல்லீங்களா சாமி?" யாரோ கேட்டார்கள்.

"கரெண்ட் பில் கட்டப் போய்ட்டான்."

யாருக்கும் கைமணி வாங்கி அவர் சிரமம் குறைக்கத் தோன்றவில்லை.

"இப்படிக் கொடுங்கோப்பா" என்று அவரை நெருங்கி மணிக்குக் கை நீட்டினாள்.

கிருஷ்ணமாச்சாரி நிமிர்ந்து பார்த்தார்.

"நீயா?" என்று தயங்கினார்.

"ஏன்?" தான் மணி சுமப்பதை அவர் ஏற்கவில்லையா என்று பார்த்தாள். அவர் புன் சிரிப்பில் மாற்றமில்லை.

"சரி."

முதலில் தாயார் சந்நிதி. ஒன்று தொட்டு ஒன்றாய் இரட்டை மண்டபத்துக்குப் படியிறங்கிப் படியேறினால் வருவது.

நர்மதா மணி தூக்கி அவரைப் பின் தொடர்ந்தாள். அங்கே நைவேத்தியம் ஆனதும் கிருஷ்ணமாச்சாரி படியிறங்கினார்.

இனி பிராகாரச் சுற்று. ஒவ்வொரு மூலைக்கு ஒரு சந்நிதி.

இரண்டடி முன்னால் கிருஷ்ணமாச்சாரியும் பின்னே நர்மதாவும் நடந்தனர்.

"திருவனந்தபுரத்துக்காரா வெள்ளிக்கெழமை வரப் போறா?"

நினைவூட்டுகிறாரா?

இரண்டு மூன்று காலெட்டுக்கு அவர் பேசவில்லை.

"எல்லாம் நன்னா முடியணும்!"

நிலவொளியில் ஆடி...

அவள் பதிலளிக்கவில்லை.

"காலம் போய்ண்டிருக்கு."

தர்மதாவின் கண்கள் சுருங்கின. அவர் இடுப்பில் கட்டியிருந்த உத்தரீயத்தைக் கவனித்தாள்.

வறுமையில்லை. புதுசும் பழசும் வளமையும் வறுமையும் ஒன்று என்ற நிர்ச்சிந்தை.

"மஹாலக்ஷ்மி ராத்திரியிலே நன்னாத் தூங்கறதில்லே."

சுமந்து நடக்கும் மணி நாக்கு கையசைவில் டிங்டிங் கென்று ஆடி சிற்றோசை வந்தது. வீசும் காற்றில் கோயில் நந்தவனத்துப் பவழ மல்லிகை மணம்.


"எல்லாத்துக்கும் ஒரு பருவம் உண்டு. வேளை உண்டு. அதைப் புரிஞ்சுண்டா போறும்."

எதிரில் தெரிந்த பிராகாரச் சுவருக்கோ, காற்றுக்கோ சொல்வதுபோல் அவர் நடந்தார்.

தர்மதா வெண்கலப்பாத்திரத்தைப் பார்த்தாள்

"நேக்குப் பெருமாள் தான் தெரியும்" என்று கூறியவர், நிறுத்திப் பெருமூச்சு விட்டார். "அதுவும் எவ்வளவு தெரியும்னு தெரியாது."

அப்பா கொஞ்சமாகப் பேசுபவர். எதையும் வலியுறுத்தாதவர்.



வையவன்

வெளிப்படுத்தாதவர்.

'அம்மா தூங்குவதில்லை. கவனிக்கிற நானும் தூங்குவதில்லை. எங்கள் சுமை கனக்கிறது. விடுதலை தா. வருகிற வரனை ஏற்றுக்கொள்.'

அவரது சின்னச் சின்ன வாக்கியங்களில் இவ்வளவு வெளிப்பாடு.

மூன்று வரன்களை நர்மதா மறுத்திருக்கிறாள். 'இதை மறுக்காதே. எப்படியிருந்தாலும் சமரசம் செய்து ஏற்றுக் கொள்'. இதுதான் அவர் விருப்பம். புரிந்தது.

அவர் மனசு புண்படுகிற மாதிரி இதுவரை எதுவும் பேசியதில்லை. நர்மதா மௌனமாய் நடந்தாள்.

ஆண்டாள் சந்நிதியில் நைவேத்தியத்திற்குப் பிறகு, பேசத் தோன்றியது.

"இவன் ஏம்பா காத்திட்டிருந்தா?"

கிருஷ்ணமாச்சாரி திரும்பிப் பார்த்தார்.

"பெருமாளுக்குக் காத்திருந்தா என்ன, ஒரு தெளிவுக்குக் காத்திருந்தா என்ன? ஒரு பொண்ணு ஒரு தீர்மானத்துக்குக் காத்திருக்கப் படாதாப்பா?"

அவர் நெற்றி நெரிந்து திருமண் உதிர்ந்தது.

நைவேத்திய பாத்திரத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டுத் தோளில் தூக்கினார்.

வீடு திரும்பியதும் நர்மதா கொல்லைப் புறம் நோக்கி நடந்தாள்.

எதிர்ப்பட்ட மஹாலக்ஷ்மி அவளை நிமிர்ந்து பார்த்தாள். மோகன்ராஜைப் பார்க்கப் போனது தெரியும். அம்மா விசாரிப்பாள் என்று எதிர்பார்த்தாள் நர்மதா.

இல்லை. ஒரு சுமுகமில்லை. ஒரு வறட்டு மௌனம். நர்மதாவுக்கு மனசு நொந்தது.

ஒவ்வொரு தந்தையும் தாயும் பெண்ணுக்கு வயசானதும் அந்தச் சுமையிலிருந்து எப்போது விமோசனம் என்று தவிப்பது போல் பட்டது.

அவள் கிணற்றடிக்கு நடந்தாள். பிளாஸ்டிக் வாளியில் சோப்புத்தூள் நுரைக்குமிழிகள் நொறுங்கி அடங்கி விட்டிருந்தன.

போகும் முன் ஊற வைத்திருந்த உடைகள்.

துவைக்கும் கல்மீது ஒரு சேலையை எடுத்துப் போட்டாள். அழுக்குப் போக குமுக்கிக் கசக்கத் தொடங்கினாள்.

அருகில் ஒரு தென்னங்கன்றுக்குத் தண்ணீர் நிற்க மடை வெட்டிக் கொண்டிருந்தார் அனந்தாச்சாரி.

துணி குமுக்கும் ஒலி கேட்டுத் திரும்பினார்.

"என்ன நார்மூ...மோகன்ராஜ் எப்படி இருக்கான்?"

"நல்லாத்தான் இருக்கான்." நர்மதா விறைப்பாகப் பதில் சொன்னாள். அனந்தாச்சாரி அவளை உற்றுப் பார்த்தார்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

கையில் மண்வெட்டியோடு நிற்கும் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். செல்லம் அதிகமாக இருக்கும் இடத்தில் கோபம் வருகிறது. நர்மதாவுக்கு வந்தது.

"ஒங்க எல்லாருக்கும் நான் விரைவாகி வீட்டை விட்டுப் போயிடணும். ஒடனே போயிடணும். ஒரு விடுதலை வேணும் ஒங்களுக்கு. இல்லே?"

அவர் கண்கள் தாழ்ந்தன.

"நர்மதா."

கண்ணில் முட்டிய கண்ணீரை வெளிப்படுத்தாமல் அவள் சேலை கசக்கத் தொடங்கினாள்.

"மஹாலக்ஷ்மி மறுபடியும் அனத்தினாளா?"

நர்மதா பதிலளிக்க வில்லை. அழுக்குப் போகாத சேலை மூலைக்கு சோப்புத் தேய்த்தாள்.

"கிருஷ்ணன் ஏதாவது சொன்னானா?"

அவள் தேய்ப்பதை நிறுத்தி நிமிர்ந்து பார்த்தாள்.

"கல்யாணம்... கல்யாணம். புருஷன் பிள்ளைகுட்டி வீடு வாசல்... த ஸேம் ஓல்ட் ரொடீன். இதிலே நேக்கு ஈடுபாடு வல்லியே? ஏன் கட்டாயப்படுத்தறேள்?"

அருள்வாக்கு

ஊரிலே பலவிதமான அயோக்கியர்கள் இருக்கிறார்கள். அதைப் பார்த்து வாஸ்தவமாகவே ஒருவனுடைய மனசு கொதிக்கிறது. அவன் அந்தத் தப்பையெல்லாம் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறான். 'அவன் அந்த அயோக்கியத்தனத்தைச் செய்தான். இவன் இந்த அயோக்கியத்தனத்தைச் செய்தான்' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறான். இவனுக்கு வாக்கும் மனசும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இவன் இப்படிச் சொல்வதால் இவனுக்கும் பிரயோஜனமில்லை. ஜனங்களுக்கும் பிரயோஜனமில்லை. தப்புச் செய்கிறவர்களுக்கும் பிரயோஜனமில்லை. இப்படி வியர்த்தமாக வாக்கும் மனசும் ஒன்றுபட்டிருப்பதைச் சத்தியம் என்று சொல்வதற்கில்லை.

ஒருவன் மனசில் கெட்ட எண்ணங்கள் எழுகின்றன. அதை அவன் அப்படியே வாக்கிலே வெளியிடுகிறான். அது சத்தியமாகிவிடுமா? ஆகாது.

ஆகவே சத்தியம் என்றால் வாக்கும்

மனசும் ஒன்றுபடுவது மட்டுமல்ல. நல்லமனசிலே தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை வாக்கில் சொல்வதே சத்தியம். நல்ல விளைவுகளை உண்டாக்குவதே சத்தியம்.

மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் பிரியமாகவும் எது இருக்கிறதோ அதுவே சத்தியம் என்பதாக சத்தியத்துக்கு ஒரு லட்சணத்தை வகுத்திருக்கிறார்கள்.

ஸத்யம் பூதஹிதம் ப்ரியம்

பேச்சினாலும் காரியத்தினாலும் எண்ணத்தினாலும் பிராணிகளுக்கு நன்மையை உண்டாக்குவதே சத்தியம்; கெடுதல் செய்வதெல்லாம் அசத்தியமே.

ஒருவனுக்கு நல்லதைச் சொன்னால் மட்டும் போதாது. அதை அவன் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் சொல்ல வேண்டும். நல்லதைக் கூட கடுமையாகச் சொன்னால் அதை யாரும் ஏற்க மாட்டார்கள். இவ்வாறு நிஷ்பலனாகப் போகிற நல்ல வாக்கு சத்தியமாகாது. நல்லதாகவும் இருக்க வேண்டும்; அது யாரை உத்தேசித்துச் சொல்லப்படுகிறதோ அவனுக்கு இன்பம் தரும் விதத்தில் ஹிதமாகவும் சொல்லப்பட வேண்டும். இதுவே சத்தியம்.

'சத்தியத்தைச் சொல், பிரியமானதைச் சொல், சத்தியத்தைப் பிரியமாகச் சொல்ல முடியவில்லை என்றால் அப்போது அப்படிப்பட்ட சத்தியத்தையும் சொல்லாதே. கேட்கப் பிரியமாயிருந்தாலும், அசத்தியத்தைச் சொல்லாதே' என்பது பெரியோர் வாக்கு.

ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத்
ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம்
ப்ரியம் ச ந அந்ருதம் ப்ரூயாத்

காமமும் குரோதமும் உள்ள மனசிலிருந்து இப்படிப்பட்ட பிரியமான, நன்மையான வாக்கு வராது. க்ஷேமத்தையே உண்டாக்கும் சத்திய வாக்கு வரவேண்டுமானால் அதற்கு அடிப்படையாக காம, குரோதங்களற்ற நல்ல மனம் வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



உணர்ச்சி வேகத்தை விட அதில் உண்மை ஒலிப்பதை அனந்தாச்சாரி கவனித்தார்.

அவர் மண்வெட்டியைக் கீழே வைத்தார்.

"நேக்கு இண்ட்ரஸ்ட் இல்லாதப்போ நான் யாருக்காகக் கல்யாணம் பண்ணிக்கணும்? உங்க கட்டாயத்துக்காகவா?"

அவர் நெருங்கி வந்தார். தோளைத் தொட்டார்.

"கொழந்தே.. நானும் ஒன்னை நிர்பந்திப்பேன்னு நெனச்சுண்டியா?"

அவள் விசும்புவது போல் இருமுறை மூக்கை உறிஞ்சினாள்.

"தாத்தா... நான் என்னைத் தேடிண்டிருக்கேன். ப்ளீஸ் என்னை விடுங்கோ. இந்த வயசிலே ஓங்களுக்கு அந்த பாக்டரி பிரச்னைக்குப் பரிகாரம் தேடத் தோணற தோல்லியோ?"

அனந்தாச்சாரிக்கு பளிச்சென்று எதுவோ புரிந்தது. இவள் குடும்பம் என்ற குறுகி விடுவதை எதிர்க்கிறாள். இவளுக்கு ஒரு வானம் வேண்டும்.

அவர் பேச்சை மாற்றினார்.

"போற வழியிலே தானே ஃபாக்டரி சைட். பார்த்தியா?"

"பாத்தேன், அது எதுக்கோ சவால் விடறது!"

அவர் கண்கள் விரிய அவள் முகத்தின் தீவிரத்தைக் கவனித்தார்.

"மண்ணுக்கு.. ஆத்துக்கு.. மனுஷாளுக்கு.. காத்துக்கு... இப்ப மோகன்ராஜுக்கு."

அனந்தாச்சாரி அவள் உணர்ந்து பேசுகிறாள் என்று புரிந்தது.

"எல்லாரும் கைகட்டி நின்னுண்டா... ஒரு எதிர்ப்புமில்லேன்னா அது தலைமேலே ஏறி உட்கார்ந்துடும். இப்படி விட்டுவிட்டே, நேக்கென்ன வந்ததுன்னு போய்ப் போயே ஆன நாசம் மாதிரி இதுவும் போயிடும்."

காற்றில் தென்னை ஓலை ஆடியது.

"கோயில்லே அந்த எஞ்சினியர் பத்ரி நாராயணன் வந்தார்."

"யாரு?"

"அந்த பாக்டரி கன்ஸ்ட்ரக்ஷன எஞ்சினியர்!"

"நீ பேசினியா?"

"இல்லே. அவர்தான் பேசினார்."

"என்ன சொன்னார்?"

நர்மதா நடந்ததைச் சொன்னாள்.

"அவங்க எம்.டி.யை நீ உசுப்பி விட்டிருக்கே?"

"ஏன்...பயந்துடணுங்கறேளா?"

"இல்லே."

"தாத்தா... டேக் இட் ஸீரியஸ்... வெள்ளிக்

கிழமை நடக்கற கூட்டத்திலே நானும் இருக்கேன். நானும் வர்றேன்."

அவர் மௌனமானார்.

"திருவனந்தபுரத்துக்காரா வந்தா வந்து திரும்பிப் போகட்டும்."

அது ஒரு தீர்மானமான முடிவு என்பதை அனந்தாச்சாரி புரிந்து கொண்டார்.

வெகு நேரம் வீட்டில் தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. வீட்டு வேலைகளைத் தானே வலிய எடுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

மஹாலக்ஷ்மியின் மௌனம் கலையவில்லை. உள்நடைத்திண்ணையில் படுத்திருந்த கிருஷ்ணமாச்சாரி மின்சாரம் இல்லாததால் கை விசிறியால் விசிறிக் கொண்டு படுத்திருந்தார். அதுவும் ஒரு வகை மௌனம்.

அவளைக் கலகக்காரி என்று குற்றம் சாட்டும் மௌனம்.

மாலை மணி நாலானதும் வெளிக்காற்றை, குற்றச்சாட்டு இல்லாத சுதந்தரக் காற்றைச் சுவாசிக்கத் தோன்றியது.

மீனாட்சியைப் பார்த்துவிட்டு வந்தாலென்ன?

விறுவிறுவென்று உடை மாற்றி தலைவாரிக் கொண்டு லேசாகப் பவுடர் போட்டு ஸ்டிக்கர் பொட்டு ஒட்டிக் கொண்டாள்.

தெரு நடையில் சாத்தியிருந்த லேடீஸ் சைக்கிளை எடுக்கு முன் திரும்பினாள்.

"அம்மா... நான் மீனாட்சி வீடு வரைக்கும் போய்ட்டு வர்றேன்" என்று சொன்னாள்.

பதில் வரவில்லை.

தாத்தா மட்டும் நிமிர்ந்து பார்த்தார்.

இந்த மௌனக் குற்றச்சாட்டிற்கு தானும் ஆளான பார்வை அது.

அவருக்கு மட்டும் தலையசைத்து விடை பெற்று அவள் சைக்கிள் ஏறினாள்.

குறுக்கு வழி வேண்டாம்; நேர்வழியில் நெடுஞ்சாலையில் போவோம் என்று தோன்றியது.

திருக்கூடல் சாலை வடக்கிலிருந்து தெற்கே ஒரு கி.மீ. போய் கிழக்கு மேற்காய் ஓடும் நெடுஞ்சாலையில் இணையும். சாலையின் இரு புறமும் கடைகளும் வீடுகளும். இரண்டு வங்கிகள். நாலைந்து அரசு அலுவலகங்கள்; ஒரு சினிமா தியேட்டர் என்று கட்டடங்கள்.

மூன்று மாதம் ஊரைவிட்டு வெளியே போய்த் திரும்பியிருந்ததால் பரிச்சய முகங்கள் புன்னகை செய்தன. கூடப்படித்த பெண்கள்.

'அவள் தன் வீட்டிற்கு வருகிறாளா?' என்று எதிர்பார்க்கும் சிநேகிதிகள்.

'அப்புறமா வர்றேன்' என்று கையாட்டி விட்டு அவள் சைக்கிள் மிதித்தாள்.

ஒவ்வொரு கட்டடமும் உன்னை எங்கே இத்தனை நாளாகக் காணோமே என்று குசலம் விசாரிப்பது போல் பட்டது.

இங்கேயே தொடர்ந்து உழன்றால் வரும் சலிப்பு மறைந்து விட்டிருந்தது.

'நான் இந்த சாலைக்கு உரியவள். இந்த மண்ணுக்கு உரியவள். இந்த மண்ணில்தான் எனது வேர்கள்.'

அப்பா... இந்த சொந்தத்தில் என்ன ஒரு சுகம். என்ன ஒரு பாதுகாப்பு. என்ன ஓர் அடையாளம்!

இந்த ஊரின் இன்பமும் துன்பமும் வளர்ச்சியும் வீழ்ச்சியும் தனக்கு மிக மிக நெருங்கிய பாதிப்புகளை ஏற்படுத்தியதை நினைத்தாள்.

அடுத்து, கட்டப்படவிருக்கும் கெமிகல் ஃபேக்டரி நினைவு எழுந்தது.

அது எதிர்ப்புகளை மீறி எழுந்து நின்றால் என்னென்ன மாற்றங்கள் வரும்?

எந்த அவலம் நேரும்?

இருள் போல் கவிய வந்த அந்த நினைவை உதறித் தள்ளினாள் நர்மதா.

அது தோல்விக்கு வரவேற்பு. இல்லை இந்த எண்ணம் வரவேண்டாம். அது வந்தால் தோல்வியும் பின் தொடரும்.

அப்புறம் வெறும் சாட்சியாக எல்லாவற்றையும் எதிரிட்டுப் பழங்கதை பேசிப் புலம்பி பொருளற்றுப் போகும்.

சிந்தித்துக் கொண்டே அவள் மேற்கே திரும்பிய நெடுஞ்சாலையில் கலந்து சைகிள் மிதித்தாள்.

மீனாட்சி வீடு அங்கிருந்து இரண்டு கி.மீ. இருட்டும் முன் திரும்பி விடலாம்.

காவல் நிலையம் தாண்டி ஊர் எல்லை கடந்து அரை கி.மீ. தூரம் அவள் சைகிள் மிதித்திருப்பாள்.

ஒரு பெரிய ஆலமரம் வந்தது. விழுது விட்டுப் பெரிதாகப் படர்ந்த ஆலமரம். பின்னணியில் பயிர்ப்பசுமை. நீலவானத்திரை.

இறங்கி சைக்கிள் தள்ளி நடந்தால் என்ன? இந்த இயற்கையில் சற்று நடைவேக நிதானத்தில் கரைவது என்ன சுகமாயிருக்கும்.

அவள் இறங்கி சைக்கிள் தள்ளி நடக்கத் தொடங்கினாள். ஐந்து நிமிஷம்.

பின்னாலிருந்து ஒரு ஜீப் அவளைக் கடந்து சென்று, சாலையோரம் அவள் வழியை மறிப்பது போல் முன்னே நின்றது.

பத்ரி அதிலிருந்து இறங்கினான். அவளை நோக்கிப் புன்னகையோடு எதிரில் வந்தான்.

(தொடரும்)

காரம் என்றாலும் நடுநிலை!

✉ வாஷிங்டன் ஸ்ரீதரின் முயற்சிகளையும், நமது சிவாஜிக்கு சிறப்பு ஆஸ்கார் விருது வழங்கப்படவேண்டும் என்ற அவரது எண்ணத்தையும் பார்த்தபோது முதலில் பிரமிப்பு ஏற்பட்டது. அப்புறம் ஏற்பட்டது வருத்தம். பேட்டிக்கு பேட்டி சிவாஜியைப் பாராட்டி மரியாதை கொடுக்கும் கமல் கூடவா, ஸ்ரீதரின் முயற்சிக்கு உதவவில்லை? ரஜினி, கமல், பாரதிராஜா, மணிரத்னம், பாலசந்தர் இவர்கள் இணைந்து முயன்றால் ஸ்ரீதரின் உழைப்புக்குப் பலன்கிட்டாமலா போகும்?
காஞ்சிபுரம்,
தென்காசி டி. கணேசன்.

✉ அ.தி.மு.க. – ம.தி.மு.க. கூட்டணியால் அ.தி.மு.க.விற்கு லாபமுமில்லை; நஷ்டமுமில்லை. ஆனால், ம.தி.மு.க.விற்கு ஏற்படப் போகும் நஷ்டத்தை வை.கோபால்சாமி போகப் போகப் புரிந்து கொள்வார். ஜெயலலிதா – வை. கோபால்சாமி சந்திப்பிற்குப் பிறகு அவர்கள் விட்ட (தனித் தனி) அறிக்கைகளைப் படிக்கும் போது, அதில் தி.மு.க.வையும், அதன் தலைவர் கருணாநிதியையும் எதிர்க்கும் சுயநலம் மட்டும் தான் தெரிந்ததே தவிர, நாட்டு நலன் தெரியவில்லை. ஆக, இந்தக் கூட்டணி, சுயநலக் கூட்டணிதான் என்பது தெளிவாகிறது!
தேவராயனேரி, மு. கருணாநிதி.

✉ அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படும் சங்ராச்சாரியாரின் தேவையில்லாத பேச்சு; தன் தலையில் தானே மண்ணைப் போடும் யானை – வை.கோ; வைரமுத்து விழாவில் கலைஞரின் அருவருப்பான புராணக் கதை; அம்பேத்கர் பற்றிய அருண்சோரி விமர்சனம்... இவ்வார கல்கி சற்று காரமாகவே இருந்தது. நடுநிலை பளிச்சிட்டது.
சென்னை – 78,
ம. வைரவாணன்.

✉ குழந்தைகளின் அதிகப் பிரசங்கித்தனம் கூட குதூகலம் தரக்கூடியதுதான். அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையாவை அதனால்தானே ஆராதிக்கிறோம்? யார் சார் இந்த 'ரெட்டைவால் வாண்டு? அதுவும் ஒரு தோத்தோக் குட்டியுடன்! இந்தப் போடு போடுகிறது! அதன் தலையில் செல்லமாய் ஒரு குட்டு குட்ட, கை துறுதுறுக்கிறது!
திருவண்ணாதபுரம், முகதி. சுபா.

✉ கமலின் ஸ்பெஷல் பேட்டி உண்மையில் படு அசத்தல். உங்களின் கிடுக்கிப்பிடி கேள்விகளும், அவரின் புத்திசாலித்தனமான பதில்களும்... ஆஹா! இந்தியா – இலங்கை ஆட்டம் மாதிரி படுசுவாரஸ்யமாக இருந்தது. ஆனாலும்; இயக்குனர்கள் விஷயத்தில் மூக்கை நுழைக்கும் கேள்விக்கு கமல் சொன்ன பதில்தான் திருப்தியாக இல்லை!
சேலம் – 1, கே. ராஜபாலு.

✉ சச்சின் டெண்டுல்கரின் அணித் தேர்வு தொடர்பான மனவலிமிக்க தகவல்கள் உண்மையென்றால், இந்திய கிரிக்கெட் போர்டையே இழுத்து மூடி விடலாமே? ஏன் வீண் வேலை?
கும்பகோணம்,
கே. என். பாலகிருஷ்ணன்.

✉ எல்லோருக்கும் உள்முகங்கள் உண்டு. ஆனால் அதை மறைத்து முலாம் பூசிய முகங்களோடுதான் உலாவருகிறார்கள் என்பதை பெருமாள் சாமியின் பாத்திரப் படைப்பு மூலம் அருமையாய் விளக்கி விட்டார் சாருநிவேதிதா!
பஞ்சநதிக்குளம், வீ. கார்த்தி

✉ கவலையில்லாமலிருப்பதற்கு, மகிழ்ச்சி எவ்வளவு முக்கிய மென்பதை எட்டு உதாரணங்களால் விளக்கியவிதம் வெகு சூப்பர். இவ்விரு பக்கங்களை எடுத்துப் பத்திரப்படுத்தி விட்டேன்.
கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

✉ "கோயில் இடத்தில் தடாலடியாகத் தமிழ் மாநில காங்கிரஸ் கொடி" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டு இருக்கின்றீர்கள். இது உண்மைக்கு புறம்பான செய்தி. 1947ல் அந்த கொடிக்கம்பத்தை நிறுவியது அன்றைய திருவல்லிக்கேணி தொகுதி இளைஞர் காங்கிரஸ். அதற்குப் பிறகு வழி வழியாக இந்த கொடிக்கம்பத்தில் காங்கிரஸ் கொடிதான் ஏற்றப்பட்டிருக்கின்றதே தவிர வேறு கொடிகள் அல்ல. (சுதந்தர தினம், குடியரசு தினத்தன்று மட்டும் தேசியக் கொடி ஏற்றப்படும்.) தமிழ் மாநில காங்கிரஸ் துவக்கத்தில் இருந்தே அந்தக் கொடிக் கம்பத்தில் சைக்கிள் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிதான் பறந்து இருக்கின்றதே தவிர, வேறு கொடிகள் அல்ல என்பதை அந்தப் பகுதி வாழ் மக்களும், வியாபாரப் பெருமக்களும், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமியின் பக்தர்களும் நன்கு அறிவார்கள்!
திருவல்லிக்கேணி,
எஸ்.பி. திருஞானசம்பந்தம்,
தலைவர், திருவல்லிக்கேணி வட்டம், தமாகா.



நீங்கள் கேட்டவை

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
செ. சல்மான்,
4/12, முதல் வாசல் தெரு,
பாம்பன் - 623 521.

● ப. இராம் முருகன், சிவகங்கை.

? இதுவரையில் இந்தியாவில் உருவான எந்தக் கூட்டணியும் கொள்கை அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்கிறாரே வை.கோ...?

! கூட்டணிகள் கொள்கை அடிப்படையில் உருவாகாவிட்டாலும் கொள்ளை அடிப்படையில் உருவாகக் கூடாதல்லவா..! அதற்கு வை.கோ வித்திடுகிறாரே என்பதுதான் வருத்தம்.

● வை.குஞ்சிதபாதம், திருபுவனம்.

? கேரள உயர்நீதி மன்றம், அரசியல் கட்சிகள் பந்த் நடத்தத் தடை விதித்து ஒரு landmark தீர்ப்பு வழங்கியுள்ளதே?

! பந்த்கள் சட்ட விரோதமானவை. அவை மக்களின் அடிப்படை உரிமைகளை பாதிப்பவை என்ற கேரள உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, முற்றிலும் சரியானது; வரவேற்கப்பட வேண்டியது. அரசியல்வாதிகள், மேல் முறையீடு என்று போய் குட்டையைக் குழப்பாமலிருந்தால் நல்லது.

● ஜி. கதிரேசன், சிறுமுகை.

? தெலுங்கு தேசத்தின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயப்பிரதாவுக்கும் ரேணுகா சௌத்ரிக்கும் என்னங்க தகராறு...?

! எல்லாம் personality problem தான்... வேறென்ன...?

● நிலா காதலன், நாகூர்.

? சசிகலாவுக்கு எந்த நோயும் இல்லை என்று சொல்லிவிட்டார்களே...?

! டாக்டர்கள் சொன்னால் போதுமா? சசிகலா சொல்ல வேண்டாமா? எல்லா வழக்குகளும் வாபஸ் என்று சொல்லுங்கள்... அப்போது தான் பரிபூரணமாக குணமாவார்!

● ந. இரவிச்சந்திரன், சென்னை - 15.

? இலங்கை கிரிக்கெட் அணியிடம் அப்படி என்ன மூடு மந்திரம் இருக்கிறது...?

! அதானே, அதிலும் அவர்களுடைய கேப்டன், நங்கூரம் பாய்ச்சி நின்று அலட்டிக் கொள்ளாமல் பவுண்டரிக்கு அதிர்வலைகளை அனுப்பிக் கொண்டே இருக்கிறாரே, எப்படி...?!


● பா. ரவிச்சந்திரன், அரூர்.

? 'சட்டத்தின் முன் என் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன' என்கிறாரே பிரதமர் குஜ்ரால்?

! அவருக்குச் சட்டம் தெரியவில்லை; பிரதமருக்கு உள்ள அதிகாரங்கள் புரியவில்லை என்று அர்த்தம்.



• நங்கூரம்!



• புரிந்ததா...




• ...பிரச்னை!

● செ. சல்மான், பாம்பன். ❑

? நம் நாட்டில் எந்த கெட்ட விஷயம் நடந்தாலும் (பிளேக் நோய் முதல் கிரிக்கெட் தோல்வி வரை...) பாகிஸ்தானைத் தான் குறைசொல்கிறோம். அதே போல், அவர்கள் நாட்டிலும் எது நடந்தாலும் நம் நாட்டைக் குறை சொல்வார்களா?

! அப்படிச் சொல்லிச் சொல்லியேதானே அந்த நாட்டு அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.



• 'அருள்வாக்காளர்'!



• பாராட்டுப் பின்னணி...

● வே. முருகேசன், சென்னை – 4.

? பீஹாரின் முதல்வர் ஆக, லல்லுவின் மனைவி தவிர வேறு யாருக்கும் தகுதி இல்லையா...?

! தகுதி, அவர் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்களில் பலருக்குக் கூட இருக்கலாம்; ஆனால் லல்லுவின் கைப்பொம்மையாக (பிராக்ஸி) இயங்கக்கூடியவர் அவர் மனைவி மட்டும்தானே!

● தேவந்தி துரைராஜ், திருப்பத்தூர் – 2.

? கிளிண்டன், இந்திய ஜனநாயகத்தைப் பாராட்டியுள்ளது எந்த அடிப்படையில்...?

! இத்தனை பிரச்னைகளுக்கு இடையிலும் ஐம்பது ஆண்டுகளாக ஜனநாயகத்தை விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றி வருகிறோம் என்பதால்.

‘கொள்கைக் கூட்டணியே கிடையாது’ என்கிறாரே வை.கோ...?



• தகுதி தேடல்!



• வித்திடுகிறாரே!



• புரியாமல் பேச்சு!

● இ.மகாராசன், கடமலைக்குண்டு.

? ஜெ வாங்கிய அரசு விமானத்தில் டெல்லிக்கு சென்ற முதல்வர், பயணம் கட்டை வண்டி மாதிரி மிகவும் அசௌகரியமாக இருந்ததாகச் சங்கடப்பட்டாராமே?

! விமானமிருந்தால் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும். விற்கப் போனாலோ, வாங்க ஆளில்லை. ஆக, கொடுப்பதை வாங்கிக் கொண்டு, அல்லது தானமாகவே கூட, விமானப் படைக்கு அதை அளித்து விடலாம்.

● ஆர். கர்ணன், பெத்தங்கபுரம்.

? மக்கள் மத்தியில் இன்று மனிதநேயம் எப்படி உள்ளது...?

! மிகவும் மோசமான நிலையில்; கவலைக்கிடமாகவுள்ளது. மதுரையில் பிடிபட்ட ஒரு திருடனை, மரத்தடியில் கட்டி வைத்துள்ளனர் மக்கள். இப்படி சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கொடுமை செய்வதெல்லாம் பயங்கரம்!

● எஸ். கோவிந்தராஜன், கோயமுத்தூர் – 9.

? கருணாநிதி ஆட்சி ஓராண்டுக்கு மேல் நடந்ததாக வரலாறு இல்லை என்று காளிமுத்து ‘அருள்வாக்கு’ சொல்லிக் கொண்டேயிருக்கிறாரே... ஆட்சி மாறினால் ஜெ ‘தப்பிக்கலாம்’ என்பதற்கான பின்னணிதான் இன்றைய திட்டமிட்ட சில கலவரங்களா?

! நீங்கள் சொல்வதிலும் அர்த்தம் இல்லாமலில்லை!

● டி. அரவிந்த் பசுபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

? இந்திய கிரிக்கெட் அணி...?

! இப்படியே போனால் பங்களாதேஷிடமும் தோற்கும் காலம் விரைவிலேயே வரும்!

● என். சலீம்பாஷா, பேர்ணாம்பட்டு.

? பெண்கள், வீட்டின் கண்களாமே? அப்போ ஆண்கள்...?

! அப்படிப்பட்ட கண்களைக் காக்கும் இமைகள்!

● முகநி. சுபா, திருவண்ணாதபுரம்.

? ‘துதி பாடினால்தான் பதவி கிடைக்கும் என்ற நிலை இனி அ.தி.மு.க.வில் கிடையாது’ என ஜெயலலிதா அறிவித்திருக்கிறாரே...? நம்பலாமா...?

! நம்புகிறோமோ இல்லையோ, இதுவரை அந்த நிலைதான் இருந்தது என்பதை ஜெ மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறாரே... அந்தவரை சந்தோஷம்!

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? ஃபரீதாபாத் ரயில் விபத்து உணர்த்துவது என்ன?

! மூன்று சிவப்பு விளக்குகளை அலட்சியம் செய்துவிட்டு ஓட்டியிருக்கிறார் டிரைவர். தூக்கமா? திமிரா?... தெரியவில்லை. அவரை விசாரிக்கவும் வழியின்றி அந்த ரயில் விபத்திலேயே காலமாகியிருக்கிறார். சரக்கு ரயில் ஓட்டுனரைப் பயணிகள் எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு டிரைவராகப் போட்டது, அந்த ரயிலை ஓட்டியிருக்க வேண்டிய டிரைவர் முன்அறிவிப்பு இன்றி பணிக்கு வராமல் இருந்தது... போன்றவை ரயில்வே நிர்வாகம் சீரழிந்து கிடப்பதையே உணர்த்துகின்றன.

அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், மாவட்டமொன்றில் பொதுப்பணித் துறைக் கண்காணிப்புப் பொறியாளராக இருந்தவருக்கும் அப்போது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தவருக்கும் மோதல். எதற்காக மோதிக் கொண்டிருப்பார்கள் என்பதைச் சொல்லியா தெரிய வேண்டும்; அதுவும் அந்தக் காலத்தில்! 'நான் அமைச்சராக இருக்கும் வரை டூட்டிக்கு வரவே வேண்டாம்; அப்படியே லீவு போட்டு விட்டுப் போய்விடு' என்று துரத்தி விடப்பட்டார். அப்படிப்பட்ட 'பெருமைக்குரிய' அந்த நபர் தி.மு.க. ஆட்சியில் பதவி உயர்வு பெற்று, இப்போது பலருக்கும் தலைவலியாக இருக்கிறாராம். அவரது ஆளுமைக்குக் கீழ் இருக்கும் சுமார் நாற்பது உதவிப் பொறியாளர்கள், தினசரி அவருக்காக 15,000 ரூபாய் செலவழிக்க வேண்டுமாம். மாலை ஆனால் ஸ்டார் ஹோட்டலில் ரூம், இத்யாதி... இத்யாதி... 'பணமாகவோ, சொத்தாகவோ சேர்த்து வைத்தால் பின்னால் பிரச்னை வரும். இப்படியே அனுபவிச்சா ஒரு வில்லங்கமும் வராது!' என்கிறாராம்.

காதில் விழுந்தவை:



அவருடைய இந்த 'ஜப்தி' நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட ஒன்றிரண்டு உடன் பிறப்புகள் விஷயத்தை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். வேர்க்கடலையைச் சாப்பிட்டுக் கொண்டே 'என்னய்யா பண்ணறது... என்னய்யா பண்ணறது?' என்று அவர்களையே திருப்பிக் கேட்டாராம் அமைச்சர். ஊழல் செய்யும் அதிகாரிகளை அமைச்சர் தட்டிக் கேட்காவிட்டால், பிறருக்குச் சந்தேகம் வராதோ!

● இந்தியா முழுக்க ரேஷன் கடைகளில் நடக்கும் தில்லு முல்லுகளைப் பற்றி அறிந்து அதை நிவர்த்தி செய்ய, மத்திய அரசு ஒரு கமிட்டி போட்டுள்ளது. அந்தக் கமிட்டியில் பூலான் தேவியும் ஓர் உறுப்பினர். கமிட்டி போட்டு விட்டார்களே தவிர, அது செய்ய வேண்டிய வேலையை ஒரு தனியார் ஏஜென்ஸியிடம் ஒப்படைத்து விட்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால்; மாநிலம் மாநிலமாக கமிட்டி விசிட் செய்து அரசுப் பணத்தை விரயம் செய்ய, அந்த தனியார் ஏஜென்சியும் எல்லா மாநிலங்களுக்கும் தங்கள் ஆட்களை அனுப்பி விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறது. அரசுக்கு இரட்டைச் செலவு!


● தி.மு.க. தலைமைக் கழகத்தில் 'உசேன்' என்ற ஆயிரம் விளக்கு பிரமுகர் ரொம்ப பிரபலம். அலுவலகத்தில் பொதுக்குழு, செயற்குழு என்றால் பிரியாணி ஏற்பாடு செய்வது இவர்தாம். இவர் ஓர் இசைக் குழுவும் வைத்திருக்கிறார். சமீபத்தில் 'தமிழினத் தளபதி' என்ற ஆடியோ கேசட் வெளியிட்டிருக்கிறார். எல்லா பாடல்களும், 'போற்றி போற்றி ஸ்டாலின் போற்றிதான்!' சமீபத்தில் கழக பொதுக்குழுவின் போது கேசட்டுகளை விற்பனைக்காக வைத்தார், புத்திசாலியான உசேன். எதிர்பார்த்தபடியே ஒவ்வொரு உடன்பிறப்பும் பத்துப் பதினைந்து கேசட்டுகளை அள்ளாத குறையாக வாங்கிக் கொண்டார்கள்!

● மதுரை நகரத்தில் ஒரு ஐ.ஜி. பதவி உருவாக்கப்பட்டு அதற்கு விஜயகுமார் என்பவரைப் போட்டார்கள். இவர் ஜெயலலிதாவின் சிறப்புக் காவல் படைக்குத் தலைவராக இருந்தவர். போயஸ் தோட்டத்தின் செல்லப் பிள்ளையாகக் கருதப்பட்டவர். ஆனால் தெற்கத்தி மாவட்டங்களில் விட்டு விட்டுக் கலவரம் தொடர்வதால், போலீஸ் செயல்பாட்டிற்கு அரசியல் சாயம் பூச நினைக்கிறார்கள். "தி.மு.க. ஆட்சியைச் சங்கடப்படுத்த வேண்டுமென்பதற்காக உருவாக்கப்படும் ஜாதி மோதல்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கத் தயங்குகிறார் விஜயகுமார்!" என்று முதல்வரிடம் வத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கிடையில் சென்னையில், போலீஸ் கமிஷனர் ராஜகோபால் டி.ஜி.பி. பதவி உயர்வு பெற்றவுடன் அந்தப் போஸ்டுக்கு வர பலத்த போட்டி நடக்கிறது.

● பூம்பொழில் - முதல்வரின் அலுவலக வீடாக ஒரு கோடி ரூபாய் செலவில் செப்பனிடப்பட்டு முதல்வருக்காகக் காத்திருக்கிறது!

— தில்லப்பா

யேசு இந்தியாவுக்கு வந்திருக்கிறார்!



• கோலின் டி. சில்வா

ஹாங்காங்கில் வசிக்கும் பில்டிங் காண்ட்ராக்டர் கோலின் டி சில்வா. ஸ்ரீலங்காவைச் சேர்ந்தவர். புத்த மதத்தைப் பின்பற்றுபவர்.

இவரது ஆறு நாவல்கள், ரொம்ப சீரியஸ் விஷயங்களை வைத்து எழுதப்பட்டவை. ஆனால் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் இவரது புதிய நாவல் 'த மாகி டெஸ்ட்மெண்ட்'.

பரபரப்புக்குக் காரணம் –

யேசு கிறிஸ்து தமது 13 வயதிலிருந்து 33 வயதுக்குள், இந்தியாவுக்கு வந்திருக்கிறார். பல யோகிகளைச் சந்தித்திருக்கிறார். இந்திய யோகா வழிமுறைகளைக் கற்றுக் கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார்!

"யேசுபிரான் என்னென்ன செய்தாரோ, அவை எல்லாமே, இந்தியாவில் யோகிகள் செய்தவைதாம். குறிப்பாக, நோயாளிகளைக் குணப்படுத்துவது. அப்போது மத்திய கிழக்கு நாடுகளில் 'ஹீலிங்' பழக்கத்திலேயே இருக்கவில்லை. இறந்தது போல் கோமாவில் படுத்திருப்பவனை எழுப்புவது இதில் ஒன்று. கோமா நிலையில் கிடப்பவனை இறந்து விட்டான் என்று, அன்று நினைத்திருப்பார்கள். ஆனால் அது உண்மையான இறப்பு அல்ல என்ற ஞானம் வேறு எங்கிருந்தும் வந்திருக்க முடியாது."

வேத தத்துவங்களைப் படித்துத் தெரிந்து கொண்டிருக்கும் டி. சில்வா, நவீன விஞ்ஞான அறிவிலும் தேர்ந்தவர். இந்தியாவுக்கு வந்து பல ரிஷிகளையும், யோகிகளையும் நேரில் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

மார்ச் 91ல், அமெரிக்க பேதலாஜிகல் சொசைடி வெளியிட்ட ஒரு கட்டுரையில், சிலுவையில் அறையப்படும் எவருக்கும் என்ன நேருகிறது என்று விவரித்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் டி. சில்வா.

"யோகிகள் 40 நாட்கள் புதையுண்டும், உயிரோடு வெளியே வந்ததற்கான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. தரையிலிருந்து ஆறு அங்குல உயரத்துக்கு உடலையே தூக்கி, மிதக்கச் செய்யும் ஆற்றல் கூட அவர்களுக்கு இருந்ததாகச் சான்றுகள் சொல்லுகின்றன."

உயிரோடு இருக்கையிலேயே இறந்த மாதிரி கட்டையாகக் கிடப்பதும், உயிர்த் துடிப்பையே கொஞ்ச நேரத்துக்கு நிறுத்தி வைப்பதும், இந்திய யோகிகளால் முடிந்திருக்கிறது என்பதை, யேசு பிறப்பதற்கு 200 வருடங்களுக்கு முன்னாலேயே இங்கே எழுதி வைத்திருக்கிறார்கள். யேசுபிரான் இந்தியாவுக்கு வந்திருந்தபோது இதை எல்லாம் கற்றுக் கொண்டிருக்கக்கூடும். சிலுவையில் அறையப்பட்டபோது உயிர் வாழ, அவற்றைப் பயன்படுத்தி இருக்கக்கூடும் என்கிறார் டி சில்வா.

மத அடிப்படை நாவல்களை யாரும் வெளியிடத் தயங்குவார்கள். சல்மான் ருஷ்டியின் அனுபவத்துக்குப் பிறகு பல பதிப்பாளர்களும் கொஞ்சம் பயப்படத்தான் செய்கிறார்கள். ஏறகெனவே ஸ்ரீலங்கா பின்னணியுடன் ஒரு நாவல், முகலாய ஆட்சியைப் பின்னணியாக வைத்து ஒரு சரித்திர நாவல் எழுதியிருக்கும் டி சில்வா, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் குறைந்தது 50 பக்கங்களாவது எழுதுவாராம்.

ஹாங்காங், சீனா பற்றி எழுத நிறையவே ஐடியாக்கள் வைத்திருக்கிறார் டி சில்வா. "அடுத்த நாவல் சீனா பற்றித்தான்!" என்கிறார்

— சித்தார்த

'தேவதா உச்சாடனம்'
பூஜா உபதேசம்

எண்ணிய காரியத்தை வென்று தீரவும், ஈடில்லா கோடி செல்வமீட்டவும், எதையும் செய்து காட்டும் இணையிலா சக்தி பெறவும் - மனித சக்திமயமான பூரண பூஜை - மன ஒடுக்கம் உண்டென்றால் அது 'தேவதா உச்சாடனம்' ஒன்றுதான். இந்த விஞ்ஞான உலகிலும் - வென்று தீரமுடியா காரியங்கள் - விஷம புன்னகை புரிகின்றன. ஆனால் அன்றைய ஆன்றோர் ஆக்கி வைத்த பூஜையான தேவதா உச்சாடன பூஜையால் ஆகாத காரியம் கிடையாது. இந்த பூரண ஸ்ரீதேவி சக்தி பெற்ற பூஜையை அறிந்தோர் இல்லையோ என்ற அளவிற்கு அரிதாகி விட்டனர். ஆகவே தான் இவ்வித அற்புதமான - ஆக்கப்பூர்வமான பூஜை அழிந்து மறைந்து விடக் கூடாது என்பதற்காக - அதனை கற்றிட உரிய ஜாதக அமைப்பும் - தீய பழக்க வழக்கமற்ற தெய்வ அனுமதி பெற்றிருக்கும் - உபதேசிக்கும் உள்ளத்தோடு இந்த விளம்பரத்தை - வெளியிடுகின்றோம். அமைப்பு இருந்தால் ஆண், பெண் இருபாலரும் செய்து சிறப்பு பெறத்தக்க பூஜையிது. இதன் வழியாக ஒரு குபேர வாழ்வை பெறுகின்ற விதி அமைப்பு உடையவருக்குத்தான் இப்பூஜையை உபதேசம் பெற்றிடும் வாய்ப்பு ஏற்படும். இந்த விளம்பரம் கண்ணில்படும் - கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மனு செய்யும் நிலை ஏற்படும். கற்றிடும் வாய்ப்பு பெற்று தெய்வ அனுமதி பெற்று விட்டா ரென்றால் அவர் ஒரு கோடீஸ்வரராவது உறுதி. ஜாதக நகலுடன் 10.9.1997 தேதிக்குள் - தெளிவான விலாசம் எழுதி மனுச் செய்து கொள்ளுங்கள். உரிய அமைப்பு இருப்பின் பூஜா உபதேசத்திற்கானவை மேற்கொள்ளுகின்றோம். அத்தேதி தவறி மனு செய்வோருக்கு தெய்வ அனுமதி இல்லை என்று அர்த்தம். தினசரி ஏதேனும் பூஜை செய்யும் பழக்கமும் இருத்தல் வேண்டும். மதுபானம், புகைபிடித்தல், புகையிலை போடுதல், பொடி போடுதல் பழக்கம் இருக்கக் கூடாது. இதுவரை கற்றிடும் வாய்ப்பு பெற்று கற்றவர்கள், அரிய பெரிய காரியங்களை வென்று வியந்திருக்கின்றனர்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீரதேவதா, யோகி

ராஜயோக பயிற்சியாளர்,

பிளாட் எண்: 204, அண்ணாநகர்,

மதுரை – 625 020.

தொலைபேசி: 533412, 534634

'ஸ்ட்ரெச்சர்' பள்ளி கொண்டான்!



வழக்கம் போலவே அன்றும் பள்ளி கொண்டான் படுத்தபடியே ஸ்ட்ரெச்சரில் கோர்ட்டுக்கு வந்தார். அவர் சுயநினைவோடு இருக்கிறாரா இல்லையா என்பது பெரிய புதிராக இருந்தது.

தீர்ப்பை அவலோடு எதிர்பார்த்து கோர்ட்டில் ஏகப்பட்ட கூட்டம் கூடியிருந்தது.

"குண்டு வீசப் போறேன்... எல்லாரும் ஓடுங்க'' என்று பார்வையாளர் பகுதியிலிருந்து ஒரு மீசை ஆசாமி திடீரென்று குரல் கொடுக்க, கண் இமைப்பதற்குள் எல்லோரும் கோர்ட்டை விட்டு ஓட ஆரம்பித்து விட்டனர். பார்வையாளர்கள், வக்கீல்கள், குமாஸ்தாக்கள், டவாலிகள் என்று ஆளாளுக்கு முண்டியடித்துக் கொண்டு தலை தெறிக்க அந்த இடத்தைவிட்டு வெளியேறினர்.

ஸ்ட்ரெச்சரைச் சுமந்து கொண்டிருந்த நாலு ஆசாமிகளும் உயிர் தப்ப ஸ்ட்ரெச்சரை அப்படியே தொபகடீர் என்று போட்டு விட்டு ஓட்டம் பிடிக்க, பாவம், பள்ளிகொண்டான் மட்டும் அம்போவென்று சுயநினைவு இல்லாதவர்போல பரிதாபமாகக் கீழே கிடந்தார்.

மீசை ஆசாமியை போலீஸ் பிடித்துவிட, அமளி ஒருவழியாக ஓய்ந்து மீண்டும் கோர்ட் கூடியது. நீதிபதியும் தயங்கியபடி தமது இருக்கைக்கு வந்து அமர்ந்தார்.

"இப்படி ஒரு பெரிய கலவரத்திலும் பள்ளி கொண்டான் அவர்கள் எழுந்து ஓட இயலாமல் படுத்திருப்பதைப் பார்த்தால் அவர் நிஜமாகவே சுயநினைவு இல்லாதவராகத்தான் இருக்கிறாரென்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் புரிகிறது. ஆகவே அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த அவசியமில்லை'' என்று தீர்ப்புக் கூறினார்.

எனவே, தான் கஷ்டப்பட்டு 'செட் அப்' செய்தும் இப்படி ஆகிவிட்டதே என்று எதிர்க்கட்சி வக்கீலுக்கு ஏக வருத்தம். கோர்ட்டில் வெடிகுண்டு வெடிக்கப் போகிறது என்று கிளப்பி விட்டால் எல்லோரும் ஓடும்போது, பயத்தில் பள்ளிகொண்டானும் எழுந்து ஓடுவார்; வசமாக மாட்டிக் கொள்வாரென்று தான் அவர் திட்டம் போட்டிருந்தார்.


இப்பொழுது தன் சந்தேகம் தவறானதோ என்றுகூட வக்கீலுக்குத் தோன்றியது. ஒருவேளை பள்ளி கொண்டான் நிஜமாகவே சுயநினைவில்லாமல்தான் இருக்கிறாரோ என்று எண்ணினார்.

பாவம், அவருக்கு ஓர் உண்மை தெரிய நியாயமில்லை.

எல்லோரும் ஓடும்போது பள்ளி கொண்டானும் எழுந்து ஓடித்தான் இருப்பார். ஸ்ட்ரெச்சரை தூக்கி வந்த படுபாவிகள் இப்படியா 'தொபகடீர்' என்று அவரைக் கீழே போட்டு விட்டு ஓடுவார்கள். விழுந்த வேகத்தில் தலை பலமாக 'ணங்'கென்று தரையில் மோதியதில் மூளை தாக்கப்பட்டு சுயநினைவின்றி ஆகிவிட்டார்.

இனிமேல் மெய்யாலுமே பள்ளி கொண்டான் ஸ்ட்ரெச்சரில்தான் கோர்ட்டுக்கு சவாரி வர வேண்டுமென்ற நிலை.

— அகிலா கார்த்திகேயன்



பட்டேலின் பதவி தப்பிக்குமா?

கர்நாடகாவில் 'சாம்ராஜ் நகர்' என்றொரு தாலுக்கா. இங்கு எந்த கர்நாடக முதல்வர் வருகை தந்தாலும், வந்து சென்ற சில மாதங்களுக்குள் பதவி இழப்பது வழக்கமாகி விட்டது. இதனால் முதல்வர்கள் மட்டுமல்ல மற்றும் சில அமைச்சர்களும் கூட சாம்ராஜ் நகரில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியானாலும் கூடுமானவரை கலந்து கொள்வதைத் தவிர்த்து வருகிறார்கள்.

இப்படியொரு மூட நம்பிக்கையின் ஆரம்ப கர்த்தா தேவராஜ் அர்ஸ்தான். சாம்ராஜ் நகர் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு திரும்பிய இவர், சில நாட்களுக்குள் முதல்வர் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். அடுத்து இதே போல் பதவியிழந்தவர் பொம்மை. இவரையடுத்து 1990 ஆம் ஆண்டு அங்கு சென்று வந்த உடனே பதவியிழந்தார் வீரேந்திர பாட்டீல். பங்காரப்பாவும், மொய்லியும் அடுத்தடுத்து இரண்டாண்டுகள் முதல்வர்களாக இருந்தபோது, சாம்ராஜ் நகருக்கு மட்டுமல்ல, அருகில் உள்ள தாலுக்காக்களுக்குச் செல்வதைக் கூட தவிர்த்து விட்டனர். ஓராண்டு காலம் முதல்வராக இருந்த தேவே கவுடா கூட மறந்தும் சாம்ராஜ் நகர் மண்ணை மிதிக்கவில்லை.

இந்த மூட நம்பிக்கையைப் பற்றி அந்தத் தொகுதி எம்.எல்.ஏவும், வாட்டாள் பக்ஷா தலைவருமான வாட்டாள் நாகராஜ் என்ன சொல்கிறார்? 'நிச்சயமாக இது ஒரு தவறான கருத்துதான். தேவராஜ் அர்ஸ் பதவியிழந்த போது இருந்த அரசியல் சூழ்நிலையே வேறு. அதே போல் டிஸ்மிஸ் செய்யப்படவிருந்த நேரத்தில்தான் பொம்மை இறக்கப்பட்டார். உடல் நலக்குறைவு காரணமாக வீரேந்திர பாட்டீல் பதவியிறக்கப்பட்டார். இதெல்லாம் எதிர்பாராத விதமாக நடைபெற்ற சம்பவங்களே தவிர எங்களுடைய தாலுக்கா துரதிருஷ்டம் பிடித்தது என்பதற்காக அல்ல. அங்குள்ள கோவில்கள், இயற்கைக் காட்சிகள், அன்பான மக்களைப் பார்த்தால் யாருக்காவது கெடுதல் ஏற்படும் என்ற எண்ணம் நிச்சயமாகத் தோன்றும். அப்படி துரதிருஷ்டமான தாலுக்காவாக இருப்பின் இப்போது ஒரு மாவட்டமாகவே உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதே, எப்படி?'' என்று கேட்கிறார்.

இந்த மூட நம்பிக்கையைத் தகர்க்கும் வண்ணம், வருகின்ற ஆகஸ்ட் 15-ஆம் தேதி சாம்ராஜ் நகர், மைசூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு கொள்ளேகால், எலந்தூர், குண்டல்பேட் போன்ற தாலுக்காக்களை இணைத்து புதிய மாவட்டமாக உதயமாவதை முன்னிட்டு நடைபெற விருக்கும் விழாவில் கலந்து கொள்வதாக தற்போதைய முதல்வர் ஜே.எச். பட்டேல் ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சி பலரது எதிர் பார்ப்பிற்கு ஆளாகியிருக் கிறது.

பெங்களூரிலிருந்து : அ. குமார்

பயிர் தின்ன வேலி!

– இடைக்காட்டூர் கலைதீபன்

(சாதிச் சண்டையில் மாண்டுபோன தன் கணவனை நினைத்து கிராமத்துப் பெண் ஒருத்தியின் புலம்பல்)

ஒய்யாரத் தேரேறி
ஊர்வலமா வாராரு
உத்தமரா மென்ராசா
ஓலப் படுக்கையிலே!

ஓலயில போடத்தான்
ஒருபிடி அரிசியில்ல
ஊரிலுள்ள சாதிசனம்
ஒருபிடி தந்திடுமா?

சாதியக் காப்பாத்த
சண்டையிடப் போனியளே!
நாதியத்த எம்பொழப்ப
நடுவுல உட்டுட்டு

வெந்தத தின்னுட்டு
விதிவந்தா சாவோமுனு
நொந்து கிடக்கையில
நோகவிட்டுப் போனியளே!

சண்டாளப் பாவிக
சடசடன்னு ஓடியாந்து
சந்தனமாம் என்னவரை
சாக்கடைக்கி இழுத்தாக

திண்ணையில செருகிவச்ச
திருப்பாத்தி அருவாவ
தீட்டிக்கிட்டுப் போனியளே
திரும்பாமப் போறதுக்கா

சாதியத்துப் போச்சுதுன்னா
குடிமுழுகிப் போயிடாது
நாதியத்துப் போனேனே
நாப்பொழப்பா ஆனேனே

வேலியெல்லா ஒன்னுகூடி
வெளஞ்சபயிர் மேயயில
வேலியயேங் காப்பாத்த
வீச்சருவா தூக்கினிய!

கவர்மென்ட் காரனுங்க
கட்டுக்கட்டாக் கொண்டாந்து
கையில கொடுத்தாக
கலங்கா தேன்னாக

சாதி சாதியின்னு
சளைக்காம ஓடினிய!
வாடி வாடியினு
என்னையும் அழைக்கிறிய!

கட்டுக்கட்டா கொடுத்தாலும்
கலங்காம நின்னாலும்
மண்ணோடு போனவரு
மறுப்படியும் வருவாரா?



சாலார் காலா கிராமம் புல்வாரியா பகுதியில், கோபால்கஞ்ச் மாவட்டத்தில் இருக்கிறது. இங்கேயிருந்து இதுவரை ஒரு டாக்டரோ, இன்ஜினியரோ வந்ததில்லை. ஆனால் ஒரு முதலமைச்சர் வந்திருக்கிறார்- ரப்ரி தேவி. லாலுவின் மனைவி.

மிகவும் பின்தங்கிய கிராமம். மொத்தம்



. சில குழந்தைகளுடன் திருமதி லாலு...

கட்டப்பட்டது. முதல் மாடியை மட்டும், கணவர் லாலு முதல்வரான உடனே கட்டிவிட்டார் ரப்ரி தேவி.

"**பீ**கார் மாநிலத்தின் முதல் பெண் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிற பெருமை எனக்குக் கிடைத்த போதிலும், என் கணவருடைய ராஜினாமாவினால்தான் எனக்கு அது கிடைத்தது என்பதில் வருத்தம்தான். அந்த வருத்தத்தில், எனக்கு இரவில் தூக்கம் கூட வரவில்லை. ஆனாலும் கணவருக்கு ஒரு கஷ்டம் வரும்போது, அவருக்கு முழுமையாக உதவுவது தானே ஒரு மனைவியின் கடமை?"- இப்படிக் கேட்கிறார் ரப்ரிதேவி.

மிகவும் ரிசர்வ்டு டைப் பெண்மணி. முப்பத்து எட்டு வயதாகிறது. லாலுவுக்கும் இவருக்கும் திருமணம் நடந்த போது ரப்ரி தேவிக்கு வயது பதினாலுதான். வாழ்க்கையில் பார்த்த சினிமாக்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். மூவி பார்ப்பதில்கூட ஆர்வம் இல்லை. சமையல், வீட்டுவேலை, மாடுகளை கவனித்துக் கொள்ளுவது இவையே ரப்ரியின் உலகம்.

"கணவருக்கு கஷ்டத்தில் உதவுவதுதானே மனைவியின் கடமை!"

— புதிய பீகார் முதல்வர்

250 வீடுகளே இருக்கும். கணவர் லாலு முதல்வராய் இருந்தும் கூட, இந்தக் கிராமத்துக்கு எந்தவித நன்மையும் இதுவரை கிடைக்கவில்லை.

ஒரே ஒரு பிரைமரி பள்ளி. சுகாதார மருத்துவமனைகூடக் கிடையாது!

ரப்ரி தேவியின் அப்பா சிவப்பிரசாத் சௌத்ரியும், அவர் சகோதரர்களும் இப்போது வசிக்கும் வீடு, 50களில்

பீகார் மாநிலத்துக்கு வெளியில் சென்று இவர் பார்த்திருக்கும் இடங்கள் டெல்லி, ஆக்ரா, அஜ்மீர் மட்டுமே.

கடவுள் பக்தி ரொம்ப அதிகம். தினப்படி வீட்டில் பூஜை நடக்கும். வாரத்தில் ஒரிரு நாட்கள் விரதம்தான்.

ரப்ரிதேவிக்கு ஒன்பது குழந்தைகள். "குழந்தைகள் எண்ணிக்கையில் நாங்கள் தவறு செய்து விட்டோம். நாட்டுக்குக் குக.

அவசியம் என்பதை நான் உணருகிறேன்'' என்கிறார் இப்போது.

தினமும் மனைவி கையால் போட்டுக் கொடுக்கிற டீயை குடித்துவிட்டுத்தான் லாலு தமது அன்றாடப் பணிகளைத் துவக்குவார்.

முதல் நாள் தலைமைச் செயலகத்துக்கு வரும்போதே, கூட கணவரை அழைத்து வந்து விட்டார் புதிய பீகார் முதலமைச்சர். பகல் பன்னிரெண்டு மணிக்கு வந்தவர், மடமடவென்று நாற்பது ஃபைல்களில் கையெழுத்திட்டு, டிஸ்போஸ் பண்ணி விட்டார்.

அடுத்து நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது, "சமையல், தோட்டவேலை, ஆடு மாடுகளை கவனிப்பது இவையெல்லாம் எனக்கு மிகவும் பிடித்த வேலைகள். முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டாலும், அன்றாடம், வீட்டில் இந்தப் பணிகளையெல்லாம் கவனித்துவிட்டுத்தான் அலுவலகத்துக்கு வருவேன். என் குழந்தைகள், 'வீட்டு வேலைகளில் நாங்கள் உதவி செய்கிறோம். நாட்டு வேலைகளில் நீங்கள் அக்கறை செலுத்துங்கள்' என்று சொல்லி விட்டார்கள்!'' என்று சந்தோஷப்பட்டிருக்கிறார்.

ரப்ரிதேவி, கட்சி எம்.எல்.ஏ.கள் கூட்டத்தில் பேசும்போது, அவரது அனுபவமின்மை, வெளிப்பட்டது. பேச ஆரம்பித்தவர், சில வார்த்தைகள் பேசி முடித்தவுடனேயே, மேற்கொண்டு பேச, வார்த்தைகள் வராமல் தடுமாறிவிட்டார். அமைச்சரவையின் சீனியர்கள், "போதும்! பரவாயில்லை! நீங்கள் இருக்கையில் அமர்ந்து கொள்ளுங்கள்'' என்று கூறி, உட்கார வைத்து விட்டார்கள்.

"ஒரு மாநிலத்தின் ஆட்சியை, முன் அனுபவமில்லாத உங்களால் எப்படி திறம்பட நடத்த முடியும்?''


"எனது கட்சி எம்.எல்.ஏ.க்களும், அமைச்சர்களும், கட்சிக்காரர்களும், அரசாங்க அதிகாரிகளும், பல்வேறு விஷயங்கள் குறித்தும் முடிவுகள் எடுக்க உதவி புரிவார்கள்.''

"உங்கள் கணவரின் ஆலோசனையின்றி முடிவுகள் எடுக்க உங்களால் முடியுமா?''

"அவரது ஆலோசனைகளைப் பெறுவதில் தவறில்லை என்றாலும், அவசியமானால், யாரையும் கலந்து ஆலோசனை செய்யாது, சுதந்தரமாகவும் என்னால் முடிவுகள் எடுக்க முடியும்!''

அப்படிப் போடு!

— மௌஷ்மி



கர்த்தர் சொன்ன கதை

வலம்புரி ஜான்

“எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமானர்களுக்குப் பணிவிடை செய்ய இயலாது. ஏனெனில் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவன் அன்பு கொள்ளுவான். அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பான். நீங்கள் கடவுளுக்கும், காசுக்கும் பணிவிடை செய்ய முடியாது...” இயேசுபெருமான் பேசிக் கொண்டே போனார். மக்கள் அவரது உதடுகளிலேயே தொங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பரிசேயர்கள் என்னப்பட்ட பிரபுக்கள் “நீங்கள் கடவுளுக்கும், காசுக்கும் பணிவிடை செய்ய முடியாது” என்று இயேசு பெருமான் சொன்னதை மாத்திரம் அவரது நீண்ட சொற்பொழிவிலிருந்து பிரித்து எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இயேசுவை ஏளனம் செய்வதற்கு இந்த ஒரு வரியே போதுமானதாக இருந்தது.

“வானத்துப் பறவைகளைப் பாருங்கள்; அவை விதைக்கிறதும் இல்லை; அறுக்கிறதும் இல்லை. இருந்தும் உங்கள் பரமபிதா அவைகளைப் பாதுகாத்து வருகிறார். வயல்வெளிகளில் உள்ள லீலி மலர்களைப் பாருங்கள். இவைகளில் ஒன்றைப் போலவாவது சாலமோன் அரசன் என்றைக்காவது உடை உடுத்தியிருப்பாரா? இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற காட்டுப் புல்லுக்குக் கடவுள் இவ்வளவு அற்புதமாக உடை உடுத்தினால், அற்பமான விசுவாசிகளே, உங்களை எவ்வளவு அருமையான உடைகளால் அவர் அலங்கரிப்பார்! நீங்கள் யோசித்துக் கவலைப்படுவதாலே உங்கள் உயரத்திற்கு மேலே ஒரு முழம் கூட்ட உங்களுக்குள் எவராலே கூடும்? அப்படியிருக்க நீங்கள் நாளையைக் குறித்து கவலைப்படுவானேன்? என்றெல்லாம் பேசியவர்தானே இந்த இயேசு” என்று இயேசுபெருமான் சொன்னதை அப்படியே ஒரே மூச்சில் சொல்லி முடித்தார், பரிசேயர்களில் பழுத்தவர் ஒருவர். “என்ன நீர் மனப்பாடமாக அப்படியே அவரது வார்த்தைகளை ஒப்புவிப்பதைப் பார்த்தால் நீரும் அவரைப் பின்பற்றிச் சென்று விடுவீர் போலிருக்கிறதே!” என்றார் படர்ந்த தாடிக்குள் முகத்தை மறைத்துக் கொண்ட இன்னொரு பரிசேயர்.

உடனே பழுத்தவர் சொன்னார்- “இப்போது கடவுளுக்கும், காசுக்கும் பணிவிடை செய்ய முடியாது” என்கிறாரே இயேசு. இதற்கும் முன்னர் நாளையைக் குறித்துக் கவலைப்படுவானேன்? என்று கேட்டவர்தானே! அதற்கு இப்போதுள்ள வாசகம் கொஞ்சம் கேட்கிற மாதிரி இருக்கிறதே! அதற்காகத்தான் முன்பு அவர் சொன்னதைச் சொல்லிக்காட்டினேன். இவர் இரண்டு தாலேந்து நாணயத்தைச் சாலமோன் தேவாலயத்திலே தொலைத்துவிட்டு கடந்த ஒரு மாதமாகக் குனிந்து தேடியே குறுக்கு வளைந்து போனவர். “நீங்கள் கடவுளுக்கும் காசுக்கும் பணிவிடை செய்ய இயலாது” என்று இயேசு பெருமான் சொன்னது அவரைக் குத்தி எடுத்துக் கூரையில் சாய வைத்தது.

யூதப் பள்ளியில் ஒருநாள் இயேசு இசையாஸ் தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்தார். “இவன் தச்சன் சூசையின் மகன் அல்லவா? எங்கிருந்து இவனுக்கு வந்தது இந்த ஞானம்?” என்று அங்கேயே முணுமுணுத்தவர்தான் இந்தப் பரிசேயர். கடவுளுக்கு எதிராகப் பேசினாலும் இவர்களுக்கெல்லாகம் பிடிக்கும்; காசுக்கெதிராக வார்த்தைகளை வளர்த்து விடக் கூடாது. முகம் முக்கோணமாகிப் போகும்.

இயேசுபெருமான் பேசிக் கொண்டே போனார். வந்து விழுகிற கூளாங்கற்கள் குளத்தில் அலைவிரிப்பை உருவாக்குவதைப் போல அவரைக் கேட்டுக் கொண்டு நின்றவர்களின் மன மாடங்களில் ஆயிரம் பறவைகள் ஒரே நேரத்தில் சிறகுகளை அசைத்தன. இப்



போது தன்னை ஏளனம் செய்கிற பரிசேயர்களைப் பார்த்தே இயேசுபெருமான் பேசத் தொடங்கினார், "நீங்கள் உங்களை மக்கள் முன் நேர்மையாளர்களாகக் காட்டிக் கொள்ளுகிறீர்கள்; கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார்; நீங்கள் உங்களை மக்கள் முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்வது கடவுளின் பார்வையில் அருவருப்பாகும்" என்றார். பரிசேயர்களுக்குள் அவர்களது கவனத்தைத் திருப்ப, அதே நேரத்தில் கடினமான அவர்களது உள்ளங்களை உழுது அவற்றில் நல்ல விதைகளை விதைக்க விரும்பினார். ஆகவே இயேசு ஒரு கதை சொன்னார்.

ஒரு ஊரில் செல்வந்தனான ஒரு மனிதன் இருந்தான். அவன் விலை உயர்ந்த செந்நிற ஆடைகளையே நாள்தோறும் அணிவான். எப்போதும் விருந்துண்டு மகிழ்வதே அவனது பொழுதுபோக்காக இருந்தது. கிளர்ச்சியும், கேளிக்கையுமே அவனது வாழ்க்கையாக இருந்தது. அதே ஊரில் இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவன் இருந்தான். அவனுக்குப் புண்ணே உடலாகப் புழுத்துக் கிடந்தது. இந்த இலாசர் அந்தச் செல்வந்தருடைய வீட்டு வாசலின் அருகில் கிடப்பான்.

அந்தச் செல்வந்தன் உண்டும், குடித்தும் மகிழ்ந்திருந்த நாட்களில் இலாசர் தெருவின் கழிவுபோலக் கருதப்பட்டான். செல்வந்தன் வயிறார உண்டு மகிழ்ந்தபோது ஒரு கவளம் சோற்றைக் கூட ஏழையான இலாசருக்கு அவன் தந்தானில்லை. கோடை வெப்பத்தின் தாகத்தால் நா வறண்டு, இலாசர் தவித்தபோது அந்தச் செல்வந்தன் ஒரு சொட்டுத் தண்ணீரும் தரவில்லை. அந்தச் செல்வந்தனுடைய மேசையிலிருந்து விழுகின்ற ரொட்டித்துண்டுகளைச் சாப்பிட்டே இலாசர் பசியாறி வந்தான். நாய்கள் எப்போதும் இலாசரின் புண்களை நக்கிக் கொண்டே இருக்கும். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக இற்று விழுந்து கொண்டிருந்த இலாசர் ஒருநாள் மாண்டு போனான். வானதூதர்கள் இலாசரை சொர்க்கத்தில் ஆபிரகாம் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

செல்வந்தனும் ஒரு நாள் இறந்து போனான். அவனோ பாதாளத்தில் வதைக்கப் படுவதற்காக எடுத்துக் கொண்டு போகப்பட்டான். அங்கே தீயின் நாக்குகளுக்கு அவன் தீனியானான். எரிந்து சாம்பலாகிவிட்டால் உடலுக்கு வந்த வேதனை ஒதுங்கிக் கொள்ளுகிறது. நரகம் அப்படி அல்ல. எரிவதும், தணிவதும், மீண்டும் எரிவதும் இடைவிடாத வேதனையும், பற்கடிப்பும் அங்கே இருந்து கொண்டே இருக்கும்.

தீப்பிழம்புகளுக்கு மத்தியில், வேதனைத் தீயில் வெந்து தணிந்து கொண்டிருந்த அந்தச் செல்வந்தன் தனது கண்களை ஏறெடுத்து வான மண்டலத்தைப் பார்த்தான். அங்கே ஆபிரகாமின் மடியில் பூமியில் ஏழையாகத் தன் வீட்டு வாசலில் எச்சில் பொறுக்கி வாழ்ந்து வந்த இலாசர் மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் இருக்கக் கண்டான். அப்போது அந்தச் செல்வந்தன் "தந்தையான ஆபிரகாமே! இலாசர் தனது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச் செய்வதற்காக அனுப்பியருளும்" என்று மன்றாடினான். மீண்டும் "தீப்பிழம்புகளின் வேதனை என்னை வாழவிடவும் இல்லை; சாகவிடவும் இல்லை" என்று வருந்தினான்.

அதற்கு ஆபிரகாம் "மகனே! நீ உன் வாழ்நாளில் அநேக நலன்களையே பெற்றாய்; அதே வேளையில் இலாசர் இன்னல்களையே பெற்றான். அதை நினைத்துப்பார். இலாசர் இப்போது ஆறுதலும், மகிழ்ச்சியும் அடை



கருத்து: பழங்கூர் மீரா. முருகன்



கிறான். நீயோ மிகுந்த வேதனைப் படுகிறாய். அன்றியும் உங்களுக்கும் எங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. இங்கிருந்து ஒருவர் இந்தப் பிளவைக் கடந்து அங்கே வரவும் இயலாது; அதைப் போல அங்கிருந்து ஒருவர் இந்தப் பிளவைக் கடந்து இங்கே வரவும் ஆகாது" என்றார்.

அப்போது மிகுந்த மன வேதனைக்கு ஆளான செல்வந்தன் "எங்கள் தந்தையான ஆபிரகாமே! எனது தந்தையின் வீட்டில் என்னோடு பிறந்தவர்கள் ஐந்து சகோதரர்கள் உண்டு. என்பாடுகள் என்னோடு போகட்டும்; அவர்களாவது இந்த இடத்திற்கு வராதபடி தங்கள் வழியை, வாழ்க்கையை நேர்மையாக்கிக் கொள்ளுமாறு ஏன் நீங்கள் இலாசரை அனுப்பக் கூடாது?" என்று கேட்டான்.

அதற்கு ஆபிரகாம் "உன் சகோதரர்கள் நல்ல வழியில் நடக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு வழிகாட்ட மோசேயும், இறைவாக்கினரும் உலகத்தில் உண்டு. அவர்களது போதனைகளுக்குச் செவிசாய்த்து உன் சகோதரர்கள் நல்வழியில் நடக்க வேண்டியது தானே!' என்றார்.

மறுமொழியாக நரகத்திலிருந்த செல்வந்தன் ஆபிரகாமை நோக்கி "அப்படி அல்ல, ஆபிரகாமே! இறந்த ஒருவர் மீண்டும் அவர்கள் மத்தியிலே போனால் அவர்கள் அவ்வாறு போகிறவரை நம்புவார்கள்" என்றான். அதற்கு ஆபிரகாம், "அவர்கள் மோசேக்கும், இறைவாக்கினருக்கும் செவிசாய்க்காவிட்டால் இறந்தவர்களிடத்திலிருந்து ஒருவர் எழுந்து வந்து நல்வழி காட்டுவதாக இருந்தாலும் நம்ப மாட்டார்கள்" என்றார்- என்று இயேசு பெருமான் கதையை முடித்தார்.

மரணத்திற்குப் பிறகு நடக்கப் போகிறவைகளைக் குறித்து இயேசு பெருமான் சொன்னதானது பரிசேயர்கள் சிலருக்கு மிகுந்த கலக்கத்தை விளைவித்தது. இயேசு அவர்களைப் பார்த்து "உங்கள் சகோதரர், சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்து கொள்ளுங்கள். அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள். ஒரே நாளில் அவர் ஏழுமுறை உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழுமுறையும் உங்களிடம் திரும்பி வந்து நான் மனம் மாறிவிட்டேன் என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள்" என்றார்.

அதற்கப்பால் அன்று இயேசு சொன்ன எதுவும் பரிசேயர்களின் காதுகளில் படவில்லை. அவர்களின் நினைவெல்லாம் நரகத்தில் கிடந்த செல்வந்தனைப் பற்றியே இருந்தது. எரிந்தது அந்தச் செல்வந்தன்; சாம்பலாகிப் போனவர்கள் இந்தப் பரிசேயர்கள்- அதாவது செல்வத்தில் மிதந்த பிரபுக்கள்.

(தொடரும்)

முப்பதுக்கு முப்பத்தியொன்று!

கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளிவந்தன. அப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொன்னானி எம்.ஈ.எஸ். கல்லூரியில் இரண்டாம் ஆண்டு (+2)மாணவர் ஒருவர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்ததாக அறிவிக்கப்பட்டது. அவருக்கு வந்த மார்க் லிஸ்டைப் பார்த்து அவரே திடுக்கிட்டுப் போனார். காரணம் கெமிஸ்ட்ரி தேர்வில் அவர் முப்பதுக்கு முப்பத்தியொரு மார்க் வாங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. முப்புதுக்கு முப்பதியொரு மார்க் எப்படி வரும் என்பது கோழிக்கோடு பல்கலைக் கழகத்திற்கே வெளிச்சம்.

– எஸ்.எஸ். மணி

●●●●●●●நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஈன்ஸ்டினிடம் ஒருமுறை சிறுமி ஒருத்தி தனக்கு கணிதம் கற்பிக்கச் சொல்லி கேட்டுக் கொண்டாள். விஞ்ஞானியும் விளையாட்டாக "எனக்கு ட்யூஷன் ஃபீஸ் எவ்வளவு தருவாய்?" என்றார். அந்தச் சிறுமி, "எனக்கு ஒரு டாலர் பாக்கெட் மணி வாரம் ஒருமுறை கிடைக்கும். அதிலிருந்து 75 சதம் வாரம் ஒரு முறை ஒரு மணி நேர ட்யூஷன் சம்பளமாகத் தருவேன்" என்றாள். விஞ்ஞானி ஈன்ஸ்டின் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். சிறுமியின் தந்தைக்கு ஒருநாள் இது தெரிய வந்தது. அவர் திடுக்கிட்டுப் போனார். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி குறைந்த சம்பளத்துக்குத் தன் பெண்ணுக்கு ட்யூஷன் எடுப்பது ரொம்பத் தவறு என்று ஈன்ஸ்டினிடம் கூறி, மன்னிப்புக் கோரினார். ஆனால் அவரோ "எனக்கு யாருமே தனது மொத்த வருமானத்தில் 75 சதம் சம்பளமாகக் கொடுத்ததில்லை. உங்கள் பெண்ணைத் தவிர. 'அவளைத் தொடர்ந்து அனுப்புங்கள்' என்றார்.

- ஆதாரம்: 'ஹிந்து'
தகவல்: ஜி. இந்திரா

வாத்தியார் வேலை!

'அமைதி' வேண்டி அருண்காவ்லி செய்த யக்ஞத்தை பிரபல தினசரி புகைப்படமாக வெளியிட்டது. ஹோம குண்டத்தின் அருகே பிரதானமாய் வீற்றிருந்த வேதியரைக் கண்டதும் 'அட நம்ம கோபு வாத்தியார்' எனப் பலரும் அலறினர்! முலுண்டு, பாண்டுப் பகுதிகளில் பரிச்சயமான இந்த முகத்தையும், வேதம் ஓதும் வேறு சிலரையும் போட்டோவில் கண்டு 'யு.... டூ...' எனப் புருவம் உயர்த்தினர் சிலர். இவர்களுக்கெல்லாம் 'அன்பளிப்'பாக கார், லட்சங்களில் சன்மானம் என்பன போன்ற புரளிகள் வேறு! கேட்டால், "அருண் காவ்லி வீட்டு யக்ஞம் என யார் கண்டது? ஏதோ வைதீக காரியம் என்றார்கள்; சென்றோம்!" என்கிறார்கள் இவர்கள், உள்ளூர நடுங்கிக் கொண்டே!

தேவை, கலைஞர்கள்!

தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார், ராஜேந்திர அகர்வால் என்ற துலே மாவட்டக்காரர்! "அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலையிடும்படி என்னைத் தூண்டினார் பழைய சிவசேனை நண்பர் புஜ்பல். நான்

மாறி வரும் மும்பை இளைஞிகள்!

மறுத்து விட்டதால், வேறு எவரையோ ஏவியிருக்கிறார்" என்பதாக போலீசில் ஒரு வாக்குமூலம் கொடுத்து, ப்ரெஸ் கான்ஃபரன்சும் ஏற்பாடு செய்துவிட்டார். ஆனால் பத்திரிகையாளர்கள் கேள்விக்கு முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்து, உளறிக் கொட்டி கிளறி மூடியிருக்கிறார். விடுவாரா புஜ்பல்? அகர்வால் மீது பதிவாகியிருக்கும் பதினொரு வழக்குகளைத் தோண்டித் துருவி எடுத்து, "இது சிவசேனையின் திட்டமிட்ட சதி! அகர்வாலும், அவர் பேச்சைப் பிரசுரித்த 'சாம்னா' பத்திரிகையும் எல்லா தினசரிகளிலும் பகிங்கிரமாக மன்னிப்புக் கோர வேண்டும். இல்லாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்!" என குதிக்கிறார். அரசியல் நாடகங்களை அரங் கேற்றுவதற்குக் கற்றுக் குட்டிகளைப் போட்டால் இப்படித் தான்! கொஞ்சம் அதிகம் செலவழித்து, நல்ல கலைஞர்களாகப் பிடிக்கக் கூடாதா?

ஆமை வேகப் புகார்!

பெண் பத்திரிகையாளர் வழக்கில் கைதானதையே "சிவசேனையின் சதி" என்கிறார் அருண் காவ்லி; அதற்குள் அவர் மீது பிரிதொரு பெண் - சந்திரப்பிரபா கஜ்ரே புதிய வழக்கைப் பதிவு செய்திருக்கிறார். பழைய 'தகடிசால்' (காவ்லியின் குடியிருப்பு) வாசியான இவர், முன்னொரு காலத்தில் காவ்லிக்கு சமைத்துப் போட்டு 'பிழைத்து'க் கொண்டிருந்தாராம். இவரது பெண்ணை தனக்கு மணமுடிக்குமாறு காவ்லி வற்புறுத்த, இவர் மறுத்து விடவே, "வீட்டை காலி செய்" என மிரட்டப்பட்டு, 1990ல் விரட்டப் பட்டாராம்! ஏழு வருடம் கழித்து, 'கறுகறுப் பாய்' புகார் கொடுப்பதற்குக் காரணம், 'பயம்' தானாம்! காவ்லி கைதான செய்தி கேட்டு, போலீஸ் மீது நம்பிக்கை துளிர்த்து, நீதி கிடைக்குமென வந்திருக்கிறாராம். "இது போலீஸ் ஜோடித்திருக்கும் வழக்கு"





[illegible]கிறார்கள் காவ்லி ஆதரவாளர்கள்.

விளம்பரப் பைத்தியங்கள்

ஒரு டீ.வி. தொடரை விளம்பரப்படுத்த இப்படி ஒரு யுக்தியா? 'ஜீ' டீ.வியில் வரும் ஹஸரதெய்ன்' தொடரில், ஹீரோ (ஹர்ஷ் சாயா)வின் இல்லற வாழ்க்கையில் 'இன் னொரு பெண்' குறுக்கிடுவதாகவும், அவளுக் காக மனைவியை இவர் துறப்பதாகவும் கதை. ஏற்கெனவே சிறு அலைகளைக் கிளப்பியிருக்கும் இந்தத் தொடர், ரசிகர்கள் மனத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்த வேண்டு மென்று, உண்மையிலேயே நடிகர் ஹர்ஷ் சாயாவுக்கும், அவரது நிஜ வாழ்க்கைத் துணைவியான ஷிஃபாலி சாயா (தெரு முனை' ஸ்வீட்டி)வுக்கும் ஏதோ 'கசமுசா' என்று பலமான வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். அப்பட்டமான இந்தப் பொய்யை சம்பந்தப்பட்டவர்களும் மறுக்கா மலிருப்பதற்கு அவர்களது "பப்ளிசிடி க்ரேஸ்"தான் காரணமாம்!

ஆடுவோமே....

மும்பையிலுள்ள இளம் பெண்கள், இப்போதெல்லாம் 'பப்'களுக்கோ 'டிஸ் கொதே'க்களுக்கோ பாய் - ஃப்ரெண்டுடன் போவது அவுட்-ஆஃப் பாஷன் ஆகிவிட்டது! நகரின் பிரபலமான J-49 ஆகட்டும். "கெட்டோ"வாகட்டும்... "இளைஞி-இளைஞி" ஜோடிகள்தான் ஏராளமாகக் காணப்படு கிறார்களாம்! "நட்புக்குப் பெண்கள்தான் உகந்தவர்கள்; ஆண்கள் வெறும் போர்! அவர்கள் தம்பட்டம் அடித்துக் கொள்வதை எல்லாம் யார் பொறுமையாகக் கேட்பது? பெண்களுடன்தான் இயல்பாக, செயற்கைப் பூச்சுகளில்லாமல் - முக்கியமாக பயமில்லாமல் பழக முடிகிறது!" என்கிறார்கள் இந்தப் பெண்கள்.

மும்பையிலிருந்து : **ஜெயஸ்ரீ ராஜ்**

உயிர் நாடியை இறுக்கட்டலாமா?

கல்கி கன்ஸல்டன்ஸி:

மூன்று வருடங்களுக்கு முன்னால் தினசரிகளைப் பிரித்தால், புதுப்புது கம்பெனிகள் பங்குச் சந்தையில் இறங்குவதைப் பார்க்க முடிந்தது. விற்பனைக்கு வந்த பங்குகளை வாங்க பொதுமக்கள் ஆவலுடன் காத்திருந்தனர். ஸ்டாக் மார்க்கெட், கல்யாணக் களையுடன் கலகலவென்று இருந்தது. இன்று நேர் விரோதமான நிலை! கடந்த ஜூன் மாதத்தில் ஒரே ஒரு நிறுவனம்தான் பிரதான மார்க்கெட்டில் புதிதாக நுழைந்தது.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட போது நல்ல மதிப்புக்கு விற்ற பல நிறுவனங்களின் பங்குகள் இன்று அடக்க விலையைவிட குறைந்தே விலை போகின்றன! முதலீட்டாளர்கள் மட்டுமின்றி நிறுவனங்களும் நஷ்டப்பட்டுப் போயிருக்கின்றன.

பங்குச் சந்தை நடவடிக்கைகளைப் பார்வையிட ஆரம்பிக்கப்பட்ட SEBI (செபி) அமைப்பை எல்லோரும் குறை கூறுகிறார்கள். சிறு முதலீட்டாளர்களின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை; அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்பது பெரிய புகார்.

செகன்டரி மார்க்கெட் எனப்படும் இரண்டாம் நிலை பங்குச் சந்தையின் நிலை பரவாயில்லை. மியூசுவல் ஃபண்டுகளும் அயல் நாட்டு முதலீட்டாளர்களும் இந்தச் சந்தையில் ஆர்வம் காண்பித்து வந்ததால் சென்செக்ஸ் குறியீடு கூட சற்று வேகமாக உயர்ந்தது. ஆனால், இந்தக் குறியீடு சுமார் முப்பது முன்னணி நிறுவனங்களுடைய பங்குகளின் விலையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்பதை நாம் மறக்கலாகாது. மற்ற நிறுவனங்களுடைய பங்குகள் அப்படியொன்றும் மகிழ்ச்சி தரும்படியாக விலை போகவில்லை என்பதே கசப்பான உண்மை. எனவே பங்கு மார்க்கெட்டின் ஒட்டு மொத்த நிலை இன்னமும் மிக மந்தமாகவே இருக்கிறது.

சிறு முதலீட்டாளர்களைப் பாதுகாக்க 'செபி' அமைத்தது போதாதென்று தேசிய ஸ்டாக் எக்ஸ்சேஞ் என்பதாக அனைத்திந்திய பங்குச் சந்தையையும் நிறுவியது அரசாங்கம். பல்வேறு நகரங்களிலுள்ள பங்குச் சந்தைகள் கம்ப்யூட்டர் மூலம் இணைக்கப்பட்டு, 'ஆன் லைன்' வியாபாரம் நடைபெற வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த நவீனமயமாக்கல் ஒரு புறம் என்றால், இன்னொரு பக்கம் ஏமாற்றும் நடைபெறுகிறது. போலி பங்குப் பத்திரங்கள் பரவலாகி வருகின்றன!

இதனால் முதலீட்டாளர்கள் நஷ்டப்படக் கூடாது என்ற நோக்கத்தில், அந்தப் பத்திரங்களுக்கு புரோக்கர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. தேசிய பங்குச் சந்தையில் உறுப்பினர்களாக இருக்கும் புரோக்கர்கள் எல்லோரும் இந்த உத்தரவாதம் தர வேண்டும்; போலி பத்திரங்களால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும்...

இதை புரோக்கர்கள் ஏற்பார்களா...? கடுமையாக ஆட்சேபித்தார்கள். வேறு வழியின்றி தேசிய ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் தனது நிபந்தனையை வாபஸ் வாங்கி விட்டது!

பழையபடி சிறு முதலீட்டாளர்களின் நிலை பாதுகாப்பற்றதாகி விட்டது. இதனால் பங்குச் சந்தை மேலும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது.

என்னதான் வங்கிகளும் பெரிய முதலீட்டாளர்களும் இருந்தாலும் சிறு முதலீட்டாளர்களின் ஆதரவுதான் பங்குச் சந்தையின் ஜீவநாடி. இதை மறந்து விடாமல், நிதி அமைச்சகம் உடனடியாக இவ்விஷயத்தில் தலையிட்டு நிலைமையைச் சீர்செய்வது நல்லது.

— வி. கோபாலன்

மகத்தான காவியங்கள்
அவருக்கு பொக்கிஷம் போல...

டெபாசிட்டுகளை வரவேற்கிறோம்



... எக்ஸ்பிரஸ் ஃபைனான்ஷியல் எக்ஸ்சேஞ்சும்தான்.

(Hire Purchase Finance Company) ... (Non banking Finance Company) ... (984/BG (TN) HP (E) 15 ... 48.46% ... (Capital Adequacy Ratio) ... RBI ...

- Authorised Dealer **American Express Bank TRS**
- Authorised Dealer Mashreq Bank Visa international
- FFMC Licensee of **Reserve Bank of India**
- **SEBI** Registered Merchant Banker

EXPRESS
FINANCIAL EXCHANGE LTD.

எக்ஸ்பிரஸ் ஃபைனான்சியல் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட்.
பதிவு அலுவலகம்: 9, அட்லேப்ஸ் டவர், தெற்கு போக் சாலை, சென்னை-600 017. போன்: 4340325, 4340329, ஃபாக்ஸ்: 4341403,



• மொத்தமாக அனைவரும்...

சினிமாவும், போதை மருந்துகளும், ஈவ் டீசிங்கும் மட்டுமே இளைஞர்களின் பொழுது போக்கு போலும் என்று நம்பிக்கை இழந்திருக்கும் சமயத்தில், நட்சத்திரங்களாக மின்னும் இருபத்தேழு பேரைச் சென்னையில், கொத்தாகச் சந்தித்தோம்!

சமீபத்தில் சியாட்டில் நகர், கிங் கவுண்ட்டியில் உள்ள 'காஸ்காடியாக்வெஸ்ட்' என்ற தொண்டு நிறுவனத்தில், பயிற்சி பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள் தீபாவும், பிரவீணும்.

"இந்தியாவிலிருந்து நாங்கள் இரண்டு பேர். பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கென்யா, ஜப்பான், சிலி, மெக்ஸிகோ என்று பல நாடுகளிலிருந்தும் வந்த இளைஞர்கள்-இளைஞிகள். எல்லாருமே சுற்றுச் சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்டவர்கள். ஒவ்வொரு நாட்டுக்காரருக்கும் ஓர் அமெரிக்க 'ஹோஸ்ட்'. அவர்கள் வீட்டிலேயே இருந்து அவர்கள் வாழ்க்கை முறையைத் தெரிந்து கொண்டோம். காலை ஏழு மணிக்குக் களத்தில் இறங்கினால், மாலை நாலு மணி வரை விறுவிறுப்பான வேலை!" என்றார் தீபா.

"நான் சியாட்டில் போனபோது நல்ல மழை. இவர்கள் எங்கே தோட்டத்தில் வேலை செய்யப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டே போனேன். தூக்கிவாரிப் போட்டது எனக்கு. ரெயின்கோட், தொப்பி அணிந்து, மண்வெட்டி சகிதம் தீபாவும் அவள் நண்பர்களும் வேலை செய்து கொண்டிருந்தார்கள்!"



இதோ, இவர்கள் நம்பிக்கை தருகிறார்கள்...

என்றார் 'எக்ஸ்நோரா' செயலர் வி.என். சுப்பிரமணியம். இவர் தான் இந்த இளைஞர்கள் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு செய்தவர்.

"ஒரு குரூப்புக்குப் பத்துப் பேர். அதற்கு ஒரு லீடர். அடுத்த நாள் என்ன வேலை, அடுத்த வாரம் என்ன வேலை என்று அட்வான்சாக அட்டவணை போட்டுக் கொண்டுவிடுவோம். இது வருடா வருடம் நடக்கிற ப்ராஜக்ட். பல நாடுகளிலிருந்தும் வருகிற எங்களைப் போன்றவர்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பணிகளோடு, மொழி-கலாசாரப் பரிமாற்றத்தையும், பிரிக்க முடியாத நட்பையும் கொண்டு வந்து விடுகிறோம்!"- தீபா.

"என்னுடன் தங்கியிருந்த பாகிஸ்தான் இளைஞர் தாரீக் கானுடன் எப்படிடாப்பா இருக்கப் போகிறோம் என்று முதல் நாள் தோன்றிற்று. ஆனால் கடைசி நாள் பிரியும்போது, இந்தியா-பாகிஸ்தானிலிருந்து பத்துப் பத்துப் பேர் இது மாதிரி பரிவர்த்தனை செய்வது என்று தீர்மானிக்கிற அளவுக்கு நட்பு இறுகிவிட்டது. அரசியல்வாதிகளும்,



• தீபா



• மாம்பலம் கால்வாய்ச் சீரமைப்பில்...

மதவாதிகளும்தான் நம்மைப் பிரிக்கிறார்கள். தனிமனித நட்புகள் ஆழமாக இறுகி, நம்மைப் பிணைத்து விடுகின்றன!" என்றார் பிரவீண்.

இதே மாதிரி, இந்தியாவில் பல மாநிலங்களிலும் இருந்து, இருபத்தைந்து வயதுக்குட்பட்ட தொண்டு ஆர்வம் உள்ள இளைஞர்- இளைஞிகளை, சென்னைக்கு அழைத்து வந்து இந்திய ஒருமைப்பாட்டுச் சிப்பாய்கள் (National Integration Corps) என்ற பெயர் சூட்டி, ஒரு மாதத்துக்குப் பயிற்சி அளிப்பது என்று, சியாட்டில் போய் வந்த வி.என்.எஸ். எடுத்த முயற்சிக்கு 'யு.எஸ்.எய்ட்' கை கொடுத்தது.

இளைஞர்களும் இளைஞிகளும்

குழுக்களாகப் பிரிந்து, களத்தில் இறங்கி விட்டார்கள்:

● கோயம்பேடு மார்க்கெட்டில், குப்பை கூளங்களிலிருந்து 'வெர்மி கம்போஸ்டிங்' தயாரிப்புக்காகத் திருவேற்காட்டில் பயிற்சி.

● கொசு உற்பத்திக் கேந்திரமான விஜயராக வாச்சாரியார் சாலை-தியாகராயர் சாலையி லுள்ள மாம்பலம் கால்வாயில் சி.எம்.டி.ஏ மற்றும் பகுதி வாழ் மக்கள் ஆதரவுடன் சுத்திகரிப்பு.

● பிச்சாவரம் சதுப்பு நிலக் காட்டில் (டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளை உதவியோடு) ஓர் ஆய்வு.

● பழவேற்காட்டு ஏரியைச் சார்ந்த பகுதி களில் உள்ள ஏராளமான பிரச்னைகள் (பின்னே வருகின்றன!)

● எண்ணூர், அடையாறு முகத்துவாரங் களில், பழையபடி பறவைகள் வந்து இளைப் பாறும் அளவுக்கு, அழுக்கு நீக்கிச் சுத்தம் பண்ணுவது.

● மேற்படி பகுதிகளில் எல்லாம் உள்ள உள்ளூர்வாசிகளுடன் பேசி ஒத்துழைப்புப் பெற்று, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத் திருக்க நைச்சியமான போதனை.

– இத்தனையிலும், வாரம் ஆறு நாட்கள் ஓயாமல் உழைத்திருக்கிறார்கள் இவர்கள். பெயர்ப் பட்டியல் மட்டுமே ஒரு பாரா வரும்.

ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு நிலம் கொடுத்தவர்கள், பழ வேற்காடு ஏரியை ஒட்டிய பல கிராமவாசிகள். அடிமாட்டு விலைக்கு நிலத்தை எடுத்துக் கொண்டு, வேலை எதுவும் கொடுக்காமல், அம்போ என்று விட்டுவிட்டார்கள், அதி காரிகள். நிலம் பெயர்ந்த இந்த மக்களின் பிரச்னைகள் ஏராளம்.

குஷ்பு முதலான சினிமா நடிகைகள்–நடிகர்கள், அரசியல்வாதிகளின் நவீன இறால் பண்ணைகள் படுத்தும் பாடு. எண்ணூர் அனல்மின் நிலையம் அமைக்கப்பட இருப்ப தால் வரும் அபாயங்கள்; துறைமுகம் உருவாக இருப்பதால் எழும் பாதிப்புகள்; குடி தண்ணீருக்கு அலையும் அலைச்சல். (துறை முகம் துவங்குமுன், சுற்றுச் சூழல் ஆய்வு அறிக்கை ஒன்று, அங்கு வாழும் பகுதி மக்களிடையே பேசி, தயாரிக்க வேண்டுமாம். ஆனால் அப்படிச் செய்யாமலே 'என்வயர்ன் மென்ட் இம்பாக்ட் அசெஸ்மென்ட்' அறிக்கை அனுப்பி விட்டதாகப் பதிவேடு களில் காண்பித்திருக்கிறார்களாம்!)

மாம்பலம் கால்வாய்ச் சீரமைப்பில், பகுதி மக்களின் முழு ஒத்துழைப்போடு, வேப்பெண் ணெய்-பொங்கம் எண்ணெய் ஸ்ப்ரே செய்து, கொசு உற்பத்தியைத் தடுத்திருக்கிறார்கள்.

"திருப்பதியிலும் கால்வாய்களில் இதே மாதிரி செய்யப் போகிறோம்!" என்றார் ஸ்ரீகாந்த் ரெட்டி. "ஒரு மாதப் பயிற்சியில் நிறையக் கற்றுக் கொண்டு வா!' என்று அனுப்பி வைத் தாராம் இவரது பேராசிரியர்.

எக்ஸ்நோராவுக்குத் துணையாக 'க்ரீனியோ' (சென்டர் ஃபார் ரீசர்ச் ஆன் நியூ இன்டர்நேஷனல் இகனாமிக் ஆர்டர்) மற்றும் உலக வனவிலங்கு நிதியம் முதலியவையும், இவர்களது முயற்சிகளில் ஆர்வம் காண்பித்து, ஆலோசனை வழங்கியிருக்கின்றன.

பூடான் எல்லையிலிருக்கும் அலிப்பூர் துவாராவிலிருந்து வந்திருக்கும் கொல்லோல் டேயும், தாலுக்தாரும், தாங்கள் இங்கே கற்றுக் கொண்டதை, தங்கள் ஊருக்குப் போய்ச் செயலில் காண்பிக்கப் போவதாகச் சொன் னார்கள். ("அங்கே அரசியல்வாதிகளின் மரம் வெட்டிப் பணம் பண்ணும் தொழிலை எப்படி நிறுத்துவது என்பது இன்னொரு பிரச்னை!")

திருவண்ணாமலையில், கம்போஸ்டிங் உரத் தயாரிப்பில் ஈடுபடப் போவதாகக் குறிப்பிட்டார் பிரவீண்குமார். ஒரு நாளைக்கு ஒரு டன் தேறுமாம். "யாத்ரீகர்கள் சராசரி யாக மாதத்துக்கு ஒரு லட்சம் பேர் வந்து போகிறார்கள். மலையில் மரங்கள் நடமுடி யாமல் இருந்தது. இப்போது 'எக்ஸ்நோரா' மூலம் அங்கே மைதா மாவில் விதைகளை பேஸ்ட் செய்து அங்கங்கே போட்டு விட் டால், விதை புதைந்து மரம் வளர வாய்ப்பு இருப்பதைத் தெரிந்து கொண்டேன். மரங்கள் இல்லை என்றால் அத்தனை மக்கள் நட மாட்டத்துக்கு, வெப்பம் அநியாயமாய் இருக் கும்!"

கொச்சி 'எக்ஸ்நோரா' கிளை வழியாக, பல்வேறு முயற்சிகளில் ஈடுபடப் போவதாகக் கூறினார் பாலேந்திரன்.

நாகப்பட்டினத்தில் 3000 பள்ளி மாண வர்கள் 'எக்ஸ்நோரா' இயக்கத்தில் ஈடுபட் டிருப்பதாகச் சொன்னார் பால்ராஜ். "அங்கே இனி நிறையவே பணி செய்ய முடியும். ஏராள மான உற்சாகம் வந்து விட்டது!"

இவர்களுக்குள் மொழி தடையாக இருந் ததில்லையாம். பிரச்னைகளும் எழுந்ததில்லை. நிஜமான தேசிய ஒற்றுமை இயக்கமாக இது இயங்குவது சாத்தியமே என்கிறார்கள் ஒவ் வொருவரும்.

பயிற்சியை ஆரம்பித்து வைத்த முதல் நாள் நிகழ்ச்சிக்கு வந்த மூத்த தலைவர் சி.எஸ்., "இந்தியாவின் இளைஞர் மீது எனக்கு நம்பிக்கை பிறக்கிறது!" என்று உணர்ச்சி வசப் பட்டுச் சொன்னார்!

— சாருகேசி



• 'வெற்றிப் படிகள்' வெளியீட்டின் போது...

ஒரு முறை வசிஷ்டரும் விசுவாமித்திரரும் தேவலோகம் போனார்கள். அங்கே வசிஷ்டருக்கு மட்டும் அமர இருக்கை கிடைத்தது. ஏன் இரண்டு இருக்கைகள் கிடைக்கவில்லை என்று பகவானைக் கேட்டார்கள். பகவான் சொன்னார்: ''நீங்கள் இருவரும் பூவுலகம் சென்று நூறு பேருக்கு அன்னதானம் செய்து விட்டு வாருங்கள். ஆனால் ஒரு நிபந்தனை. அந்த நூறு பேரும் உங்களை விட அறிவில் தாழ்ந்தவர்களாக இருக்க வேண்டும்.''

உடனே இருவரும் பூவுலகம் வந்தார்கள். விசுவாமித்திரரால் உடனே நூறு பேருக்கு அன்னமிட முடிந்தது. அவர் வசிஷ்டரிடம் போன போது, அங்கே எதுவுமே நடைபெறவில்லை. விவரம் கேட்டார் விசுவாமித்திரர். ''என்னை விட அறிவில் குறைந்தவர் யாருமே இல்லை'' என்றார் வசிஷ்டர்.

சிரித்துக் கொண்ட விசுவாமித்திரர் வயலில் உழுது கொண்டிருந்த ஒருவனைக் காட்டி, ''இவன் உங்களை விட மேம்பட்டவனா? இவனுக்கு வேதம் தெரியுமா? ஞானம் உண்டா? இவனைப் போல் நூறு பேரைப் பிடிக்க முடியாதா?'' என்று கேட்டார்.

''சற்றுப் பொறுங்கள் சொல்கிறேன்'' என்றார் வசிஷ்டர். நண்பகல் தாண்டியது. கஞ்சிக் கலயத்தோடு அவன் மனைவி வந்தாள். உழுவதை நிறுத்திவிட்டு அவன் சாப்பிடப் போனான். மனைவி உணவு படைக்க ஏற்பாடு செய்தாள். அந்தப் பாமரன் கேட்டான் 'வீட்டில் அம்மாவும் அப்பாவும் சாப்பிட்டார்களா?' என்று. 'இல்லை. வயசானவங்கதானே, பெறவு சாப்பிடட்டும்' என்றாள் அந்தப் பெண். அவனுக்குக் கோபம் மூண்டது. 'இப்படிப் பெற்றவர்களைப் பட்டினி போட்டுவிட்டு நான் சாப்பிட்டால் அது பெரும் பாவம்' என்று உணவு கொள்ள மறுத்தான்.

வசிஷ்டர் கேட்டார், ''இந்தப் பாமரன் வேதம் படிக்காதவன். அறிவற்றவன் என்று எப்படிச் சொல்வீர்கள்?''

விசுவாமித்திரருக்குக் கண் திறந்தது. தேவருலகில் தமக்கு ஆசனம் ஏன் கிடைக்கவில்லை என்கிற காரணமும் புரிந்தது.

— ஏ.வி.எம் அறக்கட்டளை சார்பாகக்

இன்று எந்தத் தலைவரும் இல்லையே!

கம்பன் கழகம் நடத்திய இலக்கியச் சொற் பொழிவில் திருமதி இளம்பிறை மணிமாறன் பேசியது....

''....இந்த பாரத தேசத்தில் பின்பற்றத் தக்க உத்தமமான தலைவர்கள் இருந்தார்கள். இந்த ஐம்பது ஆண்டுகளில் ஒருவர் பின் ஒருவராய் அவ்வளவு பேரையும் இழந்து விட்டோம். அந்த இடங்கள் வெற்றிடங்களாகவே விளங்குகின்றன. வழிகாட்டி எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு போகிற உத்தமத் தலைவர்கள் என்று சுட்டிக் காட்ட யாருமே இல்லை என்கிற சூனியம் அச்சுறுத்தும் வகையில் வியாபித்திருக்கிறது. ஒவ்வொரு குழுவும் தனக்கு வேண்டிய ஒரு தலைமையின் அணி என்று நம்முடைய ஆற்றல் துண்டு துண்டாகச் சிதறிக் கிடக்கிறது. இப்படி ஆக்க பூர்வமாக விளங்கி வழிநடத்த வேண்டிய சக்திகள் பிளவு படுவது வேதனையளிக்கிறது. தேசிய அளவில் இதுதான் உகந்தது என்று அடித்துச் சொல்ல, ராஜாஜியைப் போல் யார் இனி தோன்றப் போகிறார்கள்?'' என்று வெளியிடப்பட்ட நூலிலிருந்தே ஒரு பகுதியைப் படித்துக் காண்பித்தார் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம்.

தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடி மகன் பேசும்போது ஓர் இடத்தில் ஒரு 'கப்' காப்பி என்று 'தவறி' வந்துவிட்டது. 'கோப்பை' என்று உடனே சமாளித்தார்!

— வானதி திருநாவுக்கரசின் தன் வரலாற்று நூலான 'வெற்றிப் படிகள்' நூல் வெளியீட்டு விழாவின் போது....

— சுப்ர. பாலன்

படம் : உத்ரா



அனகோண்டா II

ஆப்ரிக்கக் காடுகளின் இயற்கை அழகுகளுக்குக் கேட்பானேன். ஆனால் அதையெல்லாம் ரசிக்க விடாமல் தடுக்கிறது அனகோண்டா! 'அனகோண்டா' என்பது ஐம்பதடி நீளம் கொண்ட உலகின் மிகப் பெரிய மலைப்பாம்பு!

ஆப்ரிக்க இயற்கைக் காட்சிகளைப் படமெடுக்கும் நோக்கத்தில் ஆறு பேர் அடங்கிய குழு ஒன்று தனிக் கப்பலில் கிளம்புகிறது. நடுக்கடலில் 'மாட்டிக் கொண்ட' ஒருவன் உதவி கேட்க, அவனையும் அழைத்துக் கொள்கிறார்கள் – விபரீதம் தொடங்குகிறது. அனகோண்டாவை உயிரோடு பிடித்துப் பணமும் பெயரும் பெறத் திட்டமிடுகிறான் உதவி கேட்டவன். குறுக்கு வழியில் போகலாம் என்று அனகோண்டா காணப்படும் இடத்துக்கு அழைத்துச் சென்று விடுகிறான். ஒவ்வொருவராக பாம்புக்கு பலியாக, கடைசியில் மூன்று பேர் மட்டும் தப்புகிறார்கள்.

சும்மா நீர்ப்பரப்பைக் காட்டினாலும் சரி, சருகுகளின் ஓசை ஒலித்தாலும் சரி, ரசிகர்களின் ரத்த அழுத்தம் ஏகத்துக்கு எகிறுகிறது. சில வினாடிகளே திரையில் தோன்றினாலும் பரந்த புல்வெளிப் பரப்பு முழுவதும் ஆடி அசையும் காட்சி (உள்ளே அனகோண்டாவின் நடமாட்டம்!) திகில். குன்றின் உயரமான பகுதியில் அருவியின் பின்னணியில் நிற்கும் ஒருவனைத் தாக்க அனகோண்டா தயாராகிறது. பாம்பிடம் நெரிபட்டுச் சாவதை விட கீழே குதித்து உயிரை விடலாம் என்று தீர்மானிக்கிறான் அவன். குதித்துக் கொண்டிருக்கும்போதே அனகோண்டா அவனை விட வேகமாக விசையுடன் கீழிறங்கி அவனைப் பிடித்துச் சுழற்றி மேலே இழுத்துச் செல்லும் காட்சியில் நெஞ்சில் கத்தியைச் செருகிய உணர்வு. க்ளைமாக்ஸில் மிக உயர்ந்த புகைபோக்கியை வெடிவைத்துத் தகர்க்க, அதனுள்ளே பாய்ந்து வந்து கொண்டிருக்கும் அனகோண்டா உடலெல்லாம் எரியும் நிலையிலும் கதாநாயகியைத் துரத்தும் காட்சியும் அப்படித்தான்.

மலைப்பாம்பு என்றால் மந்தமானது என நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அனகோண்டாவின் மின்னல்வேக சேஸ்கள் கிலியை ஏற்படுத்தும். கிராஃபிக்ஸ் வேலைதான் என்றாலும் உண்மையில் நடப்பது போன்றே இருக்கிறது.

தியேட்டரிலிருந்து வெளியே வருபவர்களின் முகங்கள் வெளிறிப் போய் திருப்தியுடன் காட்சி தருகின்றன!

ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 208/-; Overseas : Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 104/-; Overseas : Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. ... Registered No. ... Licensed to
post without prepayment under PMG's Licence No. TN. MS. (S) 161 * Registered as a Newspaper in Srilanka